பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli
26 ஜூன் - 02 ஜூலை 2019
வாரஇதழ்

மருத்துவத்துறையில்
## அனல் பறக்கும் 'ஈகோ' யுத்தம்



# கல்முனைக் களேபரம்
## செருப்பு சுமந்திரனுக்கா? கூட்டமைப்புக்கா?

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# பிக்பாஸும் ஈழ வியாபாரமும்




● கானா பிரபா

ஈழப் பிரச்சனையை வைத்து உடனடி இலாபமடைந்தவர்களில் விஜய் தொலைக்காட்சியினரும் ஒரு தரப்பினர்.

ஈழத்துக் கலை, இலக்கிய முயற்சிகளின் வரலாறும், அதன் செழுமையும் தனித்துவமானது. இதில் இசைத் துறையை எடுத்துக் கொண்டால் சாஸ்திரிய இசையில் இருந்து மெல்லிசை, துள்ளிசை, போர்க்காலப் பாடல்கள் என்று எக்காலமும் இவற்றின் வளமையைக் காட்ட வல்ல அரிய பல கலைஞர்கள் தோன்றியிருக்கிறார்கள்.

ஆனால் ஈழத்துக் கலை முயற்சிகள் பெரியளவில் வெளியே தெரியாமைக்கு முதற்காரணம் இந்தக் கலைஞர்கள் பலர் தம்முடைய முழு நேரத் தொழிலாகவோ, வாழ்க்கையாகவோ அமைத்துக் கொள்ள முடியாத வர்த்தக சூழல் அங்கு இல்லாமையே. காலாகாலமாக தென்னிந்திய இசையில் மூழ்கித் திளைத்தவர்கள் பலருக்குப் புதிய பல முயற்சிகளைத் தேடி நுகரும் பழக்கமில்லை.

இன்றிருக்கிற தலைமுறைக்கு ஒரு "சுராங்கனி" ஏ.ஈ.மனோகரனையோ, "சின்ன மாமியே" நித்தி கனகரட்ணத்தையோ தெரியுமளவுக்கு எஸ்.கே.பரராஜசிங்கத்தையோ, எம்.ஏ.குலசீலநாதனையோ தெரிய வாய்ப்பில்லாத சூழலில் இருக்கிறார்கள்.

இன்றைக்கு ஈழத்து இசைத் துறையில் திறமையானவர்கள் பலர் முட்டி மோதித் தம்மை வெளியே கொண்டு வரப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மறு முனையில் பின் கதவால் வந்து புகழ் வெளிச்சம் பெறத் துடிப்பவர் பின்னால் தான் நம் கவனமெல்லாம். "சூப்பர் சிங்கர்" புகழ் என்ற ஒற்றைப் பட்டத்தைப் பெறுவதற்காக ஈழப் பிரச்சனையைத் "தும்பு முட்டாஸ்" கடைப் பண்டமாக்கி இலாபம் தேடுகிறார்கள்.

உண்மையாக ஈழப் பிரச்சனையின் நியாய தர்மங்களைப் பேசுபவர்களுக்கு இந்தத் தமிழக வர்த்தக ஊடகங்கள் ஒரு போதும் வாய்ப்பு வழங்காது.

"விடை கொடு எங்கள் நாடே", "தோல்வி நிலையென நினைத்தால்" பாடல்களைப் போட்டு கிளிசரின் கண்ணீரைப் பெருக்கி பார்வையாளனையும் அழ வைத்தால் அடுத்தது "சூப்பர் சிங்கர் பாடகரின் ஐரோப்பிய சுற்றுலா" தான்.

அங்கே "சரிகமப" நிகழ்ச்சியில் கூடத் தான் ஒரு திறமையான ஈழத்து இளைஞன் ஸ்ரீ ஜெயந்தன் கலந்து கொண்டிருக்கிறார். இதுவரை எந்தக் கவனிப்புமில்லை.

இதோ இப்போது பிக் பாஸ் இலும் லொஸ்லியா, தர்சன் என்ற இரண்டு ஈழத்துக் குஞ்சு குருமன்கள் இறங்கி விட்டார்கள்.

தன்னுடைய 'டிவிடி' வியாபாரம் படுத்ததற்கு ஈழத் தமிழர்களே காரணம் என்றும் இவர்களின் போராட்டத்துக்காக நான் குரல் கொடுத்தேன்? இவர்களைப் பார்த்துக் காறித் துப்ப வேண்டும் என்று அறச் சீற்றம் கொண்ட இயக்குநர் சேரன் கூட இந்த அவையில் இருக்கிறாராம்.

பார்ப்போம் என்ன நடக்கிறதென்று.

ஈழப் பிரச்சினை என்பது உங்கள் கலையை விளம்பரப்படுத்தும் கடைச் சரக்கல்ல என்பதை இந்தச் சூழலில் இனி வரப் போகும் எல்லோருக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் சொல்லி வைக்க வேண்டும். இப்படியானவர்களை ஒரு போதும் நம் தலையில் வைத்துக் கொண்டாடக் கூடாது என்பதே ஈழத்துக் கலை முயற்சிகளில் வேட்கை கொண்ட என் போன்ற கடைக் கோடி ரசிகனின் ஆதங்கம் கூட.

# இவர்களைத் தெரியுமா?

● பாலன் தோழர்

இப்போது பிக்பாஸ் நிகழ்ச்சியில் உள்வாங்கப்பட்ட, ஈழத்தைச் சேர்ந்த தர்ஷன் மற்றும் லொஸ்லியாவை தெரிந்தவர்களுக்கு பாஸ்கரன், ரமேஷ் மற்றும் செல்வம் ஆகியோரை தெரியுமா?

தர்ஷன், லொஸ்லியா, பாஸ்கரன், ரமேஷ், செல்வம் அனைவரும் ஈழத் தமிழர்கள்.

இதில் தர்ஷன், லொஸ்லியா இருவரும் பிக்பாஸ் நிகழ்வில் கலந்துகொள்வதால் விஜய் ரிவி மூலம் பல கோடி தமிழர்கள் ஜூன் 23 முதல் அறிந்துள்ளனர்.

இந்த இருவரையும் அறிந்துள்ள பல தமிழர்களுக்கு பாஸ்கரன், ரமேஷ், செல்வம் ஆகியோர் யார் என்று தெரிந்திருக்கவில்லை.

ஆனால் அவர்களை வைகோவுக்குத் தெரிந்திருக்கிறது. திருச்சி சிறப்புமுகாமில் இந்த மூவரும் கடந்த ஐந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது.

தெரிந்தது மட்டுமன்றி இந்த அப்பாவி ஈழ அகதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறும் அவர் அறிக்கை விட்டிருக்கிறார்.

வைகோ இப்போது எம்.பி இல்லை. அவர் கட்சி ஆட்சியிலும் இல்லை. ஆனாலும் அவர் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக அறிக்கை விட்டிருக்கிறார்.

இப்போது தேர்தல் இல்லை. இருந்தாலும் ஈழத் தமிழர் பற்றி பேசுவதால் அது வைகோவுக்குப் பயன் தரப்போவதில்லை. இருந்தாலும் அவர் அறிக்கை விட்டிருக்கிறார்.

அதுவும் 2008ம் ஆண்டு ஈழத் தமிழர்களுக்காக பேசியதற்காக அவர்மீது போடப்பட்ட தேசவிரோத வழக்கு விசாரணை ஒருபுறம் நடந்துகொண்டிருக்க மறுபுறம் அது பற்றி கவலைப்படாமல் மீண்டும் ஈழத் தமிழர்களுக்காக அறிக்கை விட்டிருக்கிறார்.

அண்மையில் ஈழத்தில் இருந்து தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா தமிழகம் வந்து ஸ்டாலினைச் சந்தித்தார்.

இதே ஸ்டாலினை ஈழத்துக்கு வரும்படி முன்னாள் மாகாணசபை முதல்வர் விக்னேஸ்வரன் அழைத்திருக்கிறார்.



இந்த ஈழத் தமிழ் தலைவர்களும் சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டிருக்கும் அகதிகளை விடுதலை செய்யுமாறு இந்திய அரசிடம் கோரவில்லை.

அல்லது, இந்திய அரசை வலியுறுத்தும்படி தாங்கள் சந்தித்த ஸ்டாலினிடமும் கோரவில்லை.

ஆனால் யார் கேட்காமலும், எந்தவித பயனும் எதிர் பாராமல் வைகோ அறிக்கை விட்டிருக்கிறார். "இலங்கை அரசின் இனவெறித்தாக்குதல்களில் இருந்து தப்பி, உயிர் பிழைப்பதற்காகத் தமிழகத்திற்கு வந்து அடைக்கலம் புகுந்த ஈழத்தமிழர்களை, இந்திய அரசு பல வழிகளிலும் அடக்கி, ஒடுக்கி வருகின்றது.

தமிழ்நாட்டில் சந்தேக வழக்குகளில் கைதாகின்ற இளைஞர்களை விசாரணைக்குப் பிண்னர் விடுவிப்பது வழக்கம். ஆனால், ஈழத்தமிழ் இளைஞர்கள் என்றாலே, அவர்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்து, எந்த வித விசாரணையும் இன்றி, செங்கல்பட்டில் இருந்த சிறப்பு முகாமிற்குள் ஆண்டுக்கணக்கில் பூட்டி வைத்தனர். இப்போது அந்த முகாமை, திருச்சி மத்திய சிறைக்கு இடம் மாற்றி, அங்கே அடைத்து வைத்து இருக்கின்றார்கள்.

எந்தவிதமான குற்றச்சாட்டுப் பதிவும் இல்லாமல், வழக்கு விசாரணையும் இல்லாமல், எப்போது விடுதலை என்பதும் தெரியாமல், இளமைக் காலம் முழுமையும் சிறைக்கு உள்ளேயே அடைபட்டுக் கிடந்த இளைஞர்கள், தங்களை விடுவிக்கக் கோரி எத்தனையோ போராட்டங்களை நடத்தி இருக்கின்றனர். கடந்த சில நாட்களாக, பாஸ்கரன், ரமேஷ், செல்வம் ஆகிய மூன்று தமிழர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அவர்களது நியாயமான கோரிக்கையைத் தமிழக அரசு ஏற்காமல், புறக்கணித்து வருகின்றது. இந்திய அரசு, ஈழத்தமிழர்களைக் குற்றப் பரம்பரையினரைப் போல நடத்தி வருகின்றது. இது மனித உரிமைகளுக்கு எதிரானது.

நான் பல அகதி முகாம்களைப் பார்வையிட்டு, அங்கே உள்ள அவலநிலையை நேரில் கண்டு அறிந்தேன். எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கிடையாது. கழிப்பறைகளின் பக்கமே போக முடியவில்லை. கிட்டத்தட்ட திறந்தவெளி சிறைச்சாலை போலத்தான் இருக்கின்றன. அவர்களது வேதனைக் கண்ணீரைப் பல மேடைகளில் எடுத்துக் கூறி இருக்கின்றேன்.

ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, கனடாவுக்குக் குடிபெயர்ந்த ஈழத்தமிழர்களை, அந்த நாடுகள் வரவேற்று மதித்து, உதவிகள் அளித்து, குடியுரிமையும் வழங்கி இருக்கின்றன. ஆனால், அகதிகளுக்கான ஐ.நா. ஒப்பந்தத்தில் இன்றுவரை இந்தியா கையெழுத்து இடவில்லை.

ஆனால், இந்தியாவில் குடியுரிமை கோருகின்ற ஈழத்தமிழர்களுடைய விண்ணப்பங்களை, 16 வாரங்களுக்குள் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும் என, சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, மத்திய அரசுக்கு உத்தரவு பிறப்பித்து இருக்கின்றது. எனவே, இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்களை, இந்திய அரசு இனியும் சந்தேகக் கண்ணோடு அணுகக் கூடாது. சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் அத்தகைய முகாம்களை அடியோடு நீக்க வேண்டும்""

இதுதான் வைகோவின் அந்த அறிக்கை.

பிக்பாஸ் பார்ப்பவர்கள் " இப்போது ஈழத்தில் யுத்தம் இல்லை. அந்த தமிழர்கள் இந்தியா வந்து டிவி நிகழ்வுகளில் சந்தோஷமாக கலந்து கொள்கிறார்கள். அதற்கு இலங்கை இந்திய அரசுகள்கூட அனுமதிக்கின்றன" என்றே நினைப்பார்கள்.

அவ்வாறு உலகில் உள்ள தமிழர்கள் எல்லாம் நினைக்க வேண்டும் என்பதே இலங்கை மற்றும் இந்திய அரசின் விருப்பமாகும். அதற்கு விஜய் டிவி யும் ஒத்துழைக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டில் சிறப்புமுகாமில் ஈழ அகதிகள் அடைக்கப்பட்டிருப்பதையோ அல்லது ஈழத்தில் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் போனவர்களின் உறவுகள் நடத்தும் போராட்டங்களையோ உலகத் தமிழர் அறிந்து கொள்வதை இந்த அரசுகள் விரும்புவதில்லை.

அதனால்தான் பிக்பாஸ் மற்றும் சுப்பர் சிங்கர் நிகழ்வில் ஈழத் தமிழர்களை காட்டும் விஜய் டிவி போன்றன தமிழ் நாட்டில் ஈழ அகதிகள் படும் துன்பத்தையும் காட்டுவதில்லை. ஈழத்தில் அவர்களின் அவலத்தையும் காட்டுவதில்லை. லொஸ்லியாவையும், தர்சனையும் பார்த்து, அவர்கள் விடும் கண்ணீரை நம்பி, அதற்குள் மூழ்கி, ஈழத்தை வைத்து இந்திய ஊடகங்கள் செய்யும், விபசார விற்பனையில் மூழ்கிவிடும் பலருக்கும், அகதிகளாக உண்ணாவிரதமிருக்கும் பாஸ்கரன், செல்வம், ரமேஷ் போன்றோரின் அவலம் கடைசி வரை தெரியப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

எதிரொலி
Ethiroli
அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# அந்தோ பரிதாபம்

கல்முனை இலங்கை அரசியலில் முக்கிய புள்ளியாக மாறியிருக்கிறது. கல்முனை உப பிரதேச செயலகத்தை, பிரதேச செயலகமாக தரம் உயர்த்தும் அரசின் அனுமதி 1989 இலேயே கிடைத்துள்ள போதும் 30 வருடங்களாக அது கிடப்பிலேயே போடப்பட்டிருந்தது. இதற்கு முக்கிய காரணம் அரசியல் தலையீடுகள் என்று சொல்லப்படுகிறது. இதை இன்னொரு வகையில் சொல்வதானால் குறித்த பிரதேச செயலகம் உருவாகக் கூடாது என்பதில் முனைப்புக்காட்டும் பகுதி தன் அரசியல் செல்வாக்கை உச்சபட்சமாக பிரயோகித்திருக்க, பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த நினைக்கும் தரப்பின் அரசியல் பிரயோகம் என்பது மொன்னைத் தனமாக இருந்துள்ளது.

ஒரு பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும் அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும், வளப் பயன்பாட்டை பகிர்வதற்கும் அவ்வப்போது பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டு அவற்றிலிருந்து புதிய பிரதேச செயலகங்கள் பிறப்பெடுப்பது என்பது துடக்கான விசயமல்ல. நிர்வாகப் பரப்பின் அளவை பகிர்ந்து இன்னும் சிறிய அலகுக்குள் கொண்டு வருவதன் மூலம் சிறப்பான பயன் மக்களுக்கு கிட்டும். இதிலே இனவாதம், மதவாதம் என்பவற்றுக்கான கூச்சல்களுக்கு இடமில்லை.

மலையகத்திலே குறிப்பாக நுவரெலியாவில் நல்லாட்சிக்கு முன்னர் 5 பிரதேச செயலகங்களே இருந்தன. ஆனால், இப்போது அங்குள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக – 10 ஆக – மாறியுள்ளது. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் நகர்வுக்குக் கிடைத்த வெற்றியாக இந்த புதிய 5 பிரதேச செயலகங்களும் நோக்கப்படுகின்றன. அதேபோன்று அங்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இப்படி ஏற்கனவே இருந்த நிர்வாக அலகுகளைப் பிரித்து, புதிய அலகுகளாகப் பெருகும் போது யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் புதிய நிர்வாக அலகின் தோற்றம் என்பது தனியே பிரிந்து செல்லும் அலகுக்கு மட்டும் இலாபகரமானதல்ல.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தென்மராட்சிப் பிரதேச செலயகத்தை எடுத்துக் கொண்டால், மிகப் பெரிய நிலப்பரப்பையும், அதிகளவான மக்கட் தொகையையும் கொண்டது. இதனால் அங்குள்ள மக்கள் தமக்குரிய அபிவிருத்தி களையும், வளங்களையும், அனுகூலங்களையும் ஏனைய பிரதேச செயலகங்களைப் போல பெற்றுக்கொள்ள முடியாது இருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இதனால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்குமாறு நீண்ட நாள்களாக கோரிக்கை விடுத்தும் வருகிறார்கள். இதன் மூலம் பிரிக்கப்படும் இரண்டு பிரதேச செயலகங்களும் முன்னரைக் காட்டிலும் இரட்டிப்பு அனுகூலங்களைப் பெறமுடியும். முன்னர் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு 100 கோடி ரூபாவுக்கு ஒரு திட்டம் வந்ததெனில், இனிமேல் தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி, கொடிகாமம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டால் அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே 100 கோடி ரூபா கிடைக்கும் அல்லவா.

இதுபோன்ற அனுகூலங்களுக்காகத்தான் கல்முனை மக்கள் பிரதேச செயலகத்தைக் கோரி வருகிறார்கள். ஆனால், அது தமிழ் அரசியல் வாதிகளின் காதில் விழுவதாய் இல்லை. இதனால்தான் தமிழர்களின் பிரதேச செயலக விவகாரத்தை தங்களுடைய அரசியல் இலாபத்துக்காக சிங்களவர்கள் கையில் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் விரித்த வலையில் விழுந்த முஸ்லிம்களும் எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். ஆக மொத்தத்தில் அங்கு தீர்க்கப்பட முடியாத தமிழ் – முஸ்லிம் முரண்பாடு என்று வெற்றிகரமாக சிங்கள பேரினவாதத்தால் உண்டாக்கப்பட்டு விட்டது. கூடவே தமிழ் அரசியல்வாதிகளை விடவும் தமிழர்களுக்கு சிங்களவர்களே அனுகூலங்களைப் பெற்றுத் தரக்கூடியவர் என்ற விம்பமும் ஏற்பட்டு விட்டது.

எங்கள் அரசியல்வாதிகள் உறங்கு நிலையில் இருந்தால் இதுபோல நிலை ஏற்படத்தான் செய்யும். தனிநாட்டுக்காக போராடிய இனம் இன்று தேய்ந்துபோய், தனிப் பிரதேச செயலகத்துக்காக போராட வேண்டிய பரிதாபத்தை என்னவென்பது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# கல்முனைக் களேபரம்:
# செருப்பு சுமந்திரனுக்கா? கூட்டமைப்புக்கா?

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோரி நடந்த உண்ணாவிரத போராட்டத்தில், அரசின் பிரதிநிதிகளாக சென்ற அமைச்சர்களும், தமிழ் அரசுக் கட்சி எம்.பி சுமந்திரனும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அதிகபட்சமாக சுமந்திரன் மீது தாக்குதல் முயற்சியும் நடத்தப்பட்டது. அவற்றிலிருந்து, அவரது பாதுகாவலர்களும், உதவியாளர்களும் காப்பாற்றினர். அவரை நோக்கி வீசப்பட்ட செருப்பு போன்ற பொருட்களிலிருந்தும் காப்பாற்றினர். ஆயினும் அதற்கு முதல் நாள் அங்கு சென்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு (முன்னாளில் கருணா அம்மானாக இருந்தவர்),அமோக வரவேற்புக் கிடைத்துள்ளது. இப்படி துரோகியாக அடையாளம் காணப்பட்ட ஒருவரை வரவேற்றவர்கள், மக்களின் ஜனநாயக ஆதரவோடு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அமைச்சர்களையும் அனுசரித்து, கல்முனை விவகாரத்தை நல்ல விதமாக முடிக்காமல், பிரச்சனையை உருவாக்கியதன் பின்னணியில் சில அரசியல் தலையீடுகள் இருக்கவே செய்கின்றன.

### ஏன் நடந்தது?

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நடவடிக்கைகள் மீது முன்னெழுப்பொழுதுமில்லாதளவு விமர்சனம் இந்தக் காலத்தில்தான் எழுந்துள்ளது. தமிழர்களின் அரசியல், அபிவிருத்திகளில் முன்னேற்றமில்லை, அது குறித்த வாக்குறுதிகளுடன் கண்மூடித்தனமாக ரணில் அரசு ஆதரவு வழங்கப்பட்டும் எதுவும் நடக்கவில்லை, மறுவளமாக பிற இனங்களிலிருந்தும் நில, நிர்வாக ரீதியான நெருக்கடிகள் அதிகரிக்கின்றன போன்ற விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக கிழக்கில் தமிழ்- முஸ்லிம் உறவு மிகச் சீர்கெட்டுள்ளது. முஸ்லிம்கள் நிர்வாக அதிகாரத்தை கையில் வைத்தபடி, கிழக்கில் காணி சுவீகரிக்கில் அரசு ரீதியாகவும், நூதனமாகவும் மிக வேகமாக இயங்கி வருகிறார்கள், கூட்டமைப்பு இதில் கையாலாகாத் தனமாகஇருக்கிறது என்ற விமர்சனம் உச்சபட்சமாக உள்ளது. எல்லா விமர்சனங்களுக்கும் அப்பால், தமிழ்ப் பகுதிக் காணிகளை பாதுகாத்ததில் பிள்ளையான் அணிதான் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டது என்ற சாதக அபிப்பிராயம் தற்போது மேலோங்குவதற்கும் கூட்டமைப்பின் இயலாமைதான் காரணம். இப்படி பல்வேறு அதிருப்திகள் கிழக்கில் உச்சம் பெற்றுள்ள காலப்பகுதியில் தான் அன்றைக்கு கூட்டமைப்பின் பிரதிநிதியாக சுமந்திரன் கல்முனைக்கு வந்திருந்தார்.

கல்முனையில் போராட்டம் நடத்தும் விகாராதிபதி மஹிந்த ராஜபக்ச ஆதரவாளர். அது மஹிந்த அணியின் பின்னணியிலோ, அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலையிலோ- எதற்காகவோ நடக்கிறது. ஆனால் அது கூட்டமைப்பின் இயலாமையின் மீது நின்று நடக்கும் போராட்டம். கல்முனையைத் தரமுயர்த்துவதை விட, ரணிலை பாதுகாப்பதே முக்கியமானது என கூட்டமைப்பு கருதி வந்த விளைவின் மீது நடக்கும் போராட்டம்.

"கல்முனையில் போராட்டம் நடத்தும் விகாராதிபதி மஹிந்த ராஜபக்ச ஆதரவாளர். அது மஹிந்த அணியின் பின்னணியிலோ, அல்லது முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலையிலோ- எதற்காகவோ நடக்கிறது. ஆனால் அது கூட்டமைப்பின் இயலாமையின் மீது நின்று நடக்கும் போராட்டம். கல்முனையைத் தரமுயர்த்துவதை விட, ரணிலை பாதுகாப்பதே முக்கியமானது என கூட்டமைப்பு கருதி வந்த விளைவின் மீது நடக்கும் போராட்டம்.

கூட்டமைப்புக்கு எதிர்முகாமில் உள்ள சக்திகள் எல்லாம் அந்த மேடையை பயன்படுத்தினார்கள். அதற்காக அந்தப் போராட்டத்தை கொச்சைப்படுத்த முடியாது. உண்மையில் விமர்சிக்கப்பட வேண்டியது, இப்படியான போராட்டங்களுக்கு காரணமான- கூட்டமைப்பின் இயலாமைதான்.


### எதிர்த்தரப்புக்களின் அரசியல் மேடை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இய்லாமை மீது நடக்கும் போராட்டத்தில், இயல்பாகவே கூட்டமைப்பு மீது விமர்சனமும், கோபமும் நிலவுவது சாதாரணம்தான். அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலக்கு வைக்க வேண்டுமென ஒரு சாரர் 'எக்ஸ்ட்ராவாக' திட்டமிட, அது இப்படிக் களேபரத்தில் முடிந்துள்ளது.

கல்முனைப் போராட்டத்தில் எல்லாத் தரப்புகளும் உள்ளனஅதில் சில தரப்புக்கள் சுமந்திரனை இலக்கு வைத்தார்கள் என்பதே உண்மை.

சுமந்திரன் அங்கு வருவார் என்ற தகவல் போராட்டக்காரர்களுக்கு முன்னரே தெரியும். சுமந்திரன் அல்ல, எந்த கூட்டமைப்பு பிரமுகர் வந்தாலும் அந்த அணி குறிவைத்திருக்கும். கூட்டமைப்பு பிரமுகர்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதென, சம்பவ தினத்தன்று மதியமே முடிவெடுக்கப்பட்டதாக, போராட்டத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)






# மத்தியா? மாகாணமா?



# மருத்துவத்துறையில் அனல் பறக்கும் 'ஈகோ' யுத்தம்

# பின்னணியில் நடந்தது என்ன?

வடக்கில் தற்போது தலை(போகும்)யாய பிரச்சினையாக மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுக்கிடையே நடைபெறும் பனிப்போர் மாறிவிட்டது.

பிறந்து மூன்றே நாளில் உடலில் நீர்ச்சத்து இல்லாது இறந்த குழந்தையினையும் இதய சத்திரகிசிச்சைக்கு ஆளாகுபவர்கள் அடுத்தடுத்து இறந்துபோகும் அவலங்களையும் மேவி மறைத்தபடி இந்தப் பனிப்போர் அம்பு, வில்லு, சுதாயுதம் தாண்டி எறிகணைவீச்சு நிலைக்கு வந்துவிட்டது.

இந்தச் சிக்கல்களுக்கு ஆதிமூலம் எது எனப் பார்த்தால் அதிர்ச்சிதான் எஞ்சுகிறது. இங்கே எவரும் சனங்களுக்காகவோ அல்லது சுகாதார சேவையினை விருத்தி செய்வதற்காகவோ அடிபடவில்லை. மாறாக தத்தமது சுயநலன்களுக்காக காய் நகர்த்தி தேரை இழுத்து நடுத்தெருவில் விட்டு வைத்து வேடிக்கை பார்க்கிறார்கள்.

தமது உறுப்பினர்கள் இருவரை அவர்களது வருடாந்த இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் விடுவித்த யாழ்ப்பாணப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு 'பாடம் படிப்பிக்க' என்றே 'பஸ்ஸோ ரயிலோ' பிடித்து கொழும்பு சென்று சுகாதார அமைச்சரது வீட்டில் இரவு விருந்துண்ட ஒரு வடமாகாண வைத்தியர் குழுவே இந்தப் பனிப்போருக்கான பிள்ளையார்சுழியினை எழுதி வைத்தது.

இதில் சம்பந்தப்பட்டுள்ள பிரதான பாத்திரங்களது கடந்த கால வரலாறுகளை ஆராய்ந்து பார்ப்பதே இந்தப் பொம்மலாட்டத்தின் முடிச்சுக்களைச் சரியாக விளங்கிக் கொள்ள உதவும்.

**வைத்தியர் தேவநேசன்**

**( யாழ்ப்பாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்)**

தொடர்ச்சியாகப் பணியாளர்களது எதிர்ப்புகள் காரணமாக, தான் வகிக்கும் நிர்வாகப் பதவிகளிலிருந்து மாற்றப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு மருத்துவ நிர்வாகசேவை அதிகாரி எனப் பெயரெடுத்தவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக கடமையில் இருந்தவேளையில் ஏற்பட்ட கடுமையான எதிர்ப்புகளை அடுத்து 2010ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மத்திய சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டவர்.

கிளிநொச்சியில் கடமையாற்றிய நிலையில் அங்கும் சுகாதாரத் திணைக்களத்தின் பணியாளர்களது அதிருப்தியினைச் சம்பாதித்த நிலையில் குறுகிய கால விடுமுறையில் வெளிநாடு சென்றிருந்தார். அத்தருணத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட சுகாதார சேவைப் பணியாளர்கள் அப்போதிருந்த ஆளுநர் சந்திரசிறியிடம் மேற்கொண்ட முறைப்பாடுகளை அடுத்து தமது வெளிநாட்டுப் பயணத்திலிருந்து திரும்பியவருக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனம் ஆளுநரால் வழங்கப்பட்டு மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த வைத்தியர் தேவநேசனுக்கு வருடாந்த மருத்துவ நிர்வாக பிரதிப் பணிப்பாளர்களுக்கான இடமாற்றத்தின் மூலம் 2016ஆம் ஆண்டிலிருந்து மத்திய சுகாதார அமைச்சினால் யாழ்ப்பாண பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமனம் வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டில் மூத்த மருத்துவ நிர்வாகிகளுக்கான வருடாந்த இடமாற்றத்தின் மூலம் வைத்திய கலாநிதி நந்தகுமாரன் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளராக நியமனம் பெற்ற பொழுது அவரைக் கடமையேற்க விடாது வைத்தியர் தேவநேசன் தடுத்தமைக்காக அவர் மத்திய சுகாதார அமைச்சின் ஒழுக்காற்று விசாரணைக்கு உள்ளாகி எச்சரிக்கப்பட்டார்.

மீண்டும் 2018ஆம் ஆண்டில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தம்மை வைத்தியர் தேவநேசன் தகாத வார்த்தைகளால் தூசித்து மரண அச்சுறுத்தல் விடுத்ததாக சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து மத்தியசுகாதார அமைச்சினால்மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணையினை அடுத்து இரண்டாவது தடவையாகவும் வைத்தியர் தேவநேசன் எச்சரிக்கைக்கு உள்ளானார்.

மேலும் இவர் கல்வி பயின்ற கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராக 2014ஆம் வருடகாலத்தில் பதவிவகித்தபோது கல்லூரிச் சமூகத்தின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டார் என தெரியவருகிறது. அதுமட்டுமல்லாது தனது கல்லூரித் தொடர்புகள் ஊடாக வடமாகாண சுகாதாரத்துறையில் பல்வேறு குழப்பங்களை காலத்துக்குக் காலம் ஏற்படுத்துவதில் இவர் வல்லவர் என்றும் குறித்த ஒரு பொதுச் சுகாதாரத் தொழிற்சங்கத்துக்கு ஆலோசகராக செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டுகளும் வைத்தியர் தேவநேசன் மீது வைக்கப்பட்டு வருகின்றன. **(05 ஆம் பக்கம் பார்க்க)**

# மத்தியா மாகாணமா?



(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மருத்துவர் சத்தியமூர்த்தி**

**( யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்**

இவர் 2002ஆம் ஆண்டிலிருந்து 2009 முள்ளிவாய்க்காலின் இறுதி நாளான மே மாதம் 18ஆம் திகதி வரை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவும் பணியாற்றிய அனுபவமிக்க மருத்துவ நிர்வாகியாவார். இவ்வேளையிலே மருத்துவ நிர்வாக சேவையின் முதுமாணிப் பரீட்சையிலும் இவர் சித்திபெற்றுள்ளார்.

2010ஆம் ஆண்டு ஆவணி மாதம் வடமாகாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இப்பதவியுடன் இதே ஆண்டில் செட்டிகுளத்தில் தங்கியிருந்த வன்னி மக்களது சுகாதார ஒருங்கிணைப்பு பொறுப்பதிகாரியாகவும் மாகாண ஆளுநரால் இவர் நியமிக்கப்பட்டார். இவற்றின் மத்தியிலும் தனது மேற்படிப்பினை விடாது தொடர்ந்த வைத்தியர் சத்தியமூர்த்தி மருத்துவ நிர்வாக சேவை கலாநிதிப் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

2011ஆம் ஆண்டில் வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட இவர் இப்பதவியுடன் மாவட்டத்தின் டெங்கு ஒழிப்பு செயலணியின் தலைவராக ஆளுநரால்நியமிக்கப்பட்டார். வவுனியாமாவட்டத்தில் கடுமையாகப் பரவிய டெங்கு நோய் இவரது தலைமைத்துவத்தின் கீழ் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதுடன் இவர் மேற்கொண்ட டெங்கு தடுப்பு உத்திகள் அவற்றின் சிறப்புக்கள் காரணமாக நாடளாவிய ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்படலாயின.

2015ஆம் ஆண்டில் சிறிது காலம் மீண்டும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியாற்றிய இவர் 2015ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக மத்திய அரசினால் நியமிக்கப்பட்டார். 2019ஆம் ஆண்டிலிருந்து அதே வைத்தியசாலையில் நிரந்தரப் பணிப்பாளராக இவர் பதவி உயர்வு பெற்றார்.

**இளங்கோவன்**

**(வடமாகாண ஆளுநரது செயலாளர் )**

இலங்கை அரச நிர்வாக சேவையின் 1995ஆம் ஆண்டு அணியினைச் சேர்ந்தவரான இந்த மூத்த அரச அதிகாரி தமது சேவைக்காலத்தில் யுத்தம் நடந்த பிரதேசங்களை எட்டியும் பார்த்தவரல்லர்.

முதல் நியமனத்தினை தமது சொந்தப் பிரதேசமான தீவகத்தில் பெற்றுக்கொண்டார். திருமணபந்தத்தின் மூலம் வடக்கில் பொதுச்சேவை நியமனங்களை மேற்கொள்ளும் உச்ச அதிகாரம் கொண்ட பதவியில் இருந்தவரது மிகநெருங்கிய உறவினராக மாறிய இவர் திருமலையில் இயங்கிய வடக்கு மாகாணசபையில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 2010ஆம் ஆண்டில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராக இவர் திறம்படச் செயற்பட்டார்.

பின்னர் வடக்கின் பிரதம செயலாளர் பதவிக்கான போட்டியில் வெற்றிபெற முடியாத நிலையில் ஆளுநரது செயலாளராகப் பதவி உயர்வு பெற்று தமது இந்தப் பதவிக்காலத்தில் நான்காவது ஆளுநருக்கு செயலாளராகக் கடமையாற்றி மீண்டும் இப்போது வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராக உள்ளார். (கட்டுரையில் குறிப்பிடப்படும் சம்பவங்கள் இடம்பெற்ற காலத்தில் ஆளுநரின் செயலாளராக இளங்கோவனே இருந்தார்)

**வடமாகாண வைத்தியர் மன்றம்**

வைத்தியர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் வருடாந்தம் மத்திய சுகாதார அமைச்சினால் வழங்கப்படும். ஒரு பொதுச்சேவை உத்தியோகத்தர் ஒரு சேவை நிலையத்தில் ஆகக்கூடியது 4 வருடங்கள் மட்டுமே கடமையாற்றலாம் என்ற தாபன விதிக்கோவை நடைமுறைகளுக்கு அமைவாக இது அமுல் படுத்தப்பட்டு வருகிறது. இம் முறைமையின் கீழ் வைத்தியர்கள் சேவை மூப்பின் அடிப்படையில் தமது விருப்பத் தெரிவுகளை மேற்கொள்ள இடமளிக்கும் அதேவேளை அவ்வாறு தெரிவு செய்யாதவர்களுக்கு சேவையின் தேவை கருதி ஒரு சேவை நிலையத்தினை சுகாதார அமைச்சே ஒதுக்கும்.

இதன் பிரகாரம் 2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வருடாந்த இடமாற்றக் கட்டளைக்கு அமையப் பல்லாண்டுகளாக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் இடமாற்றங்கள் இன்றிப் பணிபுரிந்து வந்த பல வைத்தியர்களுக்கு யாழ்.மாவட்டத்தின் சுற்றயல் வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. மக்களது சுகாதார நலன்களை விருத்தி செய்யும் நன்னோக்குடனும் வைத்தியர்களது குடும்ப சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் குடாநாட்டினுள்ளேயே சேவை நிலையங்களை தெரிவுசெய்து வழங்கி மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றக் கட்டளைகள் செயற்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்ததால் யாழ் குடாநாட்டின் சுற்றயல் வைத்தியசாலைகள் வைத்தியர்கள் இன்றி மூடப்பட்டுக் கிடந்தன. இதனால் பொது மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதைத் தெரிந்து கொண்ட சுகாதார அமைச்சானது 2015ஆம் ஆண்டில் இந்த இடமாற்றங்களை உடனடியாக அமுலாக்குமாறு பணிப்பாளர்களுக்கு கடுமையான உத்தரவினை வழங்கியது.

இதனையடுத்து பல மூத்த வைத்தியர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து சுற்றயல் வைத்தியசாலைகளுக்கு நியமனம் பெற்றனர். இவ்வாறு சுற்றயல் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்ட வைத்தியர்கள், தாம் அவ்வாறு அனுப்பப்பட்டமைக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கமே காரணம் என்று கருதி அச்சங்கத்துக்குப் போட்டியாக வடமாகாணத்தில் ஒரு அமைப்பினை உருவாக்கினர். இந்த அமைப்பின் முதலாவது கூட்டம் பெருமெடுப்பில் 14.09.2016 அன்று இடம்பெற்றது. இலங்கையில் பல்லாயிரம் பேர் மருத்துவராகப் பணியாற்றி வருகின் றனர். அவ்வாறான மருத்துவர்களுக்கென தொழிற்சங்கங்கள், கல்விசார் அமைப்புகள் என இயங்கி வந்தாலும் வடக்குக்கே

என உள்ள பல்வேறு பிரத்தியேக மற்றும் தீவிர பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. இந் நிலையில் இப்பிரச்சினைகள் இங்கு பணியாற்றும் மற்றும் வசித்து வரும் வைத்தியர்களின் பணிகள், தனிப்பட்ட மற்றும் குடும்பவாழ்வில் எவ்வாறான தாக்கங்களைச் செலுத்தி வருகின்றன என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

இதனடிப்படையில் வடமாகாண மருத்துவர் மன்றம் அமைப்பு வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செயற்படும் எனப் பிரகடனப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டதே வடமாகாண வைத்தியர் மன்றம். இக்காலப்பகுதியில் இவர்களது உருவாக்கம் மற்றும் செயற்பாடுகளுக்கு பெரும் உறுதுணையாக இருந்தவரே இன்றைய யாழ்ப்பாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தேவநேசன் ஆவர்.

இவ்வாறு ஆரவாரமாகவடக்கின்பொதுமக்களுக்காக என்று ஆரம்பிக்கப்பட்ட இந்த வடமாகாண வைத்தியர் மன்றத்தினர் ஒருபக்கம் தமிழ்த்தேசிய முகத்தைக் காட்டியபடி மறுபக்கம் தமது நலன்களை தக்கவைப்பதற்காக மத்திய சுகாதார அமைச்சருடன் நெருக்கமான உறவினை ஏற்படுத்திக் கொண்டனர்.

வடமாகாண வைத்தியர் மன்றம் ஆரம்பத்தில் சில மருத்துவ முகாம்களை நடத்தியிருந்தாலும் பின்னரான காலப் பகுதியில் வடமாகாணத்தில் சுகாதார அமைச்சினால் சாதாரணமாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடுகளும் தமது வேண்டுகோளின் பிரகாரமே நடைபெறுவதாக 'காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக' ஊடகப் பிரசாரம் புரிந்து கொண்டிருந்தனர். ஆனால் உண்மையில் காலத்திற்குக் காலம் தமக்கு வேண்டியவர்களுக்கான நியமனங்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்தே மத்திய சுகாதார அமைச்சருடன் விருந்துண்டு வேண்டுதல் நிறைவேற்றி வந்தனர். சாதாரண மருத்துவ அதிகாரியான இந்த மன்றத்தின் தலைவர் வைத்தியர் பசுபதி அச்சுதன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராக மத்திய அமைச்சினால் நியமிக்கப்பட்டது இவற்றிற்கெல்லம் சிகரம் வைத்த செயலாக அமைந்தது.

தாம் ஒரு தொழிற்சங்கம் அல்ல என்று கூறிவரும் இந்த அமைப்பானது சுகாதார அமைச்சரைச் சந்தித்து விருந்துண்பதற்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு அவர்களது தொழிற்சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காகத் தாபன விதிக்கோவையின் பிரகாரம் வழங்கப்படும் சலுகைகளாக இலவசப் பிரயாணச் சிட்டை, பிரயாணப்படி, அலுவல் விடுமுறை ஆகியற்றைக் கோரிப் பெற்று வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

வைத்தியர் தேசநேசன் தற்காலிகமாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியை வகிக்கத் தொடங்கியதிலிருந்து தன்னார்வத் தொண்டு நிறுவனப் பதிவில் இயங்கும் இந்த வைத்தியர் மன்றத்துக்கு ஒரு தொழிற்சங்கத்துக்குரிய சலுகைகளை வழங்க முடியாது என நிராகரித்து விட்டமையே இந்த இரு தரப்பினரிடையேயும் முதலாவது விரிசலை ஏற்படுத்தியதாம்.

**வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது**

2017ஆம் ஆண்டிடுக்குரிய வருடாந்த இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் தமது சேவை மூப்பின்படி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்த ஒரு வைத்தியர் இடமாற்றத்தினைப் பெற்றுக்கொண்டார். அவரது துணைவியார் அவ்வேளையில் பட்டமேற்படிப்பினை கொழும்பில் மேற்கொண்டுவந்தமையால் மேற்படி வைத்தியர் தாமும் கொழும்பு செல்ல வசதியாக இத்தெரிவினை மேற்கொண்டிருந்தாராம். இருப்பினும் சில பல காரணங்களால் அவர் இடமாற்றத்தில் கொழும்பு செல்லாது யாழ்.மாவட்டத்திலேயே கடமையாற்றி வந்திருக்கிறார். 2019ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இடமாற்றங்களில் அமுல்படுத்தப்படாதிருந்த இடமாற்றங்களை உடனடியாகச் செயற்படுத்துமாறு பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டது.

இதன் அடிப்படையில் குறித்த யாழ். வைத்தியரை யாழ்ப்பாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தேவநேசன் விடுவிக்க முற்பட்டபோது சிக்கல் ஆரம்பமானது. ஏனெனில் 2019ஆம் ஆண்டில் இந்த யாழ் வைத்தியரது துணைவியார் தனது பட்டப் பின் படிப்பினை நிறைவுசெய்து யாழ்.குடாநாட்டில் உள்ள ஒரு வைத்தியசாலைக்கு பணி நியமனம் பெற்றுவிட்டார். இதனால் தம்மைக் கொழும்புக்கு விடுவிக்காதிருக்குமாறு வேண்டுகோள் கடிதத்துடன் குறித்த யாழ். வைத்தியர் கொழும்பு சுகாதார அமைச்சுக்குச் சென்று தொடர்ந்தும் யாழில் கடமையாற்றத் தற்காலிக அனுமதி வாங்கி வந்தார். (6ஆம் பக்கம் பார்க்க)



# மத்தியா மாகாணமா?

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யாழ்.வைத்தியர் வடமாகாண வைத்தியர் மன்றத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் யாழ்ப்பாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடாக்கண்டனாக செயற்பட்டு இந்த யாழ் .வைத்தியரை கொழும்புக்கு விடுவித்து விட்டு செயற்படுத்தப்படாதிருந்த ஏனைய வைத்திய இடமாற்றக் கட்டளைகளையும் மும்முரமாகச் செயற்படுத்தத் தொடங்கிவிட்டார். இந்த இடமாற்றக் கட்டளைகளுக்கு ஆளானவர்களில் பலர் வடமாகாண வைத்தியர் மன்றத்தின் மூத்த உறுப்பினர்கள் ஆவர்.

இதனையடுத்து தற்போது தமக்கு உவப்பல்லாத இடமாற்றக் கட்டளைகளை நிறைவேற்றினார் என்ற ஒரே காரணத்துக்காக யாழ் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தூக்கி எறிகிறோம் எனச் சபதமிட்ட வடமாகாண வைத்தியர் மன்றம் ,மத்திய சுகாதார அமைச்சரிடம் சென்று அவரது காலில் விழுந்து மன்றாடி வைத்தியர் சத்தியமூர்த்தியை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியையும் மேற்பார்வை செய்யும் உத்தரவினை 17.04.2019 அன்று மத்திய சுகாதார அமைச்சு மூலம் வெளியிட வைத்தனர்.

இரவோடு இரவாக கொழும்பில் அமைச்சர் இல்லத்தில் நடந்த சோமபான விருந்தில் இந்த நியமனம் உறுதி செய்யப்பட்டது என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பதிலடித் தாக்குதல்

ஆரம்பத்தில் இந்த நியமனத்தினைச் சாதாரணமாக எடுத்துக்கொண்ட யாழ்ப்பாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் இரண்டொரு தினங்களில் தனது ஆதரவு அணியினர் அவரை உசுப்பேற்றி விட்டமையால் சினந்தெழுந்தார்.

வடக்கிலுள்ள அரசியல்வாதிகள் சிலருக்கு, அவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தவல்ல ஒருவராக வைத்தியர் சத்தியமூர்த்தி காண்பிக்கப்பட்டு 'அவர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர் அல்லர் எவ்வாறு முழு யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அவரிடம் தாரை வார்ப்பது' என்பது போன்ற 'பிரதேசவாதக் கதைகள்' கூறப்பட்டன.

### ஆளுநர் தலையீடு

தற்போதைய ஆளுநரோ உரிய சட்ட மற்றும் நிர்வாக ஆலோசனைகள் எதையுமே பெற்றுக் கொள்ளாது மத்திய சுகாதார அமைச்சுடன் நேரடித் தொடர்பாடலை மேற்கொள்வதைத் தவிர்த்து கடிதங்கள் வாயிலாகவும் மாகாண அதிகாரிகளைக் கடிவதன் வாயிலாகவும் காரியம் சாதிக்க முயன்றார்.

கடந்த காலங்களில் இருந்த எந்த ஒரு ஆளுநரும் அரச அதிகாரிகளை பொதுவெளியில் கௌரவத்துடன் நடத்தியதாகதாகவே பலரும் தெரிவிக்கின்றனர். இராணுவ ஆளுநர் என அழைக்கபட்ட சந்திரசிறிகூட எவரையும் நாய்கள் என்றோ குரங்குகள் என்றோ குறிப்பிட்டு பொதுவெளியில் அவமரியாதை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் பௌத்தத்தில் பாண்டித்தியம் பெற்ற கலாநிதியாக அறிமுகமான தற்போதைய தமிழ்பேசும் ஆளுநரோ பௌத்தம் போதிப்பதற்கு மாறாக வன்சொற்களையும் வசவுகளையுமே தமது அதிகாரிகள் மீது தாராளமாகப் பிரயோகித்து வருவது காணொளிகளாக அவரது முகநூல் பக்கத்திலேயே பதிவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாண சுகாதாரப் பணியாளர்கள் சிலர் தமது 'மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் நேர்முகப் பரீட்சையில் நடந்த குளறுபடிகளால் பதவி உயர்வு கிடைக்காமல் போய்விட்டது' என்ற முறைப்பாட்டுடன் ஆளுநரைச் சந்தித்திருக்கிறார்கள். ஒருபுறம் 'வைத்தியர்களை நியமிக்க மத்திக்கு அதிகாரம் இல்லை' என்று மல்லுக்கட்டும் ஆளுநர் 12.06.2019 புதன்கிழமை மக்கள் சந்திப்பின்போது தம்மைச் சந்தித்த இந்த வடமாகாண சுகாதாரப் பணியாளர்களுடன்

உரையாடும்போது "மாகாண சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை நாய்கள் நேர்முகப் பட்டியலை நேரடியாக மத்திய சுகாதார அமைச்சுக்கு அனுப்பாது ஏன் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஊடாக அனுப்பினார்கள்?" எனச் சினந்தாராம்.

வைத்தியர்களின் தனிப்பட்ட சிக்கல்களால் குழப்பம் ஏற்பட்ட யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனத்தில், ஆளுநரும் எடுத்தேன் கவிழ்த்தேன் என தலையிட, நிலைமை இன்னும் சிக்கலானது.

### பறக்கத் தொடங்கிய கடிதங்கள்

மத்திய சுகாதார அமைச்சின் ராஜாங்கச் செயலாளர் 17.04.2019 அன்று வைத்தியர் சத்தியமூர்த்திக்கு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியை தற்காலிக அடிப்படையில் உடனடியாகப் பொறுப்பேற்குமாறு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தார். இக்கடிதத்தின் பிரதிகள் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோருக்குப் பிரதியிடப்பட்டிருந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.வி.கே சிவஞானம் ஆகியோர் இந்த நியமனத்துக்கு ஆட்சேபம் வெளியிட்டு ஆளுநருக்கு அறிக்கை இட்டதனை அடுத்து ஆளுநரது செயலாளர் 25.04.2019 அன்று மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் மேற்படி இருவரது ஆட்சேபனைகளையும் குறிப்பிட்டு "ஆளுநர் அவர்கள் பணித்ததற்கு அமைய வைத்தியர் சத்தியமூர்த்தியின் தற்காலிக நியமனத்தை நிறுத்திவைத்து மருத்துவ சேவையும் அனைத்து இலங்கைச் சேவை என்ற வகையில் பொதுச்சேவை ஆணைக்குழுவின் நடைமுறைகளின் பிரகாரம் மாகாண ஆளுநரது சம்மதத்துடன் நிரந்தரமாக தகுதிவாய்ந்த ஒரு மருத்துவ அதிகாரியை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்குமாறு வேண்டுகிறேன்" எனக் கேட்டிருந்தார்.

அதே திகதியில் மேற்சொன்ன அதே உள்ளடக்கத்துடன் வடமாகாண ஆளுநரும் மத்திய சுகாதார அமைச்சருக்கு ஒரு கடிதத்தினை அனுப்பியிருந்தார்.

இவ்வாறு கடிதப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் வைத்தியர் சத்தியமூர்த்தி யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் முழு வீச்சில் தமது கடமைகளை ஆற்றத் தொடங்கியிருந்தார்.

### பஞ்சாயத்து உத்தரவு

தாம் மத்திக்கு அனுப்பிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்காத நிலையில் யாழ்.பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தரப்பினரால் வழங்கப்படும் அழுத்தங்கள் அதிகரித்த நிலையில் 27.05.2019 அன்று மாகாண சுகாதாரப் பணிமனையில் வடக்கின் பிராந்தியசுகாதாரசேவைகள்பணிப்பாளர்களுக்கான கலந்துரையாடலின் இறுதியில் 'பஞ்சாயத்துப் பாணியில்' (இதனையே மின்னஞ்சல் மூலம் அனுப்பிய அறிக்கையில் வைத்தியர் சத்தியமூர்த்தி ஆளுநர் மிரட்டியதாகக் குறிப்பிட்டிருக்கவேண்டும்) ஆளுநர் ஒரு கலந்துரையாடலை நடத்தி அதன் முடிவில் வைத்தியர் சத்தியமூர்த்தியை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதிவியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு வாய்மூல உத்தரவினை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கியிருந்தாராம்.

வாய்மூல உத்தரவுக்கு நடவடிக்கை எடுத்து 'உத்தரிக்க' விரும்பாத மாகாணப் பணிப்பாளர் வாய்மூடியிருக்க,அதிரடியாக 31.05.2019ஆம் திகதி ஆளுநரது செயலாளர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒரு கடிதத்தினை அனுப்பி வைத்தார். அதில் '13ஆம் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட நிர்வாக அதிகாரம் மற்றும் மாகாண சபைகள் சட்டமூலத்தின் ஆளுநருக்கு வழங்கப்பட்ட தத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் வடமாகாண ஆளுநர் வைத்தியர் சத்தியமூர்த்தியை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதிவியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளார். இதன்பிரகாரம் உடனடியாக பதவியிலிருந்து விடுவிக்கும் கடிதத்தை வைத்தியர் சத்தியமூர்த்திக்கு வழங்குவதுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரது நிர்வாகக் கடமைகளை முன்னர் இருந்த ஏற்பாடுகளுக்கேற்ப ஒழுங்கமைக்கவும்' எனக் கட்டளையிடப்பட்டிருந்தது.

### அவசரக் கடிதம்

மேற்படி கடிதம் 31.05.2019 திகதியிடப்பட்டாலும் 01.05.2019 அன்றே மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டு அன்றே வைத்தியர் சத்தியமூர்த்தியை விடுவிக்கும் கடிதத்தினை வார இறுதி விடுமுறை காரணமாக மூடியிருக்கும் மாகாண சுகாதார அலுவலகத்தைத் திறந்து, தட்டச்சுச் செய்து அனுப்பி வைக்குமாறு ஆளுநரது செயலாளர் அழுத்தம் வழங்கினார் எனக் குற்றம் சாட்டப்படுகிறது (இதுவே ஆளுநரது செயலர் மாகாணப் பணிப்பாளரை மிரட்டினார் என வைத்தியர் சத்தியமூர்த்தியின் மின்னஞ்சல் அறிக்கை குறிப்பிடக் காரணமான சம்பவமாக இருத்தல் வேண்டும்). இவ்வாறு ஆளுநரது செயலாளர் அழுத்தம் வழங்கக் காரணம் மறுநாள் 02.06.2019 பிரதமரும் சுகாதார அமைச்சரும் யாழுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தமையால் அவர்கள்'நேரடியாகத் தலையிட்டு உறுதியான முடிவெடுத்து வைத்தியர் சத்தியமூர்த்தி தொடர்ந்தும் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகத் தொடரக்கூடும்' என்ற அனுமானத்தில் அவ்வாறு நடைபெறாது முன்னரே தடுக்கும் எண்ணத்துடன் செய்யப்பட்ட செயலாகவே பார்க்கத் தோன்றுகிறது. இதிலிருந்து இந்த விடயத்தில் ஆளுநரைக் காட்டிலும் அவரது செயலாளர்'நட்புக்கு இலக்கணம் வகுக்க விளைவது' பட்டவர்த்தனமாகவே புலப்படுகிறது.

(மிகுதி அடுத்த வாரம்)




# புலிகளின் குரல் வானொலி: போர்க்கால ஊடகம்

அறிவியல் அறிஞர் மார்க்கோணியால் 1890 ஆம் ஆண்டு வானொலி கண்டுபிடிக்கப் பட்டது. 1901 இல் பறக்கும் பட்டத்தின் உதவியுடன் 'ஏரியலைப்'பயன்படுத்தி கொன வேல் நகரிலிருந்து நியூன்லாந்து வரை வானொலி அறிவுறுத்தலை அனுப்புவதில் மார்க்கோணி வெற்றி பெற்றார்.இதன் பின்னர் இலங்கையிலும் வானொ லியின் தாக்கம் தொடர ஆரம்பித்தது. 1922ஆம் ஆண்டு 11ஆம் மாதம் "சிலோன் வயர்லெஸ் கிளப்" சங்கம் தோற்றுவிக்கப்பட்டு"சிலோன் அமெச்சூர் றேடியோ சொசைட்டி"உருவாக்கப்பட்டது. பின் இம் முயற்சி வெற்றியடைந்ததைத் தொடர்ந்து1925 ஆம் ஆண்டு12ஆம்மாதம்16ஆம்திகதிஹியூகிளிபர்ட்டினால் உத்தியோகபூர்வமாக முதலாவது ஒலிபரப்பு சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1949ல் ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து இலங்கை வானொலி என்ற அமைப்பில் இருந்து தனது சேவையைத் தொடர்ந்தது. பின்1967ஜனவரி5ஆம்திகதியன்று கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதால் "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்" என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

இங்கு ஆரம்பத்தில் ஆங்கில மொழி ஒலிபரப்பு களும் 1927ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்,சிங்கள சேவைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இருப்பினும் 90களின் ஆரம்பத்திலிருந்து தனியார் வானொலிச் சேவை கள் ஒன்றன் பின் ஒன்றாக ஆரம்பமாகத் தொடங்கி விட்டன. இவ்வாறு வானொலிச் சேவையின் தொடக்க வரலாற்றினைக் கொண்ட இலங்கை, சமூக வானொலி களின் தோற்றத்திற்கும் ஏதுவானதாகவே அமைந்திருந் தது. தமிழர்களின் தாயகப்பகுதி என வர்ணிக்கப்படும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அகிம்சை வழி போராட்டங்களும் ஆயுத வழி போராட்டங்களும் மௌனிப்பு செய்யப்பட்ட நிலையில் போருக்கு முன்னரான ஊடக அறிக்கையிடல் பாங்கினை ஆராய வேண்டிய கடமைப்பாடு எம் அனைவரையும் சாரும்.

தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் மக்களின் குரல் வெளிப்பாடாக உருவெடுத்த ஊடகங்கள் பல உள் ளன. தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாட்டு விழு மியங்கள் என்பனவற்றின் உண்மைக்குரலினை எடுத்துக் கூறும் வகையில் வெளிவந்த ஊடகங்களின் செயற் பாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவ் ஊடகங் கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி, வானொலி ஏன்ற, அடிப்படையில் வெளிவந்தன. இதில்புலிகளின்குரல்வானொலிச்சேவைதமிழர்களின் மனத்திலையில் விலகா இடம் பிடித்துள்ளமை மறுக்க முடியாத ஒன்றாகும்.

### முதல் உறுமல்

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலாகவும் தமது விடுதலைக் கொள்கைப்பரப்பாகவும் விடுதலைப்புலி கள் இயக்கத் தலைவரான வே. பிரபாகரன் அவர்களால் 1990.11.21 ஆம் திகதி புலிகளின் குரல் வானொலிச் சேவை பண்பலை வரிசையில் ஆரம்பித்து வைக்கப பட்டது. ஆரம்பத்தில் இச்சேவை இரவு 8 மணி முதல் 9 மணி மட்டுமே ஒலிபரப்பப்பட்டது. பின் படிப் படியாக நேரம் அதிகரிக்கப்பட்டதுடன் காலைச் சேவையும் ஒலிபரப்பப்பட்டது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு மட்டு மன்றி, இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் வாழ்ந்த மக்களுக்குமான சேவையையும் செய்து வந்தது. தமிழ் மக்களின் உண்மைக்குரலாக புலிகளின் குரல் வானொலி சேவை, வட கிழக்கெங்கும் தன் ஒலிவீச் சினை விரிவுபடுத்திக் கொண்டது.

புலிகளின் குரல் வானொலிச் சேவை கடந்து வந்த பாதை கடுமையானது. தமிழர் தாயகப்பகுதி அடிக்கடி விமானத்தாக்குதலுக்கும் எறிகணை வீச்சுக்கும் உள்ளா கிருந்ததென்பது தாயகப்பகுதியில் வாழ்ந்தவர்களுக்கு புதிதல்ல. புலிகளின் குரல் வானொலிச் சேவையினை இலக்கு வைத்து பல தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இதனால் புலிகளின் குரல் வானொலிச் சேவையின் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வது ஓர் இடம், ஒலி பரப்பு செய்வது இன்னோரிடம் என்ற நிலையில்தான் இச் சேவை போர்காலச் சூழலில் இயங்கி வந்தது.

மின்சார வசதிகள் இல்லாத நேரங்களில் இந்த வானொலியை கேட்பதற்காக மக்கள் கார் பற்றறிகளை பயன்படுத்தினர். பின்னர் கார் பற்றறிகளும் தீர்ந்து போக சைக்கிள் டைனமோ பிறப்பிக்கும் மின்சாரம் வயர் வழியே பாய்ந்து வானொலியினை உயிர்ப்பிக் கும். அந்த இரவு நேரங்களின் நிசப்தத்தைக் கலைத்து எல்லா வீடுகளிலும் புலிகளின் குரல் ஒலிக்கும். இங்கு ஒலிபரப்பப்படும் ஒவ்வொரு நிமிடத்துளிகளிலும் போராளிகளின் வீரச்சாவு,களம் கண்ட கதைகள்,குறு நாடகங்கள், செய்திகள், தாயக எழுச்சிப்பாடல்கள், விபரணச் சித்திரங்கள் எனப் பலவிதமான நிகழ்ச்சி களை மக்களுக்கு வழங்கியது இந்த வானொலி.

யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டிலும் தட்டாதெரு சந்தி யிலும் பெரும் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி இந்த வானொலி தன் ஒலிபரப்பை எல்லோருக்கும் காற்ற லையில் தவழ விடும். புலிகளின் குரல் வானொ லியின் ஒலிபரப்பில் மக்கள் மனங்களை கவர்ந்த நாடகங்களான சந்தனக்காடு,வரலாறு காத்திருக்கும் போன்றன இன் னும் நெஞ்சை விட்டு அகலா இடம் பிடித்துள்ளன.

யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது மக்களோடு மக்களாக நகர்ந்து கொண்டிருக்கையில் அவ்வப்போது கிடைத்த நேரங்களில் தென்மராட்சியின் வீதிக்கரை யோரங்களிலும் அவசர அவசரமாகச் செய்திகளை ஒலிபரப்பு செய்ய வேண்டிய நிலை இருந்தன. வன் னியைச் சென்றடையும் வரை அங்கும் புலிகளின் குரல் சேவை தொடர்ந்தது. அத்தோடு தமிழ் மக்களுடைய வாழ்வியல் கோலங்களையூம் வாழ்க்கை முறையி னையும் தெளிவாக எடுத்துக் காட்டும் உன்னத பணி யினை புலிகளின் குரல் வானொலிச் சேவை செய்து வந்தது. இங்கு கலைப்பிரிவு,செய்திப் பிரிவு, ஆவணப் பிரிவு என மூன்று பிரிவுகளின் அடிப்படையில் புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்புச் சேவைகள் இடம் பெற்று வந்தன.

அத்தோடு ஒலிப்பதிவு நடவடிக்கைகளுக்கு முன் னர் மதிப்பீட்டுப் பிரிவினரால் மதிப்பீடு -1, மதிப்பீடு -2 என மதிப்பீடு செய்யப்பட்டு ஏதும் பிழை இருப்பின் இன்னுமொரு தடவை மேலதிக பார்வைக்கு அனுப்பப் படும். அதன் பின்னர் ஒலிப்பதிவு செய்யப்பட்ட விடயம் ஒழுங்காக எழுத்துருவுக்கு ஏற்றவகையில் ஒலிப் பதிவு செய்யப்பட்டுள்ளதா எனக் கண்காணித்ததன் பிற்பாடு ஒலிபரப்புச் செய்யப்படும். இவ்வாறான நேர்த்தியான முறைகளில் புலிகளின் குரல் வானொலிச் சேவையின் நிகழ்ச்சித் தொகுப்பு அமைந்திருந்தது .

இவ் வானொலிச் சேவையில் பணிபுரிந்தவர்கள் நன்கு தொழில் தேர்ச்சி உடையவர்களாகவும் அனைத்து துறைகளிலும் பணிபுரியக்கூடியவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். உதாரணமாக ஒலிப்பவு செய்பவர்கள் அறிவிப்பாளராகவும் ,நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும், கருவிகளைத் திருத்தல் வேலை செய்பவராகவும் காணப்பட்டனர். இவர்கள் ஊதியத்தினைக் கருத்தில் கொள்ளாது ஒலிபரப்பின் மீது கொண்ட அவா மற்றும் செய்திகளை உடனடியாக ஏனையவருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற எண்ணங்களோடு பணிபுரிந்தனர். யுத்த காலத்தின் போது இவர்கள் எதிர்கொண்ட சவால்களை எழுத்து வடிவில் சொல்லி விட முடியாது .ஓடும் வாகனங்களிலிருந்தும், பதுங்கு குழிகளிலிருந்தும் ,வனாந்திரங்களிலிருந்தும் ஒலிப்பதிவு களை செவ்வனே மேற்கொண்டிருந்தனர்.

அலைவரிசைக் கோபுரத்திலிருந்து விழுந்தும், வான் குண்டு மற்றும் எறிகணைத்தாக்குதல்களுக்கு உள்ளா கியும் புலிகளின் குரல் ஊழியர்கள் தம்முயிரைக் கூட அர்ப்பணித்திருந்தனர். கால நேர வரையறை இன்றி, இரவு பகலாகச் செய்திகளை வழங்க வேண்டும் என்பதற்காக உயிரினை தியாகம் செய்தவர்களும் உள்ளனர். ஒரு ஊடகம் எவ்வாறு ஊடக அறத்தினை பேணவேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டாக புலிகளின் குரல் வானொலி காணப்பட்டது. பெண்களின், சிறுவர்களின் நிலைப்பாடு பற்றி கூடிய கவனம் எடுக்கப்பட்டது. இது விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரின் பொறுப்பிலிருந்து இயங்கி வந்தது எனலாம். அத்தோடு ஏனைய ஊடகங்களில் இருந்து வருகின்ற செய்திகளை உடனடியாக கைக ளால் எழுதியே ஒலிப்பதிவு செய்வதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மக்களினை ஒருங்கிணைப்பதற்காகவும், மக்களுக் கான உண்மைத் தகவலினை எடுத்துரைப்பதற்காக வும்,போர்நடவடிக்கைகளைஎடுத்துரைப்பதற்காகவும் இவ் வானொலிச் சேவை பயன்படுத்தப்பட்டது. இங்கு 65 மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்து வந்தனர். இக்காலத்தில் தென்னிந்திய திரைப்படங்களோ பாடல் களோ தாயகப் பகுதியில் அனுமதிக்கப்பட வில்லை. இதனால் புலிகளின் குரல் வானொலியே மக்களுக்கான பிரதான பொழுதுபோக்குச் சாதனமாகவும் மாறியது.

புலிகளின் குரல் வானொலி உருவாக்கப்பட்டதி லிருந்து இறுதி வரைக்கும் பல்வேறு இடப்பெயர் வுகளைச் சந்தித்திருந்தது இந்த இடப்பெயர்வுகளின் ஒழுங்கு முறை வெறுமனே இடங்களாக மட்டும் அமைந்திருக்க வில்லை. இதில் ஏற்பட்ட உயிரிழப் புக்களும் சொத்திழப்புக்களும் எண்ணிலடங்கா.

புலிகளின் குரல் இயங்கிய இடங்கள் இவைதான்.

யாழ்ப்பாணத்துக் கோட்டை (திருநெல்வேலி கிளை, நல்லூர் கிளை ஒலிபரப்பு மையங்கள்), தென் மராட்சி, பூநகரி , கொக்காவில், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கிளிநொச்சி, பரந்தன், உடையார் கட்டு, சுதந்திர புரம், முள்ளிவாய்க்கால்.

புலிகளின் குரல் வானொலிக்கு ஜவான்(தமிழன்பன்), தவபாலன் ஆகியோர் பொறுப்பாக இருந்தனர். இறுதி யுத்தத்தின் போது 8 மணி நேரத்துக்கும் மேலாக ஒலிபரப்புச் சேவை இடம்பெற்று வந்தது.

போர் குற்ற மீறல்கள், இராணுவ இழப்புக்கள், மக்களின் இறப்பு விபரங்கள்,மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான வழிகள் என்பவற்றை புலிகளின் குரல் வானொலிச் சேவை இறுதிப்போரின் போது எடுத்துரைத்திருந்தது.

புலிகளின் குரல் வானொலி ஒலிக்கும் போது, அதனைச் செவிமடுக்க முடியாத வகையில் இலங்கை அரசுபேரிரைச்சலை ஒலிக்கச்செய்து, இடையூறுகளை ஏற்படுத்தியது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் வந்த பின் புலிகளின் குரல் வானொலியின் தளம் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்தது பின் 2009 இறுதி யுத்தத்தின் போது வாகனங்களிலிருந்து இறுதி வரை தமது ஒலிபரப்பை இடைவிடாது செய்திருந்தது. தற்போது ஜெனிவாவில் யுத்த மீறல்கள் பற்றி புலம்பெயர் தமிழர்களும் தமிழ் பிரதிநிதிகளும் பேசுவதற்க்கு முக்கிய சான்றாதாரமாக புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் இருந்துள்ளன. இறுதி யுத்தத்தின் முடிவின் பின் வானொலிச் சேவை இடைநிறுத்தப்பட்டு தற்போது புலன்பெயர் அமைப்புக்கள் மூலம் online இல் ஒலி பரப்பாகி வருகின்றது.

-மு.சுகதாஸ்
ஊடகத்துறை, யாழ்பல்கலைக்கழகம்.



# புலமும் நிலமும்

வேதநாயகம் தபேந்திரன்

இன்னும் மூண்டு வருசத்தில அறுபத்தைஞ்சு வயசு வரப் போகுது.

பென்சன், எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு ஊரில செற்றில் ஆகுவம்.

இந்தக் குளிருக்க நெடுக இருந்து கஸ்ரப்பட ஏலாது. எங்கட நாடு என்ன சோக்கான நாடு. மெயின் றோட்டில வாங்கின காணியில 10 கடையைக் கட்டினால் அந்த வாடகை வருமானத்தில சீவிக்கலாம் ”

- சுவிற்சலாந்தில் இருக்கும் ஒருவரது எண்ணம் அது.

“அண்ணை மூத்தவன் படிக்கிறான் இல்லை. எந்த நேரமும் சினேகிதம் கூடித்திரியிறான் . அவனை ஒருக்கால் வெளியில எடு.”

தாயகத்திலுள்ள அன்புத் தங்கை புலம்பெயர் தேசத்திலுள்ள அண்ணனுக்கு விடுத்தவேண்டுகோள்.

“தங்கச்சி சண்டை முடிஞ்சு பத்து வருசமாகுது. இஞ்ச எடுத்து என்ன சொல்லி அசைல் அடிக்கிறது.சரிப்பட்டு வராது . அதால ஊரில கடை கண்ணி எடுத்த நடத்த 15 இலட்சம் ரூபா காசு அனுப்புறன். பெடியனை உங்கயே வச்சிரு. அவனை கடை நடத்த விடு ”

- தாயகத்தில் இருக்கும் ஒருவரது சிந்தனை இது.

இரு வேறுபட்ட நிலைகளால் கடை கட்டடங்கள் பெருகி வரும் நிலையில் கோடான கோடி ரூபா பணம் முடங்குவதன் பின்னணியைக் காட்டும் அண்மைக்கால நிலைமையே அவை.

போர் முடிந்த காலத்தில் வேக வேகமாக கடைகள், கட்டடங்கள் எல்லாம் நாலா திசையிலும் வந்தன. வந்து கொண்டிருக்கின்றன. புலம்பெயர் தேசங்களில் உள்ள பலர் தமது சேமிப்புகளைத் தாயகத்தில் முதலீடுகளாக்கி வருகின்றனர்.

இதில் ஆரோக்கியமற்ற ஒரு போக்கு நிலவுகிறது. காணிகளை வாங்கிக் குவிக்கின்றனர்.

கடைகள், கட்டடங்களைக் கட்டிக் குவிக்கின்றனர் என இந்த நிலைமை தொடர்கிறது.

பிரதான வீதிகள், முக்கிய சந்திகள் எல்லாம் நகரத்தின் சாயல் படர்ந்து விட்டது.

அதே வேளை 14,000 குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் சொந்தக் காணி இன்றியிருப்பதால் வீட்டுத் திட்டங்களை வழங்க முடியாது உள்ளதாக மாவட்டச் செயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றது.

அது போல வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் காணி இன்மையால் வீடு பெற முடியாதோர் பல்லாயிரம் பேர் உள்ளனர்.

சிறுகக் கட்டி பெருக வாழ்ந்த சமூகத்தின் பணம் தூரநோக்கற்று கடைகளாக மாறுகின்றது.

வியாபாரம் தொடர்பான எந்தவித முன்னறிவும் இன்றி கடைகளைத் தொடங்கிய பலர் நட்டப்பட்டு, உள்ளதையும் இழந்து கடன்காரர்களாகி விட்டனர்.

இளவட்டங்கள் பலர் கடை நடத்துவதை விட நட்பு வட்டங்களுடன் கலகலப்பதில் நேரத்தைச் செலவிட்டு முதலீட்டைக் கோட்டை விட்டு விடுகின்றனர்.

தனது தாய் மாமன் அல்லது உற்றார் புலம்பெயர் தேசத்தில் கொடும் குளிருக்குள் நித்திரையைத் தொலைத்து, நிம்மதியைத் தொலைத்து அனுப்பிய பணமென்ற அருமை பலருக்குத் தெரிவதில்லை.

புலம்பெயர் தேசத்தின் பணம் மட்டுமல்ல உள்நாட்டில் வசிப்போரின் சேமிப்புகளும் கடன்களும் கூட கடை நடத்துவதற்கு முதலீடாக வந்து அழிகின்ற நிலை உள்ளது.

சனத்தொகை விகிதாசாரத்திற்கு என்னென்ன கடைகள், எத்தனை இருக்க வேண்டுமென்ற கணக்குத் தெரியாமல் கடை நடத்தும் நிலைமையும் நட்டங்களுக்கு இன்னுமொரு காரணம்.

சிறு பணக்காரர் கடைகளைக் கட்டிக் குவிக்க பெரும் பணக்காரர் கல்யாண மண்டபங்களாகக் கட்டி வருகின்றனர்.

கே.கே.எஸ் வீதியிலும், பலாலி வீதியிலும், அது போன்ற முதன்மை வீதிகளிலும் நாலுபரப்பு காணி விற்பனைக்கு இருந்தால் போதும் இந்த மண்டபக்காரர் ஓடிச்சென்று வாங்கி விடுகின்றனர்.

ஒரே நேரத்தில் இரண்டு நிகழ்வுகள் நடத்தக் கூடியதாக இரு பெரு மண்டபங்கள் ஒரு வருடத்தில் எழுந்து விடும். கல்யாண மண்டபங்கள் வைத்திருப்பது படுலாபமான தொழிலும் கூட.

பல மண்டபக்காரர்கள் கணக்கு வழக்கில் டிமிக்கி விட்டுத் தான் பணம் பண்ணுவது ஊரறிந்த ரகசியம். ஆனால் கணக்கு வழக்குக் கேட்டுக் காசு கொடுப்பதில் உள்ள வெட்கம் தான் மண்டபக்காரரின் முதலீடு.

லட்டு, தண்ணீர்ப் போத்தல், சோடா, சாப்பாடு, ஐஸ்கிறீம், பீடா என எல்லாவற்றிலும் கொழுத்த லாபம் உண்டு.

புலம்பெயர் தேசத்தின் பணத்தின் வருகை இன்னும் 20 வருடங்களுக்கு மட்டும்தான் இருக்கும்.

பணம் வராத காலத்தில் இந்த மண்டபங்களின் பாடு என்னவாகப் போகிறதோ ?

புலம்பெயர் கனவைத் தொலைக்காத ஒரு சமூகத்தைத் திருப்தி செய்வதற்காகவும், உள்நாட்டுத் தொழில் வாய்ப்புக்காகவும் கடைகள் பல இடங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன.

பெருவீதிகள் வழியாகப் போகும் போதும் ,முக்கிய சந்திகள் ஊடாகவும் போகும் போதும் பார்வையை எறிந்து பாருங்கள்.

எத்தனை கடைகள் திறந்து நன்றாக வியாபாரம் போகிறது. எத்தனை கடைகள் மூடப்பட்டுள்ளதெனக் கணக்கிடுங்கள்.

இந்தக் கட்டுமானங்களுக்காக வளம் மிகுந்த தோட்டக்காணிகள் பல பயன்படுத்தப்படுவது இன்னொரு வகையில் றெட்லேடி பப்பாசி மரமாகத் தான் கதை முடியும்.

றெட்லேடி பப்பாசிக் கன்றுகளை 2002 ஆம் ஆண்டில் பல்தேசியக் கம்பனிக்காரர் இலவசமாகத் தந்தார்கள். பின்னர் ஊர்ப் பப்பாசி இனங்கள் முற்றாக அழிந்தன. இன்று 50 கிராம் றெட்லேடி பப்பாசி விதையை 10,200 ரூபாவுக்கு விற்கின்றனர்.

குப்பைக்குள், மண்ணுக்குள் முளைத்து தானாக வளர்ந்த ஊர்ப் பப்பாசியைத் தொலைத்து விட்டோம். இறக்குமதிப் பழங்களுக்கு கோடி கோடியாகப் பணம் கொடுக்கின்றோம்.

அது போலத் தான் தோட்ட நிலங்கள் கட்டடங்களாக மாற மரக்கறிகளுக்கும் பழவகைகளுக்கும் வெளிநாடுகளிடம் கையேந்தி நின்று கோடான கோடி பணத்தைத் தொலைக்கும் நிலைமை வரப் போகிறது. தூர நோக்கில் இதைப்பற்றிச் சிந்திப்பார் இல்லை.

உள்ளூராட்சி சபைகள் தோட்ட நிலங்களில் கட்டடம் கட்டுவதற்கு எந்தவித தயக்கமும் இல்லாமல் கட்டட அனுமதியை வழங்குகின்றன. வயல் நிலங்களில் மட்டும் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி இல்லை என் உள்ளூராட்சிச் சட்டம் சொல்கிறது.

ஆனாலும் ஏதேதோ நெளிவு சுழிவுகளையெல்லாம் ‘கண்டும் பிடித்து மாடும் பிடித்து’ அங்கும் கட்டடங்கள் சில இடங்களில் முளைத்துள்ளது.

கோயில்கள், கடைகள், மண்டபங்கள் யாவும் போட்டி போட்டுக் கொண்டு கட்டப்படும் போது பாதிக்கப்படுவோர் ஏழைகளும், நடுத்தர வகுப்பினரும் தான்.

குறிப்பாகக் கோயில்கள் கல்யாண மண்டபம்,தீர்த்தக் கேணி, ராஜகோபுரம்,திரிதள ராஜகோபுரம், வரவேற்கும் வாசல் எனப் பெருத்துச் செல்கின்றன.

இதனால் பெருமளவு பணம் பொருளாதார நன்மைகள் தராத குருட்டு மூலதனமாக முடங்குகின்றன.

அதே வேளை இக் கட்டுமானங்களுக்காக மணல் பெறுகின்றனர். மணல் அருகி வரும் ஓர் வளமாகி விட்டது. சட்டபூர்வமாகவும், சட்ட பூர்வமின்றியும் மணல் பெருந்தொகையில் அகழப்படுகின்றது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கங்கள் ஏதுமின்றிய மனித நடவடிக்கைகளால் நன்னீர் வளம் மட்டுமல்ல இயற்கையின் சமநிலையும் பாதிக்கப்படுகின்றது.

வருமானம் குறைந்த மக்களுக்கு வீட்டுத் திட்டம், மலசல கூடத் திட்டம் எனப்பல திட்டங்களை அரசாங்கம் வழங்குகின்றது.

மணல் பெறுவதற்கு இவர்கள் சென்றால் வாரக் கணக்கில் சில நேரம் மாதக் கணக்கில் காத்திருக்க நேரிடுகிறது. அதனால் திட்டங்கள் தாமதமாகின்றன.

பணம் படைத்தோர் ஏதோ ஒரு வழியில் ஓடி தேவைப்படும் நேரத்தில் மணலைப்பெற்றுவிடுவார்கள்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவ்வப்போது மாற்று வழிகளும் கண்டறியப்படுகின்றன. பல இடங்களில் கடைகள் கட்டப்பட்டு பூட்டப்பட்டு உள்ள நிலைமையால் கட்டுமானத்துக்குப் பயன்பட்ட மணல் பெருந்தொகையில் முடங்கியே உள்ளது.


கடைகளும் புறாக்கள் குடியிருக்கும் இல்லங்களாக மாறி விட்டன. குடும்ப எண்ணிக்கைக்கேற்ப வீடு கட்டி வாழும் நிலைமை குறைந்து வசதி உள்ளவர்கள் பெரிய வீடுகளைக் கட்டி ஓரிருவர் இருப்பது அல்லது வெறுமனே வைத்திருப்பதைப் பல இடங்களிலும் காண முடிகிறது.

சின்னம் சிறு மண் வீட்டில் பலர் குடியிருந்து கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த சமூகம் தேவைக்கு மிதமிஞ்சி பென்னம் பெரிய வீடுகளைக் கட்டி காசை முடக்குகின்றது.

மரங்கள் பல அழிக்கப்பட்டு கட்டடங்கள் மதில்கள் கட்டப்பட்டு அதனால் சூழலின் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது.

கட்டடக்காடுகள் மட்டும் நாட்டை வளம்படுத்தாது. தூரநோக்கற்ற நடைமுறைச் சாத்தியமான வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கான விழிப்புணர்வு சமூகத்துக்கு ஊட்டப்படல் வேண்டும்.

உழைக்கின்ற பணம் உருப்படியாகச்செலவழிப்பதில்விழிப்புணர்வுள்ள சமூகம்தான் காலத்தின் தேவை. ■



# 'பக்கிரி': வாழ்க்கையின் தத்துவம்

விமர்சனம்

குற்றம் செய்துவிட்டு பொலிஸிடம் சிக்கிக்கொண்ட மூன்று இளைஞர்களைச் சந்திக்கிறார் தனுஷ். அவர்களை நல்வழிப் படுத்துவதற்காக தனது வாழ்க்கைக் கதையைக் கூறுகிறார்.

சிறுவயதில் இருக்கும் போது சிறுசிறு திருட்டுகள் செய்து பொலிஸில் மாட்டிக் கொள்கிறார் தனுஷ். வெளியே வந்த பிறகும் திருட்டைத் தொடர்ந்து செய்து வருகிறார். அப்போது மஜிக் செய்து பணம் சம்பாதிப்பவர்களைப் பார்த்த தனுஷ், தனது கூட்டாளிகளுடன் சென்று பணத்தைத் திருடுகிறார்.

அப்பா யார் என்றே தெரியாமல் இருக்கும் தனுஷை, அம்மாதான் சிரமப்பட்டு வளர்க்கிறார். அம்மாவின் இறப்புக்குப் பிறகு தன் தந்தை பரிசில் இருப்பதை அறிந்து அங்கே செல்கிறார். பரிஸ் சென்ற தனுஷ் வாழ்க்கையில் என்ன நடந்தது? தன் கதை மூலம் மூன்று இளைஞர்களை நல்வழிப்படுத்தினாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நாயகனாக நடித்திருக்கும் தனுஷின் நடிப்பு சிறப்பு. அவரது திறமைக்குத் தீனி போடும் விதத்தில் நகைச்சுவை, உணர்வுகள், காதல் எல்லாம் கலந்த கதையாக இப்படம் அமைந்திருக்கிறது. சண்டைக் காட்சிகள், பஞ்ச் வசனங்கள் இல்லாமல்,



மிகவும் இயல்பான தனுஷை இப்படத்தில் பார்க்க முடிகிறது. வாழ்க்கை ஓட்டத்தில் பல்வேறு விதமான சூழ்நிலைகளிலும் மனிதர்களிடமும் சிக்கித் தவிக்கும் காட்சிகளில் கலக்கி இருக்கிறார்.

ஒரே காட்சியில் தனுஸுடன் காதலில் விழும் எரின் மொரியாட்டி, அழகு பதுமையாக வருகிறார். நடிகையாகவே வரும் இன்னொரு நாயகி பெரினைசி பெஜோவும் படத்துக்குச் சிறப்பான தேர்வு.

தனுஷின் கூட்டாளியாக வரும் பர்காத் அப்டி, சுங்க அதிகாரியாக வந்து நகைச்சுவை செய்யும் பென் மில்லர், தனுஷின் அம்மாவாக வரும் அம்ருதா ஆகியோரும் படத்தை சுவாரஷ்யமாக நகர்த்துகிறார்கள்.

பல நாடுகளில் நடக்கும் கதை என்பதால் வின்செண்ட்டின் ஒளிப்பதிவு அந்தந்த நாட்டின் சிறப்பான இடங்களை அழகாகக் காட்டியுள்ளது. பரசூட்டில் தனுஷ் பறக்கும் காட்சிகளும் ஈபிள் டவர் காட்சிகளும் கண்களுக்கு விருந்து படைத்திருக்கின்றன. நிக்கோலஸ், அமித் திரிவேதி கூட்டணியின் இசை ரசிக்க வைத்திருக்கிறது.

மிகவும் எளிமையான கதையை ஆர்ப்பாட்டம் இல்லாமல் மிகவும் ரசிக்கும்படி கொடுத்திருக்கிறார் இயக்குநர் கென் ஸ்காட். வாழ்க்கையின் தத்துவத்தை எளிய கதை மூலம் உணர்த்தியிருக்கிறார். ஆங்கிலப் படங்களுக்கே உரித்தான சில லொஜிக் மீறல்கள் இப்படத்திலும் காண முடிகிறது.

மொத்தத்தில் 'பக்கிரி' வாழ்க்கையின் தத்துவம்.

# சுமந்திரனிட்டை படிக்க வேணும் மாவை

எப்பவும் தன்ரை பிள்ளையைப் பற்றித் தான்தான் பெருமையாகச் சொல்ல வேணும். தன்ரை பிள்ளையைக் கூடாது எண்டும், தரம் தாழ்த்தியும் அதைப் பெத்த ஆக்களே சொல்லத் துவங்கினால் மற்றவை இன்னும் படு கேவலமாச் சொல்லத் துவங்கி விடுவினமெல்லே!

இப்ப ஏன் இதைச் சொல்லவாறன் எண்டால் எங்கடை கூட்டமைப்பு மாவை இருக்கிறாரெல்லே, அவர் எப்பவும் எல்லாப் பேப்பரிலையும் ஒரு சொல்லைத் தொடந்து பாவிச்சுக் கொண்டு வாறார். அது என்ன தெரியுமே? "நாங்கள் சிறு பான்மையினர்... சிறுபான்மைத் தமிழர்.." எண்டு திரும்பத் திரும்பச் சொன்னால்.... எங்கடை எதிரி எங்கடை தலைக்கு மேலை ஏறி நிண்டு வாய்வு பறிப்பான் என்ன?

அடிக்கடி "சிறு பான்மைத் தமிழர்களாகிய நாங்கள்...." அதை மாவை சொல்லியே உலகத்துக்குத் தெரிய வேணும். இப்பிடி நான் சொல்ல, முதலி சொல்லுறான் "அண்ணை மாவைக்கு அவ்வளவு அறிவும், அனுபவமும் இருந்திருந்தால் எப்பவோ எங்களுக்கு விமோசனம் கிடைச்சிருக்கும். அதாலை அந்தாளைக் கோவிச்சுப் பிரியோசனமில்லை. சட்டியிலை இருந்தால்தானே அகப்பையிலை வரும். இது சட்டிக்கையும்இல்லை.பானைக்குள்ளையுமில்லை. வீட்டுக்கையும் இல்லை...போ...!"

முஸ்லிம்களைப் பாருங்கோ. அவங்களைப் பாத்தாவது மாவை திருந்த வேணும். அவங்கள் எப்பவும் தங்களை சிறுபான்மை எண்டு சொல்லாங்கள்.உண்மையாச் சொல்லப்போனால் முஸ்லிம் தங்கடை மத அடையாளத்தை வைச்சுக் கொண்டு திரும்பத் திரும்ப "முஸ்லிம் இனம்" எண்டு சொல்லித் தங்களை ஒரு புறம்பான இனமாக்கிப் போட்டாங்கள். இனமாக்கிப் போட்டு "எங்களுக்குரிய எல்லாச் சலுகையளையும் தாங்கோ... தாங்கோ" எண்டு நாட்டாமை விடத் துவங்கி விட்டாங்கள். இப்ப குண்டு வெடிச்சாப் பிறகெல்லோ கொஞ்சம் அடங்கிக் கிடக்கிறாங்கள்.

எண்டாலும் கதையிலை ஹிஸ்புல்லா விட்டுக் குடுக்கிறானோ பாருங்கோ. "உலகத்திலை நாங்கள்தான் பெரும்பான்மை. எங்களிட்டைக் கனக்க எண்ணை வயலுகள் இருக்கு. நாங்கள்தான் பெரும் பணக்காரர்கள்" எண்டு ஓயாமல் கத்தின படி. சரி எண்ணை வயல் எங்கடை ... எங்கடை எண்டு கத்திற ஹிஸ்புல்லாக்குத் தெரியேல்லை இஞ்சை இருக்கிற கன முஸ்லிம் சனத்திட்டை சொந்தக் கிணறு கூட இல்லை, தண்ணி அள்ளிக் குடிக்கிறதுக்கு எண்டு.

உலகத்திலை பெரும்பான்மை நீங்கள். உங்களிட்டை கனக்க எண்ணை வயல் கிடக்கு. எல்லாத்தையும் ஒத்துக் கொள்ளுறம். ஆனால் எங்கை நீங்கள் ஒற்றுமையா இருக்கிறியள் எண்டு சொல்லுங்கோ பாப்பம்? எங்கும் சண்டையும், சச்சரவும், பிடுங்குப்பாடும், அடிபிடியும் தானே! இப்ப ஈரான்காரனுக்குக் குறி வைக்கப் போறாங்கள் பாருங்கோவன். சவுதிக்காரன்தான் முறுகிக் கொண்டு நிக்கிறான். அவனை அமெரிக்கா முறுக்கிக் கொண்டு இருக்கிது. இந்த முறை விடாங்கள் போலை. றம்மும் இந்த விசியத்திலை கடி நாய் மாதிரித்தான் நிக்கிறான். ஒருகாலத்திலை சும்மா தன்ரை பாட்டிலை கிடந்த ஈரானையும், ஈராக்கையும் அங்கை இருக்கிற எண்ணையைக் கொள்ளையடிக்க வேணும் எண்டதுக்காக உசுப்பிவிட்டது அமெரிக்கா தான் எண்டது எல்லாருக்கும் தெரியும்.

நான் எங்கையோ துவங்கி எங்கையோ போயிட்டன்.மாவையிலை துவங்கினனான். மாவையிலையே முடிப்பம், என்ன? அப்ப மாவை தன்ரை பெடியை அரசியலுக்கை கொண்டு வாறதெண்டதிலை குறியா இருக்கிறார். போற வாறவையிட்டை கனகசபாபதியை வைச்சு "நல்ல பிள்ளை" எண்டு சொல்ல வைக்கிறார். அப்ப தன்ரை பிள்ளையைத் தான்தான் நல்லதாச் சொல்ல வேணும் எண்டு மாவைக்குத் தெரியுதெல்லே? அது மாதிரித்தான் எங்கடை கதையும். திரும்பத் திரும்ப "தமிழர் சிறுபான்மையினர்" எண்டு சொல்ல வேண்டாம். இது சிங்களவன் தமிழர் சிறுபான்மை இனம் எண்டதை மறந்து போனாலும் மாவை ஞாபகப்படுத்திச் சொல்லிக் குடுக்குமோ தெரியாது! அண்டைக்கு ஒரு கூட்டத்துக்கு வந்து வெளியிலை பஜிரோவுக்கை இருந்து கொண்டு மாவையின்ரை பெடி, கான்போனை வைச்சு விளையாடிக் கொண்டு இருக்கிது. மாவை கூட்டத்துக்கை பாத்திது, பெடியைக் காணேல்லை. உடனை ஓராளைப் பிடிச்சு தன்ரை பெடியைக் கூட்டிக் கொண்டு வரச்



சொல்லி ஆளை அனுப்பின மாவைக்குத் தெரியாதோ, அது மாதிரி தன்ரை இனத்தையும் கௌரவப்படுத்த வேணும் எண்டு?

சில விசியங்களிலை மாவை தான் தமிழரசுக் கட்சியின்ரை தலைவர் எண்டதை மறந்துபோட்டுப் போய் சுமந்திரனிட்டை ரியூசன் எடுக்க வேணும். பொய் சொல்ல அல்ல. எப்பிடி இல்லாதது ஒண்டை இருக்கெண்டு காட்ட. உதுக்கு வெக்கப் படப்பிடாது. சிவபெருமான் முருகனிட்டைப் பாடங் கேட்டவர் எண்டெல்லே படிச்சனாங்கள். அப்ப அவர் படிக்க வெக்கப் படேல்லை எல்லே? போய் ஒரு நல்ல நாளாப் பாத்து வடிவாக் கேட்டுப் படியுங்கோ. ஒற்றை றூள் கொப்பி, சதுர றூள் கொப்பி பேனை எண்டு ஒண்டையும் மறக்காமல் வேண்டிக் கொண்டு போங்கோ என்ன?

– வில்லங்கம் விநாசி

# புளொட்டின் இலக்கு தமிழீழமே!

"புளொட் அமைப்பின் இராணுவப் பொறுப்பாளராக இருந்தவர் மாணிக்க தாசன். அவர் மீது பல்வேறு படு கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டிருந்தன. பொதுமக்கள் மாணிக்க தாசன் என்றாலே நடுங்கினர். அப்ப டிப்பட்ட மாணிக்கதாசன் 02.09.1999 அன்று கிளைமோர் தாக்குதலில் வவுனியாவில் கொல்லப்பட்டார். அதற்கு முன் எடுக்கப்பட்ட இறுதி நேர் காணல் இது.

மாணிக்கதாசன் அரசோடு இணைந்து பல தமிழ் இளைஞர்களை காணாமல் ஆக்கிக்கொண்டிருந்த காலத்தில், 'சரி நிகர்' பத்திரிகையின் மே-1999ஆவது இதழில் வெளிவந்த இந்த நேர் காணல், இங்கு மறு பிரசுரமாகின்றது)

**நேர்கண்டவர் - என்.சரவணன்**
**(ஆனந்தன் என்கிற பெயரில் மே 1999 - சரிநிகரில் வெளிவந்தது.)**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) இராணுவத் துறைப் பொறுப் பாளராக மாணிக்க தாசன் சொல்லப் படுகின்ற போதும் அவ்வியக்கத்தின் முழுக் கட்டுப்பாடும் இவரின் கீழேயே இருப்பது இரகசியமல்ல. புளொட் இயக்கம் குறித்த பல்வேறு விமர் சனங்கள் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன, அடிப்படையில் அவ்விமர் சனங்களின் சாராம்சம் எதிரியோடு சேர்ந்து செயற்படுவது, மற்றும் மக்களுக்கு துரோ மிழைத்து வருவது, இவ்விமர்சனங்கள் குறித்து சம்பவங்களாக வினாக்களைத் தொடுக்காது அடிப்படையான அரசியல் கேள்விகளாகவே இந்த பேட்டி தயாரிக் கப்பட்டது. கேள்விகளைக் கேட்பது எங்களின் கடமை. அதற்கு பதில் தருவது அவரின் பொறுப்பு. மற்றவை வாசகர்க ளின் சுதந்திரம்.

**கேள்வி :** கழகம் (புளொட்) ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திலிருந்து தற்போதைய அதன் நடவ டிக்கைகள் தலைகீழாக மாறி இருப்பதாகவும், அது இன்று துரோகக் கும்பலாக ஆகியிருக்கிறது என்றும் எழுந்துள்ள பரவலான குற்றச்சாட்டுக் குறித்து உத்தியோக பூர்வமாக என்ன கூறு வீர்கள்?

**மாணிக்கதாசன்:** எமது அரசியல் மற் றும் இராணுவச் செயற்பாட்டில் எதை எடுத்துக் கொண்டாலும் நாங்கள் அர சோடு இணைந்தது கிடையாது. ஒரு பரந்த வெகுஜன அமைப்பாக ஒருகாலத்தில் நாங்கள் இருந்தது உண்மை தான். தவிர்க்க முடியாமல் ஆயுதம் தரித்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம். எமது ஆயுதமயமாக்கலில் ஏற்பட்ட தாம தம் புலிகளுக்கு வெற்றியை ஏற்படுத்தி விட்டது. போராட்டத்தைப் பொறுத்த வரை ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ் வொரு இயக்கமும் பலம்பெற்று முன் னுக்குவந்த வரலாற்றைக்காண்கின்றோம். புளொட் ஒரு கட்டத்திலும் ஈ.பி.ஆர். எல்.எப். ஒரு கட்டத்திலும் இன்னொரு கட்டத்தில் ரெலோ என்றும் ஏன் ஒரு கட்டத்தில் புலியுமாக இந்த வகையான செல்வாக்கு, ஆதரவு பெறுதல் தளப்பிர தேசங்களை கொண்டிருத்தல் போன்ற வற்றைக் காணலாம். இந்தக் காலகட்டத் தில் புலிகள் தங்களின் பாசிசத்தைப் பயன்படுத்தி ஏனைய இயக்கங்களை நசுக்கி தம்மைத் தாமே தலைமைக்குக் கொண்டு வந்து விட்டனர். சுழற்சி முறையில் இந்தத் தலைமைகள் மாறிய நிலை போய் ஒரு கட்டத்தில் புலிகள் தம்மை நிரந்தரமாக்கிக் கொண்டனர். இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மக்கள் ஆத ரவும் இருக்கத் தான் செய்யும். ஆனால் அதன் அர்த்தம் மக்களின் உண்மையான தலைமை அது தான் என்பதோ அல்லது அவர்களின் வழிமுறை தான் சரியென் பதோ ஏனைய இயக்கங்கள் தவறானவை, தமிழின விடுதலைக்கு எதிரானவை என் பதோ அல்ல.

எமது போராட்டத்தைப் பொறுத்த வரை ஆயுதந் தாங்கிய எதிர்ப்புகளை போர் என்றும் அரசியல் ரீதியான போராட் டத்தை போராட்டம் என்றும் தான் நாங் கள் அழைக்கிறோம். இன்றைய நிலையில் பாசிசத்தின் உச்சக் கட்டத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், புலிகளும் நிலை கொண்டுள்ள பகுதியில் இருந்து கொண்டு புலி உறுப்பினர்கள் எவரையும் விமர்சிக்க முடியாத சூழலில் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் மாறாக தென்னிலங்கையில் ஆசை தீருமட்டும் ஜனாதிபதியையோ ஏனைய அரசியல்வாதிகளையோ கடுமையாகத் தாக்கி விமர்சிக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு. எந்த வழிமுறைக்கூடாக வட கிழக்குப் பிரதேசத்தில் நாங்கள் காலூன்றி நிற்க முடியுமோ அந்த வழிமுறையைப் பாவித்தே நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்திய இராணுவம் இருக்கும் போது புலிகள் அரசுடன் நெருக்கமாக இருந்த போது நாங்கள் கொழும்பில் கூட சுதந்திர மாக உலாவ முடியாத நிலையில் தான் இருந்தோம். எமது உறுப்பினர்கள் வத்த ளையில் ரயர் போட்டு புலிகளால் எரிக் கப்பட்டனர். எம்மில் பலர் இந்தியாவை நோக்கிப் பின்வாங்க நேரிட்டது. ஆனால் என்றோ ஒரு நாள் இந்தியாவும் புலிகளும் மோதிக் கொள்வார்கள் என்பதை உணர்ந் தோம். கிழக்கும் கிழக்கும், அல்லது மைனசும் மைனசும் ஒன்று சேருவதில்லை அல்லவா? இரு தரப்பும் மோதல் ஏற் பட்ட போது நாங்கள் இராணுவ உயர் அதிகாரி களுடன் தொடர்பு கொண்டு பேசி திரும்பி வந்து எமது பிரதேசங்களில் செயற்பட ஆரம்பித்தோம்.

அதிலிருந்து எமக்கான தனித்துவ மான போக்கைத் தான் கடைப் பிடித்து வருகிறோம். இன்று அரசும் புலிகளை எதிர்க்கிறது. நாங்களும் புலிகளை எதிர்க் கிறோம். ஆனால் இவை இரண்டுக்கு மிடையில் அடிப்படையில் வித்தியாசம் உண்டு. புலிகள் எங்களை எதிர்ப்பதால் தான் நாங்களும் எதிர்த்து நிற்க வேண்டி யேற்பட்டுள்ளது. எனவே தான் வெளிப் பார்வைக்கு தோன்றுவதை வைத்துக் கொண்டு நாங்கள் படையுடன் சேர்ந்து செயற்படுகிறோம் என்று கூறுவது பிர சார ரீதியில் எவருக்கும் வசதியாக இருக் கும். ஆனால் அரசுடன் எவ்வளவு முரண் பட்டு செயற்படுகிறோம் என்பது வெளிக் கொணரப் படுவதில்லை. நாங்கள் எத்த னையோ தடவைகள் பொலிசுக்கு அடித்தி ருக்கிறோம். இராணுவத்துக்கு அடித்தி ருக்கிறோம். அப்படி அடித்த எத்தனையோ எங்களின் உறுப்பினர்கள் இன்னமும் சிறை களில் இருந்து வருகிறார்கள். புலிகளின் செய்திகளுக்கு முக்கியத்து வம் கொடுக் கும் தொடர்பூடகங்கள் எங்களின் இந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்ப தில்லை. அரசாங்கத்துக்கு எதிராக எத்த னையோ போராட்டங்களை முன்னெடுத் திருக்கிறோம். 1952க்குப் பின்னர் நாடாளு மன்றத்துக்கு முன்னால் இருந்து உண்ணா விரதம் மேற் கொண்ட கட்சி நாங்கள் தான். வவுனியாவில் எல்லைப்புறங்களில் அரசாங்கத்தால் செய்ய முனைந்த எத்த னையோ குடியேற்றங்களைத் தடுத்து அந்த இடங்களிலேயே நிறுத்தி விட்டுள்ளோம். ஆனால் புலிகளின் பலமான பிரசார இயந்திரங்களால் தான் இவை மறைக் கப்பட்டு விட்டன.

**கேள்வி :** புலிகள் ஒரு கட்டத்தில் தங்களை பலப்படுத்தி அதனையே நிரந்தரமாக்கிக் கொண் டதாகக் கூறினீர்கள். அந்நிலைமை புலிகளின் பலத்தால் ஏற்பட்டதா அல்லது கழகத்தின் பலவீனத்தால் ஏற்பட்டதா?

**மாணிக்கதாசன்:** ஒவ்வொரு கட்டத்தி லும் ஒவ்வொரு இயக்கமும் பலம் பெற்ற போதும் அவை சக இயக்கங்களுக்கு எதி ராக பாசிசத்தைப் பாவித்து இருப்பை உறுதி செய்யவில்லை. அதைச் செய்தவர் கள் புலிகள் தான். அதன் மூலம் தான் அவர் கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முடிந்தது.

**கேள்வி :** உங்களின் கருத்து இராணுவ ரீதியிலான விடயத்தில் பொருந்தக் கூடும். ஆனால் அரசியல் ரீதியில் உங்கள் பலம் நிரூபிக்கப்படவில்லையே?

**மாணிக்கதாசன்:** புலிகள் மட்டுமென்ன அரசியல் ரீதியில் பலம் பெற்றவர்களா? அவர்களின் பலமும் இராணுவப் பலம் தான். அவர்களின் உறுப்பினர்கள் அல் லது அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் அரசியல் மயப்படுத்தப் பட்ட வர்களா என்ன? போராட்டத்தைப் பொறுத்த வரை ஆரம்பத்திலிருந்தே மக்களை அரசி யல் மயப்படுத்துவதில் புளொட், ஈ.பி. ஆர்எல்.ப்., ஓரளவில் ஈரோஸ் ஆகியவை தான் அக்கறைகாட்டி வந்துள்ளன. புலி கள் ஒரு கட்டத்துக்கு மேல் வளரமுடி யாமலிருப்பதும் இந்தக் குறைபாட்டால் தான்.

**கேள்வி :** அரசியல் ரீதியில் கழகம் மற்றும் தமிழ் இயக்கங்களுக்கு இருக்கும் ஆதரவுக்கும் புலிகளின் மீது இருக்கும் ஆதரவுக்கு மிடையில் வித்தியாசம் இருக்கிறது அல்லவா?

**மாணிக்கதாசன்:** புலிகள் தங்களின் இரா ணுவப் பலத்தை தமிழ் இயக்கங்கள் மீது திருப்பி விட்டார்கள். ஏனைய இயக்கங் கள் அவ்வாறு செய்து தங்களை நிலை நிறுத்திக் கொண்டதில்லை.

**கேள்வி :** சரி, இப்படிக் கேட்டால், இன்று கழகத்தில் உள்ள உறுப்பினர்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டவர்களா?

**மாணிக்கதாசன்:** எல்லோரும் அரசியல் மயப்படுத்தப் பட்டவர்கள் என்று கூற முடியாது. ஆனால் இராணுவப் பிரிவில் உள்ளவர்களுக்கு தேவையான அரசியல் வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. குறிப் பாக ஆயுதம் ஏந்துவதன் நோக்கம்? யாருக்கு எதிராக அதனைப் பயன்படுத்த வேண்டும்? போன்றவற்றை அடிப்படை யாகக் கொண்ட அரசியல் கல்வி வழங்கப் பட்டுள்ளது.

**கேள்வி :** அரசியல் துறைக்கும், இராணுவத் துறைக்குமிடையிலான உறவு எப்படிப் பட்டதாக இருக்க வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

**மாணிக்கதாசன்:** இரண்டையும் வேறு வேறாகப் பிரிக்க முடியாது. அரசியல் இலக்குகளுக்கு அமையத் தான் இராணுவ வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். இராணுவ ரீதியான செயற்பாட்டை நியா யப்படுத்தும் நோக்குடன் அரசியல் பிரிவை நடாத்த முடியாது. இவை இரண்டுக்கு மிடையிலான உறவுகள் ஒன்றுடன் ஒன்று விட்டுப் பிரியாததாக இருப்பது அவசி யம். ஆனால் இன்றைய யுத்தசூழ்நிலை யின் காரணமாக இராணுவ ரீதியான ஆலோ சனைக்கிணங்க அரசியல் வியூகங்கள் உரு வாக்கப்பட வேண்டுமென்பதும் அத்தியாவ சிய மானது. இன்று இதே போன்ற முறை யைத் தான் இலங்கை இராணுவத்திலும் கடைப்பிடிக்கிறார்கள். பிரிகேடியர் மட் டத்திலுள்ள ஒருவர் இணைப்பாளராக நிய மிக்கப்பட்டுள்ளார். அவர் ஏனைய சிவில் நிலைமைகளின் சாதக பாதகங்களைக் கருத்திற்கொண்டே இராணுவ விவகாரங் களை நகர்த்துகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**கேள்வி :** ஏனைய இயக்கங்களோடு ஒப்பிடு கையில் கழகத்தில், அரசியல் துறையைவிட இராணுவத்துறைக்கே அதிகம் முக்கியத்துவம் வழங்கப் படுவதாக கூறப்படுகின்ற் குற்றச் சாட்டுக் குறித்து...?

**மாணிக்கதாசன்:** நேரடியாக பாசிசத் துக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலை யில் இராணுவத்துறையின் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. இப்படிப்பட்ட நிலை யில் அரசியற்துறை அதனைக் கட்டுப் படுத்த முடியாது. அரசியல் ரீதியான செல் வாக்குக்கு எவ்வளவு தூரம் அனுமதிப்பது என்பதை அப்படிப்பட்ட நடைமுறை தான் தீர்மானிக்க முடியும்.

**கேள்வி :** சமீபத்தில் கூட கழகத்தின் இராணுவச் செயற்பாடுகள் குறித்து அரசியல் பிரிவிடம் கேள்வி கேட்க வேண்டாமென கழகத் தின் அரசியற் பிரமுகர் கூறியிருக்கிறார். அப்படி யென்றால் இராணுவச் செயற்பாடு குறித்து அரசியல் ரீதியில் பொறுப்பு கூற மாட்டோம் என்றல்லவா அர்த்தம்?

**மாணிக்கதாசன்:** அப்படியில்லை. கட் டுப்பாடும், இறுக்கமும் கொண்ட இராணு வமாக இருக்கும் பட்சத்தில் அவ்வாறு ஏற்பட வாய்ப்பில்லை. இன்று பிரபாகர னுக்கு இருக்கின்ற தலையிடியை விட எமக் குத் தான் அதிகம். ஏனென்றால் நாங்கள் மக்கள் மத்தியில் இருந்து வருகிறோம். மக்களுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் பதில் கூறிவருகிறோம். வருஷத்துக்கு ஒரு தடவை கதைக்கும் புலிகளுக்கு இந்தச் சிரமங்கள் தெரியாது.

**கேள்வி :** சரி, கடந்த ஒரு தசாப்த காலமாக நீங்கள் எவ்வாறான அரசியல் வெற்றிகளை அடைந்திருக்கிறீர்கள்?

**மாணிக்கதாசன்:** அரசாங்கம் செய்ய முயற்சித்த குடியேற்றங்கள் பலவற்றைத் தடுத் திருக்கிறோம். ஜெனரல் கொப்பே கடு வவுக்கூடாகவும் இந்த முயற்சிகள் இரகசியமாகச் செய்யப்பட்ட வேளை நாங் கள் கடுமையாக எதிர்த்து நின்று அதனை செய்ய விடவில்லை. அதில் எங்களுக்குப் பெரும் திருப்தி. அவ்வாறான தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் சின்ன வயசு கல்வியறிவற்ற பெடியன்களே சமயோசித மாக மேற்கொண்டனர். அதேவேளை நாங் கள் ஏறத்தாழ 12 தமிழ் குடியேற்றங்களை எல்லைப்புறங்களில் நிறுவியிருக்கிறோம். அவற்றுக்கூடாக கிராமங்கள் சிலவற்றை உருவாக்கி யிருக்கிறோம்.

**கேள்வி :** வேறு...?

**மாணிக்கதாசன்:** வேறு... சிரமதானங் கள், கணவர் இழந்தவர்கள் மற்றும் அகதி களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள், நோயா ளர்களுக்கான உதவிகள், வசதியிழந்தவர் கள் தங்களின் உடல்களை அடக்கம் செய் வதற்கு உதவி, மாரி காலங்களில் அடி மட்ட மக்களுக்கு ஆயிரக்கணக்கான கிடுகு களை விநியோகித்து வருகிறோம். மக்கள் கடைகள் சிலவற்றை அமைத்து வருகி றோம்.

**கேள்வி :** ஒரு தசாப்த காலமாக நீங்கள் செய்ததாகக் கூறிய மேற்படி செயற் பாடுகள் குறித்து நீங்கள் திருப்தி காண்கிறீர்களா?

**மாணிக்கதாசன்:** திருப்தி கண்டதால் தான் மக்கள் எங்களிடம் பிரதேச சபை யையும் மூன்று பாரளுமன்ற பிரதிநிதித் துவத்தையும் தந்திருக்கிறார்கள். மக்கள் திரும்பிக் கொண்டிருப்பதன் சமிக்ஞை தான் அவை.

**கேள்வி :** நீங்கள் செய்ததாக் கூறிய சில சீர்திருத்த நடவடிக்கைகளை கருத்திற் கொள் ளும் போது ஒரு போராளி இயக்கத்தின் கொள் ளளவு இவ்வளவு தானா என்கின்ற கேள்வி எழுகிறது அல்லவா?

**மாணிக்கதாசன்:** அவ்வளவு மட்டுமல்ல. ஜனநாயக வழிக்கு வந்த ஏனைய இயக் கங்களோடு ஒப்பிடுகையில் நாங்கள் தான் மக்களின் பல பிரச்சினைகள் குறித்து ஜனநாயகரீதியில்போராடியிருக்கிறோம். உண்ணாவிரதங்கள், கடையடைப்புகள் என எங்களின் எதிர்ப்புக்களைத் தெரி வித்து வந்திருக்கிறோம். சர்வதேச ரீதியில் இடம் பெற்று வரும் ஏகாதிபத்திய நட வடிக்கைகளை எதிர்த்தும் நாங்கள் ஆர்ப் பாட்டங்கள் பல நடத்தியிருக்கிறோம். போரில் நாங்கள் ஈடுபட முடியா விட்டா லும் போராட்டத்தில் நின்று கொண்டு தான் இருக்கிறோம். சுழற்சி அடிப்ப டையில் மீண்டும் நாங்கள் போருக்கும்

தள்ளப்படலாம். அந்த சுழற்சியின் அடிப்படையில் நாங்களும் புலிகளும் ஒன்றாகச் செயற்படும் நிலைமையும் ஏற்படலாம். ஒரு சுழற்சி முறையில் இராணுவத்துடன் இருக்கத் தள்ளப்பட்டுள்ளோம்.

**கேள்வி** : ஏன் பழைய நிலைக்குப் போக முடியாது?

**மாணிக்கதாசன்:** அந் நிலைமைக்கு போதிய வாய்ப்பு கிடைத்தால் நாங்கள் போருக்கும், போராட்டத்துக்கும் தயாராக இருப்போம். இன்று ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்கள் இராணுவ ரீதியில் தயாராவதற்கு இருக்கக்கூடிய பிரச்சினை எமக்கு இல்லை. எமக்கு நிறைந்த அனுபவம், தளப்பிரதேசம், வழிநடத்தல், இராணுவத்துறை சார்ந்த அறிவு என்பவை உண்டு. எங்களுக்கு அது இலகுவானது.

**கேள்வி** : சரி, கழகத்தின் ஆரம்ப கால அரசியல் இலக்கான "தமிழீழம், சோஷலிசம்" என்பவை இன்றும் செல்லுபடியானவை தானா?



**மாணிக்கதாசன்:** "பெரியவரின்" உண்மையான நோக்கம் வர்க்க ரீதியானது தான். சோஷலிசத் தமிழீழத்தை அடைய வேண்டுமென்பது தான் அவரின் இறுதி லட்சியமாக இருந்தது. அவர் இருந்த போது அதற்கேற்றவகையில் தான் கட்சியை வழிநடத்தினார். தென்னாசியாவில் ஒரு மோசமான ஏகாதிபத்திய சக்தியாகவே இந்தியாவையும் அவர் அடையாளம் கண்டார். அதன் அடிப்படையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்க்காத அதே வேளை அதனை ஏற்கவும் மறுத்தார். அது இரு நாடுகளின் வர்க்க நலன் சார்ந்த ஒப்பந்தம் என்பது அவரது கருத்தாக இருந்தது. அவரது கருத்துக்களின் வளர்ச்சியாகத் தான் தமக்கு எதிர்காலத்தில் ஒரு சாத்தியமான, சாதகமான நாடு தேவையென்பதால் மாலைதீவுப் புரட்சியை மேற்கொண்டோம்.

தமிழீழத்துக்கு ஆதரவான ஒரு நாட்டுக்கு தமிழீழம் பிரிவதால் அந் நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகள் ஸ்திரத்தன்மைகள் குழப்பமடையாத பின்தளம் ஒன்று தேவையென்பதால் தான் மாலைதீவுப் புரட்சி மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழப் போராட்டம் குறித்த மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.யுடன் கூட உறவுகளை வளர்த்து பரஸ்பர உதவிகளைப் பரிமாறிக் கொண்டதும் இந்த வர்க்க நோக்கத்துடன் தான். அந்த நோக்கிலிருந்து நாங்கள் விலகவில்லை. அந்த அடிப்படையில் தான் நாங்கள் இன்னமும் வவுனியாவில் பல இடங்களில் கூட்டுறவுப் பண்ணைகளை நடாத்தி வருகிறோம்.

**கேள்வி** : தமிழீழ இலக்கில் இன்றைய உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன?

**மாணிக்கதாசன்:** அந்தப் பதத்தை நேரடியாகப் பாவித்து அரசியல் செய்ய முடியாத, ஆயுதம் தாங்கிப் போராட முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆயுதம் தரிப்பது அவசியம். பிரச்சினை தீர்க்கப்படும் வரை ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது தான். அதற்காகத் தான் படைப் பிரிவினை நாங்கள் தொடர்ந்து வைத்திருக்கிறோம்.

**கேள்வி** : சரி இப்படிக் கேட்கிறேன். இன்று கழகம் என்கின்ற ஒரு இயக்கம் ஏன் தேவை?

**மாணிக்கதாசன்:** முன்னர் கூறியதைப் போல சுழற்சி அடிப்படையில் மீண்டும் நாங்கள் போர்புரியும் காலம் ஏற்படலாம். இன்றைய நிலையில் நிரந்தரமான ஒரு இலக்கைத் தீர்மானிக்க முடியாது.

**கேள்வி** : அப்படியென்றால் தமிழீழம் இலக்காக இருக்க முடியாது...?

**மாணிக்கதாசன்:** தமிமீழம் தானே எங்கள் நோக்கம். அதற்காகத் தான் நாங்கள் புறப்பட்டோம். அர்ப்பணிப்பு, தியாகம் எல்லாமே அதற்காகத் தானே. பிரபாகரன் சில வேளை செத்தால் அப்போது ஏற்படும் இடைவெளி, அல்லது போராட்டத்தில் ஒரு மந்தகதியான நிலைமை தோன்றினால் நாங்கள் முழுமையாக இறங்கும் முயற்சி தோன்றலாம். இன்று போராட்டம் திசை திரும்பிய நிலையில் அதனை நிறுத்தி விட்டுத் தான் திருப்பி சரியான வழியில் இயக்க வேண்டும்.

**கேள்வி** : அப்படியென்றால் இன்றுகூட உங்களின் பொது எதிரியாக...?

**மாணிக்கதாசன்:** என்றென்றைக்கும் எங்களின் பொது எதிரி ஸ்ரீலங்கா இராணுவம் தான்.

கேள்வி : **இராணுவமா? அரசா?**

**மாணிக்கதாசன்:** அரசு தான்.

**கேள்வி** : ஆனால் இன்று அந்த அரசுக்கும் இராணுவத்துக்கும் அல்லவா ஆதரவு வழங்கி வருகிறீர்கள்?

**மாணிக்கதாசன்:** இலங்கைப் பாராளுமன்றத்தில் இருப்பதால் நாங்கள் அரசு சார்பானவர்களா?

**கேள்வி** : ஆனால் அதன் மூலம் இந்த கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என்று கூறினால்................?

**மாணிக்கதாசன்:** நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிப்பதில் ஒன்றும் தவறில்லை. அந்த ஆசனங்களைப் பயன்படுத்துவதில் தான் எங்களின் வெற்றி தங்கியுள்ளது. அதனை எமது உரிமைக் குரலெழுப்பு வதற்காகப் பயன்படுத்துவதை விட்டு விட்டுத் தமது சொந்த மகிழ்ச்சிக்காகவும் சுயலாபங்களுக்காகவும் பயன்படுத்துவது தான் பிரச்சினைக்குரியது. எங்களுக்கு இருக்கிற இரத்தக் கொதிப்போ உணர்வோ எமது பாராளுமன்ற ஆசனங்களில் உள்ளவர்களுக்கு இல்லைத்தான். அது குறித்து எமது கட்சியில் பிரச்சினைகள் உண்டு.

**கேள்வி** : நீங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியதன் பின்...?

**மாணிக்கதாசன்:** இல்லை, நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பவில்லை. ஜனநாயக வழிக்கு வந்தால் நாங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும். இந்திய இராணுவம் இருந்த காலத்தில் நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிய போது பழைய ஆயுதங்களை வேண்டிக் கொண்டு புதிய ஆயுதங்களை ட்ரக்டர் ட்ரக்டராக அள்ளித் திணித்தார்கள். இலங்கை அரசாங்கத்திடம் ஜனநாயக வழிக்கு வந்துவிட்டதாகக் கூறியபோது அவர்களும் ஆயுதங்களை அள்ளித் தந்தார்கள். பின் எப்படி ஜனநாயக வழிக்கு வந்ததாகக் கூற முடியும். நாங்கள் விரும்பினாலும் இந்த அரசுகள் எங்களை விடப் போவதில்லை. இன்று ஆயுதங்களை பாசிசத்துக்கு எதிராகவும், அதேவேளை பொது எதிரியுடன் தந்திரோபாய ரீதியிலான உறவையும் கொண்டியங்கி வருகிறோம்.

**கேள்வி** : அந்த ஆயுதங்கள் நீங்கள் குறிப்பிடும் எதிரிக்கு எதிராகத் திருப்பப்படாமல் போராட்டத்துக்கு எதிராக திருப்பப்படுவதாக அல்லவா குற்றம் சுமத்தப்படுகிறது?

**மாணிக்கதாசன்:** எங்களை இந்த நிலைமைக்குத் தள்ளிய பொறுப்பை புலிகள் ஏற்க வேண்டும். அப்படிக் கொண்டு வந்து விட்டு அரசோடு நிற்கிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டை சுமத்துவதற்கு புலிகளுக்கு தார்மீக உரிமை கிடையாது. மீண்டும் தமது பிரதேசங்களில் சென்று போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தமிழ் இயக்கங்கள் தயாரானால் அதனைப் புலிகள் அனுமதிப்பார்களா? தம்மால் துரத்தப்பட்ட முஸ்லிம்களையே திருப்பி அழைக்காத புலிகள் எப்படி ஏனைய இயக்கங்களை அனுமதிப்பர்? ரெலோவை புலிகள் வேட்டையாடத் தொடங்கிய போது ரெலோ அரசோடு இருக்க வில்லை. மக்களோடு இருந்த காலத்தில் தான் புலிகள் நசுக்கத் தொடங்கினர். ஈ.பி.ஆர்.எல்.எப்க்கும் அதே நிலைமை தான். இந்த நிலைமையில் நாங்கள் மக்களோடு நிற்பதற்கு ஒரு பிரதேசம் வேண்டியிருக்கிறது. தற்காலிகமாக இராணுவம் நிலை கொண்டிருக்கிற பிரதேசத்தில் நாங்கள் நிலை கொண்டிருக்கிறோம் . அவ்வளவு தான்.

**கேள்வி** : சரி, புலிகளின் மீதான அழித்தொழிப்பு நடவடிக்கைகளில் புளொட்டும் ஈடுபட்டு வருவதாகச் சொன்னால்..?

**மாணிக்கதாசன்:** நாங்கள் புலிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி அழித்தொழிப்பில் ஈடுபட்டதில்லை. அவர்களிடம் இருந்து எங்களை தற்காத்துக் கொள்வதற்கான சந்தர்ப் பங்களில் மாத்திரம் தான் அவர்களுக்கு எதிராக ஆயுதம் தூக்கப்பட்டுள்ளது.

**கேள்வி** : இராணுவச் சோதனை நடவடிக்கைகளில்சேர்ந்து கூட்டாகசெயற்படுகிறீகள் அல்லவா?

**மாணிக்கதாசன்:** சுற்றி வளைப்புகளுக்கு ஒரு போதும் கழகம் போவது கிடையாது. ஆனால் நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் போன்ற பிரதான இராணுவ சோதனை சாவடிகளில் கழக உறுப்பினர்கள் இருத்தப்பட்டுள்ளனர். அதற்கான காரணம் மக்களை உறுதிப்படுத்தி மக்களுக்கு சிரமமேற்படாமல் அனுப்ப வேண்டியுள்ளது. அவர்கள் புலிகளின் பிரதேசத்திலிருந்து வரும் எல்லோரையும் சந்தேகப்படுகிறார்கள். புலி வருது புலி வருது என்று தான் பார்க்கிறார்கள். சில வேளைகளில் புலிகளும் வந்திருக் கிறார்கள். பிடிபட்ட எத்தனையோ புலிகளைக் கூட நாங்கள் வெளியில் எடுத்து விட்டிருக்கிறோம். அதனைச் சொன்னால் வெளியுலகம் நம்பாது. புலிகள் எங்களை துரோகிகள் என்று தான் முத்திரை குத்தி வைத்துள்ளனர்.

**கேள்வி** : உங்கள் இலக்கு எனக் கூறும் தமிழீழத்தை பாராளுமன்ற வழிமுறைக் கூடாக அடைய முடியுமென்கின்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

**மாணிக்கதாசன்:** பாராளுமன்றங்களுக் கூடாகவும் இணக்கங்கள் காணப்படலாம். அதற்கு உலகில் ஏகப்பட்ட விடுதலைப் போராட்ட அனுபவங்களும் உண்டு. ஆனால் ஆசியச் சூழலில் அதற்கான வாய்ப்புகள் குறைவு. அனைத்து உரிமைகளையும் கொண்ட தமிழீழத்தை இந்தப் பாராளுமன்ற வழிமுறைக்கூடாகப் பெற முடியாது.

**கேள்வி** : தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்ற சந்தேகம், கைது, தடுப்பு, சித்திரவதை என்பனவற்றுக்கு காரணமாகவுள்ள அவசரகால சட்டத்துக்கு உங்கள் இயக்கம் ஆதரவு அளித்து வந்தது பற்றி...?

**மாணிக்கதாசன்:** எந்தக் காலத்திலும் ஆதரவு வழங்கவில்லை. ஈபி.டி.பி. மட்டும் தான் தமிழ் இயக்கங்களில் அவசர காலச் சட்டத்துக்கு ஆதரவளித்து வருகிறது. மற்றும்படி கூட்டணி எதிர்த்து வாக்களிக்கிறது.

**கேள்வி** : அவசரகாலச் சட்டம் தொடர்பான கழகத்தின் நிலைப்பாடு என்ன?

**மாணிக்கதாசன்:** தமிழ் மக்களை நசுக்கப் பாவிக்கப்படும் இந்தச் சட்டத்துக்கு தமிழ் எம்பி.க்கள் ஆதரவளிப்பது பெரும் முட்டாள்தனம்.

**கேள்வி** : இந்த அரசாங்கம் பதவியேற்ற முதல் இருவருடங்களாக கழகம் ஆதரவளித்துத் தானே வந்திருக்கிறது?

**மாணிக்கதாசன்:** கழகத்திலுள்ள சில மிதவாதப் போக்கின் விளைவாகவும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**கேள்வி** : அந்தளவுக்கு கழகத்தின் அரசியல் சீரழிந்துள்ளதாகக் கூறலாமா?

**மாணிக்கதாசன்:** அரசியல் பிரிவுக்குள் சில முரண்பாடுகள் உண்டு தான். ஆனால் அவை குறித்து மேலதிகமாகப் பேச விரும்பவில்லை.

**கேள்வி** : சம்பவமாகக் கூறாமல் சிக்கலை மாத்திரம் கூறுங்களேன்?

**மாணிக்கதாசன்:** நாங்கள் பாசிச இயக்கம் இல்லையே. ஜனநாயக இயக்கம். அந்த விதத்தில். மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் எமது இயக்கத்தில் இருக்கிறது. அந்த வகையில் ஏற்படுகின்ற வாக்கு வாதங்கள் சில முரண்பாடுகளை தோற்றுவித்து விடுகின்றன.

**கேள்வி** : இயக்கத்தில் அரசியல் விவாதங்களுக்கான வழிகள் இருக்கின்றன அப்படியா?

**மாணிக்கதாசன்:** ஆம், அதன் காரணமாகத் தான் சில பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக வெளியில் பேசப்படுகிறது.

**கேள்வி** : வடகிழக்கில் சிவில் நிர்வாகம் தான் இருக்கிறது என உலகத்துக்கு பறைசாற்றவென வடகிழக்கில் பொதுவாக தேர்தல்கள் நடத்தப்படுவது வழக்கம். இந் நிலைமையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட இருக்கிறீர்களே?

**மாணிக்கதாசன்:** சகல தேர்தல்களும் தவறானவை என்பதல்ல. அதனை நாங்கள் ஏன் பயன்படுத்தக்கூடாது. அரசு எங்கும் சிவில் நிர்வாகத்தை அப்படியே நடத்தப்போவதில்லை. அதனை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

**கேள்வி** : வடகிழக்கில் சிவில் நிர்வாகம் இல்லையென்பது ஒரு போதும் கழகத்தால் அம்பலப்படுத்தப்பட்டதில்லையே?

**மாணிக்கதாசன்:** நாங்கள் இருக்கின்ற பகுதிகளில் மாத்திரம் தான் நாங்கள் பதில் சொல்லலாம்.

**கேள்வி** : ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் என அழைக்கப்படும் உங்கள் இயக்கம் வவுனியாவுக்கு மட்டும் தான் பொறுப்பு சொல்லுமா?

**மாணிக்கதாசன்:** மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிலும் எமக்குச் சேவை செய்ய அனுமதி கேட்டோம் அனுமதி தரவில்லை. ஆனால் வவுனியா மக்கள் தந்திருக்கிறார்கள். அங்கும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலும் மக்களுக்குச் சேவை செய்கிறோம்.

**கேள்வி** : அரசின் தீர்வு யோசனை தொடர்பாக..?

**மாணிக்கதாசன்:** வரலாற்றில் பல தலைவர்களைப் போல சந்திரிகாவும் பொதி எனும் பேரில் ஏற்க முடியாத யோசனையை முன்வைத்திருக்கிறார்.


**கேள்வி** : ஆனால் நீங்கள் ஆதரவளிப்பதாக பத்திரிகையில் செய்திகள் வெளியாகியிருந்தனவே?

**மாணிக்கதாசன்:** தீர்வு முயற்சிக்குத் தான் ஆதரவளித்தோமேயொழிய தீர்வுப் பொதிக்கு அல்ல. அதற்கு நாம் ஆதரவளிக்கவில்லை.

# பழி போட ஒரு தலை

( ஈரோஸ் அமைப்பின் மூத்த போராளியும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளராகவும் இருந்த முன்னாள் எம்.பி பஷீர் சேகுதாவூத்தின் பேஸ்புக் பக்கத்தில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம்.)

● **பஷீர் சேகுதாவூத்**



*1985 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தமிழ் முஸ்லிம் இனக்கலவரம் கொழுந்து விட்டு எரிந்த வாரங்களில் ஒரு நாள் கீழ் வரும் சம்பவமும் சம்பாசனையும் நிகழ்ந்தது.*

நானும், தோழர்கள் மறைந்த ஹூசைன் மற்றும் லத்தீப், றகுமான் ஆகியோரும் ஏறாவூர் கிராம நீதிமன்ற வீதியில் இருக்கும் பெரிய பாலத்தின் கனமான கம்பிகளின் மேல் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது வீதியால் வந்த 'அச்சிக் காக்கா' எங்களைப் பார்த்து "தம்பிமாரே இந்தத் தமுழனெல்லாம் கொல்லனுன்டா தம்பிமாரே!" என்று நெறு நெறுவெனப் பல்லைக் கடித்தும், சுட்டு விரலை உயர்த்தியும், கண்ணிமைகளை அகட்டியும் புருவங்களை உயர்த்தியும் பாவனை செய்தபடி சத்தமிட்டுக் கூறினார். அப்போது அச்சிக் காக்காவுக்கு 35 வயதிருக்கலாம்.

ஊரில் "கள்ளஞ்சீனி" என்று ஒரு மகா திருடர் இருந்தார். இவர் உள்ளூரில் களவுத் தொழில் செய்வதில்லை. வெளி ஊர்களிலும், வேறு மாவட்டங்களிலும், பாசிக்குடா போன்ற இடங்களுக்கு வரும் வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளிடமும்தான் திருடுவார். இவர் தொழிலை "லாவண்யமாகச் " செய்வார், திருடன் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவரின் திருட்டு என்றும் பிடிபட்டதில்லை.

திருமலையில் ஒரு பறங்கிப் பெண்ணை கத்தோலிக்கத்தில் இருந்து "இஸ்லாத்துக்கு எடுத்து" திருமணம் செய்து ஏறாவூரில் கொண்டுவந்து வைத்திருந்தார். இஸ்லாத்துக்கு வந்ததால் அந்தப் பறங்கிப் பெண் சீனிக்கு இப்போது 'ஹலால்' மனைவியாகும். மார்க்கத்தின் படி ஹறாமான களவை எப்போதும் இஸ்லாத்துக்கு மாற்ற முடியாது என்பதால் சீனியைப் பொறுத்தவரை களவு எப்போதும் ஹலால் தான்.

தான், களவு, மனைவி இம்மூன்றும் எப்போதும் இனிப்புத்தான் கள்ளஞ் சீனிக்கு!

சீனிக் காக்காவில் எனக்கு எப்போதும் ஒரு மென்மையான பார்வைதான் இருந்தது. இதற்கு ஒரு பிரதான காரணமிருந்தது. இவர் ஏறாவூர் பொலிஸில் "நல்ல தொடர்பைப்" பேணிவந்தார். அக்காலத்தில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில்தான் அதிரடிப்படை முகாமும் அமைந்திருந்தது. பகல் பொழுதுகளில் பெரும் பங்கை காவல் நிலையத்தில்தான் கழிப்பார். பொறுப்பதிகாரியோடு நல்லுறவு கொண்டிருந்தார். அது என்ன வடிவத்திலான நல்லுறவோ எனக்குத் தெரியாது.

என்னைப் பிடிப்பதற்காக பொலிஸ் திட்டமிடும் நாட்களில் 'சீனியர்' பெரும்பாலும் எங்களது பகுதிக்கு வந்து அல்லது செங்கலடி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மயிலம்பாவெளி போன்ற ஊர்களிலெல்லாம் அலைந்து திரிந்தாயினும் என்னைக் கண்டுபிடித்து" தம்பி உன்ன தேடி இன்டக்கி ஒங்கட ஊடு துடக்கம் நீ திரியிற இடமெல்லாம் சுற்றி வளைப்பு செய்யப் போறானுகள் நீ மெல்லமாறு " என்று தகவல் தந்துவிடுவார். இதனால்தான் இவர் மீது எனக்கு ஒரு வகை அன்பு இருந்தது.

ஒரு நாள் நானும் தோழர்களும் நள்ளிரவு நேரம் காட்டுப்பள்ளி வீதியால் போய்க்கொண்டிருந்த போது சூஃபி மன்ஸிலுக்கு அருகாமையில் அமைந்திருந்த "மல் கருடைய" திறந்த ஓடாவி பட்டடைக்குள் சுமாரான உயரத்தில் அடுக்கப்பட்டிருந்த மரப்பலகைகளின் மேல் பாய் போட்டு சீனி படுத்திருப்பதைக் கண்டோம். அவர் சேர்ட்டைக் கழற்றி பக்கத்தில் மடித்து வைத்திருந்தார்.

சீனியை நகைச்சுவைக்காக மிரட்டும் நோக்கோடு மெல்ல அவரருகில் சென்று நெற்றியில் விரலை வைத்து "ஹேன்ட்ஸ் அப் " என்று சத்தமிட்டேன். திடுக்கிட்டு எழுந்த சீனி எதிர்பாராதவிதமாக பாய்க்கு கீழே வைத்திருந்த பளபளக்கும் பெரிய வாள் ஒன்றைக் கையில் எடுத்தவாறு செக்கன் கணக்கிலான நேர இடைவெளியில் துள்ளி எழுந்து நின்றார். அடுத்த செக்கன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவி சீனியின் நெஞ்சுக்கு நேராக நீட்டினேன். நிலைமை பகடியிலிருந்து கறாராக மாறியது.

மெல்லிய வெளிச்சத்தில் சீனி என்னை அடையாளம் கண்டுகொண்டார். "டேய் தம்பி வசிறு நீயாடா?" எத்துன தரன்டா நாங் உன்ன அவனுகள்ட்ட இருந்து காப்பாத்தி இரிக்கன் என்ன சுட்றாதடா என்றார் சீனி. கறாரான நிலைமை தணிந்ததாயினும் பகடியான நிலைக்கு வரவில்லை. "காக்கா வாளக் கீழ வெச்சிட்டு கையை உயத்திக்கிட்டு அந்தா தெரியிற கிணத்தடிக்கு போய் நில்லு உசிரோட இரிக்கணுமிண்டா" என்று நான் சொன்னேன். அப்படியே செய்தார் சீனி. ஹூசைன் வாளை எடுத்தான்.

"சரி காக்கா போய்ட்டுவாறம்" என்று சொல்லிவிட்டு புறப்படும் போது "டேய் தம்பி நீ கைல வெச்சிரிக்கிறதப் போல ஒன்டு எனக்கும் எடுத்துத் தாடா" என்று கேட்டார் சீனி. "காக்கா இது போராட்டத்துக்கு நாங்க பாவிக்கம் களவெடுக்க பாவிக்கல்ல காக்கா" என்று கூறிவிட்டு புறப்பட்டோம்.

அன்றிரவு எங்களுக்கு சாப்பாட்டிற்கு வழியிருந்திருக்கவில்லை. பசி வயிற்றை கிள்ளிப் பிராண்டும் போதும் சீனி திடீரென எழும்புகையில் அவரது முதுகில் ஒட்டியபடி இருந்த பல நூறு ரூபா தாள்களை நாங்கள் ஆச்சரியத்தோடு பார்த்ததையும் சீனியின் தந்திரத்தை வியந்ததையும் நினைந்து பேசியவாறு ஹூசைனின் மூத்த காக்கா இஸ்மாயிலின் நைட் ஹோட்டலுக்கு வந்து கடனுக்கு பராட்டா உண்டோம்.

> **ஊரில் "கள்ளஞ்சீனி" என்று ஒரு மகா திருடர் இருந்தார். இவர் உள்ளூரில் களவுத் தொழில் செய்வதில்லை. வெளி ஊர்களிலும், வேறு மாவட்டங்களிலும், பாசிக்குடா போன்ற இடங்களுக்கு வரும் வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளிடமும் தான் திருடுவார். இவர் தொழிலை "லாவண்யமாகச்" செய்வார், திருடன் என்று எல்லோருக்கும் தெரியும் ஆனால் இவரின் திருட்டு என்றும் பிடிபட்டதில்லை.**

இப்போது, தமிழனெல்லாம் வெட்டணுண்டா தம்பி என்று எங்களைப் பார்த்துச் சொன்ன அச்சிக்காக்காவின் நிகழ்வுக்குத் திரும்புவோம்.

"சரி அச்சிக்காக்கா அவனுகள வெட்டத்தான் வேணும்" என்று சொன்ன நான் தோழர் றகுமானைப் பார்த்து போய் அந்த "வாள எடுத்துக்கிட்டு வாடா" என்றேன். கள்ளஞ்சீனியிடம் பறித்தெடுத்த வாளை றகுமானின் ராத்தாவின் வீட்டில்தான் ஒளித்து வைத்திருந்தோம்.றகுமான் வாளைக் கொண்டுவந்து என்னிடம் தந்தான்.

"இந்தா காக்கா வாளப் புடி, முதலாங் குறிச்சில இந்தா பக்கத்துலதாங் ராஜக்கோனின் குடும்பத்துட ஊடு இரிக்கி வா போவம், அங்க மூத்தவர் ராசதுர படுத்திருப்பாரு. அவர வெட்டுவம். ஆனா ஒரு கண்டிசன் நீதான் காக்கா . ராசதுரட கழுத்த வெட்டணும். நான் அவர்ர கால்ரெண்டையும் பிலமா புடிப்பன்,ஒரு கைய றகுமான் புடிப்பான், மறு கைய லத்தீபு புடிப்பான், தலைய ஹூசைன் புடிப்பான், நீ வேற ஒன்டும் செய்யத் தேவல்ல ராசதுரட கழுத்த மட்டும் வெட்டுனாப் போதும் வா காக்கா போவம்" என்று காக்காவிடம் ஒரு போடு போட்டேன்.

"இல்ல தம்பி என்ன உட்றுங்க- இது அச்சி அப்பிடிச் செல்லி என்ன செய்ற காக்கா வெட்டலுவா வேணும்- இது ஹூசைன் காக்கா சும்மா விளையாடாத நொட்டாம இந்தா வாளப் புடி தூக்கி தோழ்ல வெய்" என்று உரத்த குரலில் கோபமாகக் கூறினேன். "டேய்ய்" என்றும் அதட்டினேன். காக்கா வெலவெலத்துப் போனார்.

"தமுழனுகள வெட்டணும்" என்று சொன்ன வேளை இருந்த அச்சிக் காக்காவின் முகபாவனையை முன்னர் விபரித்திருந்தேன். இப்போது காக்காவைப் பார்க்கும் போது பரிதாபமாக இருந்தது. கண்ணீர் மல்க "என்ன மன்னிச்சிக்கங்க தம்பி இனி இப்புடியெல்லாஞ் செல்ல மாட்டன்" என்று சொன்ன அவரைப் பார்த்து" இப்பிடியெல்லாஞ் செல்லமாட்டன் என்டு செல்லவாணா "இப்புடியெல்லாம் யோசிக்கமாட்டன்' என்டு முடிவெடுக்கணும் காக்கா என்று கூறி,அவருக்கு அவரது அகச் சிந்தனையை மாற்றுகிற அரசியல் வகுப்பெடுக்கத் தொடங்கினோம். காலப் போக்கில் காக்கா எங்களின் ஆதரவாளராக மாறி போராட்ட வரலாற்றில் எமக்குப் பெரும் உதவிகளைப் புரிந்தார். இடையில் 90 களில் கொஞ்சக் காலம் 'ஹோம்கார்ட்டாக' வேலை செய்து வயிற்றைக் கழுவினாராயினும் எவரொருவருக்கும் "நோவினை" செய்தாரில்லை.

புரிந்துணர்வுள்ள சாமானியனான அச்சிக் காக்கா இன்றும் கூலித் தொழில் செய்பவராகவே உள்ளார்.

இன்னும் திருமணம் செய்யாது வாழ்கிறார். பின்னேரங்களில் தங்குமிடமாகவும் இரவுகளில் தூங்குமிடமாகவும் எனது ஏறாவூர் காரியாலயத்தையே பாவிக்கிறார். அண்மையில் காரியாலயத்தில் அவரைக் கண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

இது, சீனி மற்றும் அச்சி எனும் இரண்டு சாதாரண காக்காக்களின் கதையாயினும் இதில் இன்னும் எனக்குப் பல படிப்பினைகள் உண்டு.


சீனி 80 களின் இறுதியில் இனந்தெரியாதவர்கள் என்று வரலாற்றில் அழைக்கப்படுவோரால் கொல்லப்பட்டார்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரான இந்தப் பத்தாண்டுகளில் ஈஸ்டர் தாக்குதல்களின் பின் அக்காலம் போலவே இன்றும் யாரும் எதையும் செய்துவிட்டு பழி போடுவதற்கு- இப்போது ஒரு புதிய தலை கிடைத்திருக்கிறது.

**பின் குறிப்பு:-**

"பல இரகசியத் திட்டங்களுக்கு ஒன்று அல்லது சில செல்வாக்குள்ள மறைவான அமைப்புகள் காரணமாக இருக்கின்றது/ன என்ற நம்பிக்கை நவீன சதிக் கோட்பாடு எனப்படுகிறது". ஆயினும் பல சதிகளை எதிர்கொண்டு அழிவுகளைக் கண்ட அனுபவத்தையுடைய இலங்கை மக்கள் புதிதாக அரங்கேற்றப்படுகிற சதியையும் இனங்கண்டு முறியடித்தல் அவசியமாகும். இல்லையேல் அழிவு

நமது மக்களுக்கே அன்றி சதிகாரர்களுக்கல்ல. சதிகாரர்கள் தமது இலாபத்துக்காகவே சதிகளை அரங்கேற்றுகிறார்கள்.




# நகரத்தில் ஒரு நாள்!

பூம்பொழில் நகரத்தில் ஒரு சுண்டெலி வசித்து வந்தது. அது கர்வத்துடன் எப்போதும் சுய பெருமை பேசித்திரிந்தது. மற்ற எலிகளை மதிப்பதில்லை.

அதைக் கண்டால் மற்ற எலிகள் எல்லாம் ஒதுங்கி ஓடி விடும். அதனால், அந்த எலிக்கு நண்பர்களே இல்லை. வீடுகளில் உணவைத் திருடித் தின்று கொழுத்திருந்தது. ஒரு நாள் - பக்கத்து கிராமத்தில் வசித்த உறவினர் எலியை பார்க்கப் புறப்பட்டது. கிராமத்து எலிக்கு விதவிதமான உணவு கிடைக்கவில்லை. ஆனால், வயலில் கிடைத்த தானியங்களை உண்டு எளிமையாக வாழ்ந்தது. தன்னைப் பார்க்க வந்த நகர எலியை வரவேற்று, உபசரித்த கிராம எலி, பயறு, சோளம் போன்ற தானியங்களைக் கொடுத்தது. நகர எலிக்கு அந்த உணவு வெறுப்பை தந்தது.


'இந்த உணவை உண்டால் உடல் மெலிந்துவிடும் உன்னைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது. என்னுடன் நகரத்துக்கு வா. நல்ல சுவையான உணவு தருகிறேன்...' என்று அழைத்தது. அதை நம்பிய கிராம எலி , நகரத்துக்குப் புறப்பட்டது.

அவை, நகரில் ஒரு பெரிய வீட்டுக்குள் நுழைந்தன. அங்குள்ள ஒரு பொந்தில் தான் நகர எலி வசித்து வந்தது. அன்று மாலை வரை அலைந்தும் உணவு கிடைக்கவில்லை. பசிக் கொடுமையால் கிராம எலி வாடி வதங்கியது. 'கொஞ்சம் பொறுமையாக இரு. இரவில் வகை வகையாக உணவு கிடைக்கும்...' என்று, நம்பிக்கை ஊட்டியது நகர எலி. இரவு வந்தது. பொந்திலிருந்து வெளியேறிய எலிகள், அந்த வீட்டின் சமையல் அறைக்குள் நுழைந்தன. அங்கிருந்த உணவு வகைகளைப் பார்த்த கிராம எலி வியந்தது. அதன் நாவில், எச்சில் ஊறியது. எதைச் சாப்பிடுவது எனப் புரியாமல் தவித்த கிராம எலி, 'இந்த உணவின் மணமே, ருசியைக் காட்டுகிறது. நானும் உன்னுடன் தங்கி விடுகிறேன்...' என்றது. எலிகளின் சத்தம் கேட்டு சமையல்காரர் அங்கு வந்தார். அவை ஓட்டம் பிடித்தன. பொந்தின் அங்கே, ஒரு பூனை அமர்ந்திருந்தது. அதனால், உயிர் பிழைத்தால் போதும் எனத் தப்பி ஓடிய எலிகள், அன்று இரவும் உணவின்றித் தவித்தன. அலைந்து திரிந்தன.

அப்போது கிராம எலி, 'எளிய உணவு என்றாலும் கிராமத்தில் பயம் இல்லாமல் சாப்பிடலாம். அதுவே எனக்கு போதும்...' எனப் புலம்பியபடி ஓட்டம் பிடித்தது. அதைக் கேட்ட நகர எலி, சிந்திக்கத் தொடங்கியது. அதன் கர்வம் அடங்கியது. குட்டீஸ்... பகட்டு நிலையானது அல்ல எளிமையே நிலையானது. புரிந்து கொண்டீர்களா?

## ஓடி விளையாடு

# பட்டம் விடுவோம்



சிறுவர் விளையாட்டுக்களில் முக்கியமானது பட்டம் விடுதல். சாதாரண நூலால் மட்டுமே பட்டம் விடவேண்டும். ஆபத்தான நூல்களைப் பயன்படுத்தக்கூடாது.

**என்னென்ன தேவை?**

சதுர வடிவ காகிதம், 2 மெல்லிய தடிகள்; பசை, 2 அடி நீளமும் 2 அங்குல அகலமும் கொண்ட காகிதம், நூல்.


**எப்படிச் செய்வது?**

காகிதத்தின் எதிரெதிர் முனைகளைத் தொடும்படி ஒரு தடியைப் பசையால் ஒட்டுங்கள். இன்னொரு தடியை அரைவட்டமாக வளைத்து, மற்ற இருமுனைகளைத் தொடும்படி ஒட்டுங்கள். பசை காய்ந்து 2 தடிகளும் நன்றாக ஒட்டிக்கொண்ட பிறகு, இரு தடிகளும் சந்திக்கும் இடத்தில் நூலைக்கட்டுங்கள். வில் போன்று வளைக்கப்பட்ட பட்டத்தின் கீழ்ப்பகுதியில் 2 அடி அகலக் காகிதத்தை ஒட்டுங்கள். இதுதான் பட்டத்தின் வால்.

**எப்படி விளையாடுவது?**

மைதானத்துக்குச் சென்று பட்டத்தைக் காற்று வீசும் திசையை நோக்கி மேலே வீசுங்கள். கையால் சுண்டி சுண்டி , கொஞ்சம் கொஞ்சமாகப் பட்டத்தை மேலே உயர்த்திப் பறக்க விடுங்கள். உடன் விளையாடுவோரின் பட்டத்துடனோ, மரக்கிளைகளிலோ சிக்க விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். எவருடைய பட்டம் அதிக நேரம் உயரத்தில் பறக்கிறதோ அவரே வெற்றி பெற்றவர் ஆவார்.

**(இன்னும் விளையாடுவோம்)**



## அறியலாம் வாங்கோ

# இலங்கை



**ஜனாதிபதிகள்**

- ✘ வில்லியம் கொபல்லாவ ( 22 மே 1972 - 4 பெப்ரவரி 1978)
- ✘ ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனா ( 4 பெப்ரவரி 1978 - 2 ஜனவரி 1989)
- ✘ ரணசிங்க பிரேமதாசா ( 2 ஜனவரி 1989 - 1 மே 1993)
- ✘ டிங்கிரி பண்டா விஜயதுங்கா ( 2 மே 1993 - 12 நவம்பர் 1994)
- ✘ சந்திரிகா குமாரதுங்க (12 நவம்பர் 1994 - 19 நவம்பர் 2005)
- ✘ மகிந்த ராஜபக்ச (19 நவம்பர் 2005 - 2015 )
- ✘ தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன

# இரட்டை ஆயுள்

வல்லூறுக்கு இரட்டை ஆயுட் காலம் உள்ளது எனக்கூறப்படுகின்றது. அது உண்மைதான். ஆனால், சிலவகை வல்லூறுகளுக்கு மட்டுமே இந்த அபூர்வ சக்தி உள்ளது. ஆனால் இதற்காக அந்த வல்லூறு மிக அதிகமான துன்பத்தைச் சந்திக்க நேரிடும். 50 வயது கடந்த வல்லூறு, மலை உச்சிகளுக்குச் சென்று தனது அலகைப் பாறையில் மோதி, மோதி உடைத்துக் கொள்ளுமாம். இந்தச் சமயத்தில் அதனால் உணவு உண்ணவும் நீர் அருந்தவும் இயலாது. இப்படிப் பல நாட்கள் பட்டினி கிடக்க நேரிடும். மேலும் தனது சிறகுகளையும் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்த்துக் கொள்ளுமாம். இப்படிப் பல நாட்கள் கடந்த பின்பு (அதுவரை அந்த வல்லூறு உயிரோடு தாக்குப்பிடித்தால் மட்டுமே) புதிய அலகு முளைத்து வளருமாம். சிறகுகளும் புதிதாகத் தோன்றுமாம். இப்படிப் புதுப் பிறப்பு எடுக்கும் வல்லூறு தனது இரண்டாவது ஆயுட்காலத்தைத் தொடங்கி இன்னும் சில ஆண்டுகள் உயிரோடு வாழுமாம். ஆனால் இதற்கு அது படும் பாடு கொஞ்சநஞ்சமல்ல!



# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், போதுமான பணவரவு இருப்பதால் எளிதாகச் சமாளித்து விடுவீர்கள். நீண்ட நாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். நல்ல இடத்தில் வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்கக் காரியங்களில் முன்னேற்றமான போக்கு ஏற்படும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

## கடகம்

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெண் அல்லது பிள்ளையின் திருமணம் தொடர்பான முயற்சி சாதகமாக முடியும். அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

## துலாம்

பண வரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் தேவையறிந்து நண்பர்கள் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும். பழைய கடன்களைத் தந்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இடமாற்றம், பதவி மாற்றம் என்றாலும் அதனால் நன்மையே நடக்கும்.

## மகரம்

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, குதூகலம் குடிகொள்ளும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியைச் செய்து தருவார். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

## இடபம்

வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும். கணவன் – மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் வீண் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

## சிம்மம்

பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படாது. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தை வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் – மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

## விருச்சிகம்

குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

## கும்பம்

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாளாகச் செல்ல நினைத்த புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகள் வழியில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை சாதகமாக இருக்கும்.

## மிதுனம்

புதிய முயற்சிகள் எதையும் வார ஆரம்பத்திலேயே தொடங்கிவிடுவது நல்லது. நீண்ட நாளாக எதிர்பார்த்துக் காத்திருந்த சுப நிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு உண்டு. திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வாரப் பிற்பகுதியில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

## கன்னி

பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் சாத்தியம் உள்ளது. சகோதர வகையில் இருந்து வந்த கருத்துவேறுபாடுகளும் கசப்புணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

## தனுசு

கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் உங்களால் அதைச் சமாளித்துவிட முடியும். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் போது பொறுமை அவசியம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தீர்ந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் பிரசித்தி பெற்ற ஆலயங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

## மீனம்

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகள் வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதைச் சஞ்சலப் படுத்தும். சிலருக்குச் சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதித்தாலும் உடனே சரியாகிவிடும். கணவன் – மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தந்தையின் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.




# கல்முனைக் களேபரம்: செருப்பு சுமந்திரனுக்கா? கூட்டமைப்புக்கா?

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர்கள் மீது வீசி எதிர்ப்பை வெளியிட, சில பொருட்களும் அன்று மதியமே அங்கு கொண்டு செல்லப்பட்டிருந்தன.

இதேவேளை, உள்நாட்டலுவல்கள் அமைச்சு வழங்கும் வாக்குறுதி கடிதம், அன்று காலையே இணையங்களில் பரவியது. அதில் கல்முனையை 3 மாதத்தில் தரமுயர்த்த நடவடிக்கையெடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்திலிருந்து எதிர்ப்பு புள்ளியை கண்டுபிடிக்கும் கலந்துரையாடலை மேற்கொள்ள எதிர்ப்பாளர்களுக்கு போதிய அவகாசம் இருந்தது.

விநாயகமூர்த்தி முரளிதரனின் கட்சி பிரமுகர் ஒருவர், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கடிதப் பிரதியை மதியத்துக்கு முன்னதாக போராட்டக்காரர்களிடம் கொடுத்தார். உண்மையில் அந்த வாக்குறுதியை வெளியில் கசிய விடாமல், போராட்டக்காரர்களுக்கு மாத்திரமே முதன்முதலில் வெளிப்படுத்தியிருந்தால், இப்படியான களேபரம் நிகழ்ந்திருக்காது.

### யார் அந்த அம்மான்?

போராட்டக் களத்தில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒரு பகுதியினர் மதுபோதையில் இருந்தார்கள். அரசின் வாக்குறுதியுடன் பிரமுகர்கள் அங்கு வந்ததில் இருந்து, நிமிடத்துக்கு நிமிடம் "அம்மான் சொல்லுங்கோ" என அங்கிருந்த ஒருவர் யாரிடமோ ஆலோசனை பெற்றுக்கொண்டிருந்தார்.பிரமுகர்களுக்கான எதிர்ப்பைவடிவமைத்ததில் அவர் முக்கிய பங்குவகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த சக்திகளின் களத்தில் கூட்டமைப்பு பிரமுகர்கள் செல்லும்போது, அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது எதிர்பார்க்கக் கூடியதுதான். கல்முனை விவகாரத்தில் கூட்டமைப்பின் அணுகுமுறையில் விமர்சனங்கள் இருக்கும்போது, கூட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அரசியல் எதிராளிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆனால் அதை அவர்கள் நாகரிகமாக வெளிப்படுத்தியிருக்க வேண்டும். தாக்குதல் முயற்சிகளில் ஈடுபட்டது அநாகரிகமானது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணா, அவரது சொந்தத் தொகுதியில் கூட போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாதவர். அவரது நடவடிக்கையில் கணிசமான மக்கள் அதிருப்தியடைந்திருந்தனர். எனினும், அதற்காக அவர்கள் எல்லைமீறி நடந்ததில்லை.

குறித்த தினத்தன்று போராட்டத்தை முடித்து வைப்பதுதான் அமைச்சர் மனோ கணேசன் தரப்பின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனினும், கல்முனை ஒரு அரசியல் விவகாரமாக மாறிவிட்டதால்,அதை எதிர்த் தரப்புக்கள் பாவிப்பதால், அந்த விவகாரத்தின் சிறிய "கிரெடிட்"கூட கூட்டமைப்புக்கு சென்றுவிடக் கூடாதென்பதில் கூட்டமைப்பின் எதிர்த்தரப்புக்கள் உறுதியாக நின்றன. அதனால்தான் அவர்கள் போராட்டத்தை முடிக்காமல், எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.எனினும் அடுத்த நாளே, ஞானசார தேரர் வந்து சொன்னவுடன், விழுந்தடித்து போராட்டத்தை கைவிட்டனர்.

அண்மைய கிழக்கு விவகாரங்கள், தமது அரசியல் மீளெழுச்சிக்கு உதவியாகஅமைவதாக கூட்டமைப்பின் எதிர்த் தரப்புக்கள் கருதுகின்றன. கல்முனைச் சம்பவத்தை தனியே,"ஒட்டுக்குழுக்களின் நடவடிக்கை" என கட்சி விசுவாசிகள் சொல்வதை போலவும் வகைப்படுத்தமுடியாது. கூட்டமைப்புக்கு கல்முனையில் எதிர்ப்புத் தெரிவித்ததை, கிழக்கின் கட்சிசாராத பலர் "மகிழ்ச்சியாக" சமூக ஊடகங்களில் பகிர்ந்ததையும் அவதானிக்க வேண்டும்.

இந்த விவகாரம் உள்ளிட்ட பல விடயங்களில் கூட்டமைப்பு தன்னை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டிய புள்ளி அது.இல்லாவிடில் கிழக்கை கூட்டமைப்பு மறக்கவேண்டிய நிலையும் வந்துவிடலாம். ■

# அழகியல் அழகாக்கிய வாழ்க்கை!

(கடந்தவாரத் தொடர்ச்சி)

அந்த சமயத்தில் தான் லண்டன் மாடல் பொண்ணுக்கு நடந்த சோக சம்பவத்தை நாளிதழில் படிக்க நேர்ந்தது. அது மட்டுமல்ல அவளுக்கு சில அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்தி ஒத்துக் கொள்ளாமல் உடம்பில் அலர்ஜி ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் நிகழ்ந்திருந்தன. சட்டென்று அவள் மூளைக்குள் ஒரு ஐடியா மின்னலாய் தோன்றியது. பெயர் தெரியாத இந்த கெமிக்கல்களை பாவித்து உடலைப் புண்ணாக்குவதை விட்டுத்தள்ளி நம்முடைய பாரம்பரியமான ஆயுர்வேதத்தைக் கையில் எடுத்தால் என்ன என்று தோன்றியது.

அங்கிருந்து இந்தியா திரும்பியவள் எளிதில் நாம் கால் வைப்பதனாலும் அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றெண்ணி இயற்கை முறை ஆயர் வேதத்தை முழுமையாகக் கற்றுத் தெரிந்து கொண்டு தன் அப்பாவிடம் கடன் வாங்கி , மூலிகைகளைக்கொண்டு அழகு சாதனப் பொருட்கள் 1971 இல் தயாரிக்கத் தொடங்கினாள். "ஷானாஸ் ஹெர்பல்ஸ்" உருவானது. எந்தத் துறையானாலும் காலடி எடுத்து வைத்தும் வெற்றியை ருசிக்கமுடியாது. ஆரம்பத்தில் சருமப் பிரச்சினைகளுக்காக, அவளை நாடி வந்தவர்களை நன்கு பரிசோதித்து தான் தயாரித்த ஆயர்வேத கிறீம்களை அவர்களுக்கு வழங்கினாளே தவிர அதில் பெரிதாக வருமானம் கிடைக்கவில்லை. ஆனாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கிறதே என்ற மன நிறைவு அவளைத் திருப்திப்படுத்தியது. மக்களின் தேவை எது என்பது நன்கு புலப்பட்டது. சுமார் 48 வருடங்களுக்கு முன்னர் இந்தத் துறையில் ஜெயிப்பது அவ்வளவு இலகுவாயிருக்கவில்லை. காரணம் தங்கள் அழகின் மேல் பெரிதாக அக்கறையில்லாமல் இந்தப் பெண்கள் ஒரு பக்கம் அழகின் மேல் அதீத மோகம், கொண்டு இரசாயன கலவை அடங்கிய அழகு சாதனப் பொருட்களை கண்மூடித்தனமாக உபயோகிக்கும் பெண்கள் மறுபக்கம். இந்த இருபக்கத்துப் பெண்களையும் தன் பக்கம் இழுத்து வர நிறையப் பத்திரிகைகளில் ஆயர்வேத சிறப்பை கட்டுரைகளாக எழுதுவது, கருத்தரங்குகளை நடத்துவது, கடிதம் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வது என்று மிகவும் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது.




ஷானாஸ் புராக்ட்ஸ் பற்றிய அறிமுகத்தை வழங்கி கொஞ்சம் கொஞ்சமாக மிகப் பெரிய ஸ்டோர்களுக்கும் தன் தயாரிப்புக்களை விற்கத் தொடங்கினாள். தன்னுடைய ஆயர் வேதபொருட்கள் எல்லோரிடமும் கொண்டு சேர்க்க குடும்பத் தலவிகளைத்தான் குறிவைத்தான். இந்தியப் பெண்கள் குடும்பத்தை கவனித்துக் கொண்டு வீட்டிலிருந்தே சம்பாதிக்க அழகுக் கலை மாதிரியான ஒரு கைத்தொழில் தான் சரியான தெரிவு என்பதை உணர்ந்து கொண்டவள் தன் பிஸினஸை ஆரம்பித்த கையோடு "ஷமென்ஸ் வேர்ல்ட் இன்டர் நஷனல்:" என்ற பேனரின் கீழ் குடும்பத் தலைவிகளுக்கான அப்ரண்டிஸ் டிரெயினிங் கோர்ஸ் ஒன்றை ஆரம்பித்தாள். அழகுக் கலையில் ஆர்வமுள்ள பெண்களுக்கு சிறப்புப் பயிற்சி தரும் இந்த கோர்ஸை படிக்க வைத்து அவர்களின் ஊர்களில் தன்னுடைய தயாரிப்புக்களை விற்பதற்கான உரிமத்தை (FRANCHISE) வழங்கினாள். அவர்களும் ஆர்வத்துடன் அதில் இறங்க அவர்களுக்கும் வருமானம் கிடைத்தது. ஷானாஸின் தயாரிப்பும் புகழ் பெற ஆரம்பித்தது. இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தியும் அங்கு விஜயம் செய்து அவளை ஊக்கப்படுத்தி பாராட்டினார். இந்தியாவைத்தாண்டி உலகம் முழுவதும் தயாரிப்புக்கள் செல்லத் தொடங்கின. யூ.கே, யு.எஸ், ஜேர்மனி என்று உலகம் முழுக்க 400 இடங்களில் இவளது ஸ்டோர்கள், பியூட்டி கிளினிக்குகள், சலூன்,ஸ்பாக்கள் என்று கிளை பரப்பிக் கொண்டன. 2005இல் ஆண்டுகளுக்கான பிரத்தியேக சலூன்,ஸ்பாவை அறிமுகம் செய்தாலும் ஆரம்பித்த புதிதில் அந்த ஐடியா அவ்வளவாக கிளிக் ஆகவில்லை. ஆனாலும் கைவிடாது பொறுமையோடு காத்திருந்தாள். ஆனால் இப்பொழுது அதுவும் சக்கை போடு போடுகிறது. பெண்களுக்கானதைப் போல ஆண்களுக்கானதிலும் கூட்டம் நிரம்பி வழிகிறது. டெல்லியைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வரும் இவளது நிறுவனத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். 24 கேரட் கோல்ட், பேர்ள், ஜெம், டைமண்ட் பேஷியல்ஸ், அரோமா தெரபி போன்ற ஷானாஸின் அழகு சிகிச்சை முறைகள் வாடிக்கையாளர்களுக்கிடையே சூப்பர் ஹிட். பார்வை மற்றும் கேட்கும் திறன் இல்லாதவர்களுக்காக "ஷாமுதே" என்கிற இலவச அழகுப் பயிற்சி நிலையத்தையும் நடத்தி வருகிறவளுக்கு 2006 ம் ஆண்டு இந்திய நாட்டின் உயர் விருதான "பத்மஸ்ரீ" வழங்கப்பட்டது. வர்த்தக விளம்பரமின்றி தன்மானத்தோடு ஜெயித்ததற்காக யு.எஸ். பிஸினஸ் சஞ்சிகை 105 வருடங்களுக்கு பிறகு முதல்தடவையாக ஒரு பெண்ணுக்கு 1996இல் வேர்ல்ட்ஸ் கிறேடஸ்ட் என்டபிரனர்" தொழிற்றுறைக்கான மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டவள் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம், ஹார்வேர்ட் பிஸினஸ் ஸ்கூல், மாசா சூ செட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, லண்டன் ஸ்கூல் அப் எகனமிக்ஸ் போன்ற கல்வி நிலையங்களில் உரையாற்றியுள்தோடு அநேக விருதுகளையும் வாங்கிக் குவித்தாள். துரமான பொருட்களுக்காக விளம்பரம் எதற்கு? வார்த்தை ஜாலங்களோடு, பசப்பு மொழி பேசி, உண்மையில்லாத விளம்பரங்களைத் தயாரித்து எனது தயாரிப்புக்களை மக்களிடையே கொண்டுபோய்ச்சேர்க்கும் தேவை எனக்கு எப்போதும் இருந்ததில்லை என்கின்றாள் இந்த ஆயர்வேத அழகு கோடீஸ்வரி.

**கவிஞர் பிரேம்ராஜ்,**
**கொழும்பு**

## முதல் பெண்கள்

# வானத்தை வசப்படுத்தியவள்



ரஷ்ய நாட்டில் உள்ள போல்ஸ்நேயி கிராமத்தில், 1937 இல் வாலண்டினா என்ற பெண் பிறந்தாள். தந்தை, தறிப்பட்டறைத் தொழிலாளி. தாய் ஆசிரியை. பள்ளிப் படிப்பு முடித்தவுடன் இராணுவத்துக்குச் சீருடை தயாரிக்கும் தொழிற்சாலையில் சேர்ந்தாள் வாலண்டினா.

அங்கு பரசூட்டில் குதிக்கும் இராணுவப் பிரிவு வீரர்கள் ஒருமுறை வந்தனர். அவர்களுடன் நட்புக் கொண்ட வாலண்டினா, பரசூட்டில் குதிக்கப் பயிற்சி பெற்றாள். "எவ்வளவு உயரத்தில் இருந்தும் அநாயசமாக குதிக்கும் பெண்" என அனைவரையும் புருவம் உயர்த்த வைத்தாள். மாஸ்கோ சதுக்கத்தில் ரஷ்யப் புரட்சி தினக் கொண்டாட்டம், 1958 இல் நடந்தது. அப்போதைய ரஷ்ய அதிபர் முன்னிலையில் பல ஆயிரம் மீற்றர் உயரத்திலிருந்து பரசூட்டில் குதித்துச் சாதனை புரிந்தாள். இதனால், ரஷ்யா முழுவதும் வாலண்டினாவின் புகழ் பரவியது.

சோவியத் விண்வெளி ஆராய்ச்சிக் கூடப் பணிக்குத் தேர்வு பெற்றாள். அங்கு, ரொக்கெட் இயங்கு அறிவியலைக் கற்றுத் தேர்ந்தாள். பின், பூஜ்ய ஈர்ப்பு விசைக்கு ஏற்ப உடலைத் தயாராக்கும் பயற்சியை மேற்கொண்டாள். அப்போது, விண்வெளியில் பறந்து பூமியைச்சுற்றி வரும் ஆய்வுப' பணிக்குத் தேர்ந்தெடுத்துள்ளதாக ரஷ்ய இராணுவத் தலைமை தெரிவித்தது. இந்தப் பணியில் சேரக் குறைந்தபட்சம், 1,500 மணி நேரம் விமானம் ஓட்டிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மோட்டார் பொறியியலில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்வெளியில், யாருமற்ற இடத்தில், எதையும் சமாளிக்கும் திறனை வளர்த்திருக்க வேண்டும். இவற்றை எல்லாம் மனம் ஊன்றிக் கற்றார். விண்ணில் ஆராய்ச்சிக்குத் திட்டமிடுதல், நேர மேலாண்மைப் பயிற்சியையும் பெற்றார். உள்ளூர்வாசிகள், "ஒரு பெண்ணுக்கு இது தேவையா..."என்றனர். பெற்றோரும் கூடத் தயங்கினர். ஆனால், வாலண்டினாவின் மனமோ விண்ணில் பாயத் துடித்தது. கடும் பயிற்சிகளால் கனவு வென்றது. "ஆகாயத்திலும் கோட்டை கட்ட முடியும்" என்ற புது மொழியை உருவாக்கினார். வானம் வசப்படுமா என, 18 ஆம் நூற்றாண்டில் மனிதன் ஏங்கினான். புதிய முயற்சிகளை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள், 19 ஆம் நூற்றாண்டில் மேற்கொண்டனர். அதில் உச்சக்கட்டமாக, 1963 இல் விண்கலத்தில் பறந்த வாலண்டினா, பூமியை 48 முறை சுற்றி வந்தார். முதல் விண்வெளி வீராங்கனை என்ற சிறப்பையும் பெற்றார். உலகம் உள்ள வரை, அவர் புகழை அசைக்க முடியாது.

# கூந்தல் உதிர்வுக்கு தீர்வு தரும் வேம்பு!



வேப்ப மரம் மருத்துவக் குணம் கொண்டது. "வேப்பெண்ணெய் பொடுகுப் பிரச்சினையைக் குணப்படுத்தி கூந்தல் உதிர்வதைத் தடுக்கும். ஆயுர்வேதத்தின்படி, வேம்பு, சிகைக்காய், நெல்லி, ஆகியவை தலைமுடி சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்கக் கூடியவை என சொல்லப்படுகின்றது. தலைமுடி ஆரோக்கியத்துக்கு வேம்பில் இருக்கும் கொழுப்பு அமிலங்கள் மிகவும் பயனுடையதாக உள்ளன. முடி கொட்டும் பிரச்சினைகளுக்கு வேப்பம் இலை சரியான சிகிச்சை அளிக்கும். வேப்பம் நீர் உபயோகித்து தலை அலசுவதினால் தலை சுத்தம் ஆகும்.

வேப்பெண்ணெயைத் தலைமுடிக்குப் பயன்படுத்துவதனால், தலைப் பகுதியில் உள்ள இரத்த ஓட்டம் சீராகி முடி வளரும். வேப்பெ ண்ணெயுடன், தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய் கலந்து பயன்படுத்தினால், இன்னும் ஆரோக்கியமானது. வேப்பம் இலைப் பொடியுடன், நீர் சேர்த்து, அதனைத் தலையில் தேய்த்துவிட்டு, 30 நிமிடங்களுக்கு பிறகு கழுவினால் முடி வளரும்.

மால்ஸ்சேசியா என்ற பூஞ்சையால் ஏற்படும் பொடுகு பிரச்சினையால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். பொடுகு தலையில் இருக்கும் பிசுப்பிசுப்பான எண்ணெய்த் தேகத்தில் இருக்கும். பொடுகுப் பிரச்சினைகளால் அரிப்பு ஏற்படும். வேப்பெண்ணெய் உபயோகித்து, பொடுகுப் பிரச்சினையைப் போக்கலாம்.

தேங்காய் எண்ணெயுடன் வேப்ப இலைகள் சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். அதன் பின், சில எலுமிச்சை சாறுத் துளிகள் சேர்க்க வேண்டும். இந்தக் கலவையை தலைமுடியில் தேய்த்து, இரவு முழுவதும் ஊறவிட்டு, காலையில் கழுவ வேண்டும். இன்னொரு முறையாக, வேப்பம் பொடி மற்றும் இலை சேர்த்த கலவையைப் பயன்படுத்தி வந்தால் பொடுகுத் தொல்லை நீங்கிக் கூந்தல் வளரும்.



# அடங்கா தமிழன்

**அடிமைத் தமிழன்**

## விநோத வழக்கு விசாரணை

**அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர். சுந் தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகி றார் அடிமைத்தமிழன்.**



உரும்பராய் செல்லப்பா மீனாட்சி தம்பதிகளின் மூன்றாவது மகன் தான் சுந்தரலிங்கம். சுந்தரலிங்கத்தின் சகோதரர்கள் ஐவர். இவர்களை பஞ்சலிங்கங்கள் என அழைப்பர். இவர்கள் அனைவரும் சிறந்த கல்விமான்களாக விளங்கியதுடன் இலங்கையின் அதி உயர் பதவிகளையும் வகித்தனர். இவர்களில் மூத்தவர் பஞ்சலிங்கம் சிறந்த மருத்துவர். இரண்டாமவர் நாகலிங்கம் பிரதம நீதியரசராகவும் பதில் (Acting Governor General) ஆளுநராகவும் பதவி வகித்தார். பிரித்தானியர் காலத்தில் ஆளுநராக இருந்த சோல்பரி பிரபு விடுமுறையில் செல்லும் காலத்தில் நாகலிங்கம் தான் ஆளுநராகக் கடமையாற்றினார். மூன்றாவது மகன் தான் சுந்தரலிங்கம். நான்காவது மகன் தியாகலிங்கம் ராணி அப்புக்காத்து என (Queens Counsell) அழைக்கப்பட்ட சட்டத்தரணி அதாவது பிரிட்டன் நீதிமன்றத்திலும் இவர்கள் வழக்குகளில் ஆஜராகலாம். ஐந்தாவது மகன் அமிர்தலிங்கம், மீன்பிடி இலாகாவில் உயர் பதவி வகித்தவர்.

இலங்கை நீதித்துறை வரலாற்றில் முக்கியமான சம்பவம் ஒன்று இடம்பெற்றது. தென்னிலங்கையில் இடம்பெற்ற ஒரு வழக்கில் வாதி தரப்பு சட்டத்தரணியாக சுந்தரலிங்கமும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணியாக தியாகலிங்கமும் ஆஜரானார்கள். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதிபதியாக வந்தவர் வேறு யாருமல்ல, சுந்தரலிங்கத்தின் அண்ணன் நாகலிங்கம் தான். இந்த வழக்கு விசாரணையை பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. இறுதியில் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார் அண்ணன் நாகலிங்கம். இப்படி ஒரு சம்பவம் உலகில் வேறு எங்குமே நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்றே நம்புகிறேன்

# ஆசையில் ஒரு கொலை!

● புலனாய்வன்

“ஜிங்கிடி ஜிங்காலே மீனாட்சி, ஜிங்கிலி ஜிங்காலே, உலகம் போகிற போக்கப்பாரு தங்க மடிக்காலே” என்ற பாடலின் வரிகள்தான், நாட்டு நடப்புகளை பார்க்கும் போது ஞாபகத்துக்கு வருகின்றது. அந்தளவுக்கு கொலை, கொள்ளை சம்பவங்கள் மலிந்துபோயுள்ளன.

வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக அரங்கேற்றப்படும் கொலைகள், தெற்கில் மிக மிகச் சூட்சுமமாக இடம்பெறுகின்றன. எனினும், பொலிஸாரின் செயற்பாடுகளினால் முன்கூடியே கிடைக்கும் இரகசியத் தகவல்கள் மற்றும் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், தீட்டப்படும் திட்டங்கள் சுக்கு நூறாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை.

பல கொலைகள், எவ்விதமான தடயங்களுமின்றி இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடவேண்டும். எனினும், பல ஆண்டுகளுக்குப் பின்னர் கூட, சந்தேக நபர்களை கைதுசெய்த சம்பவங்களும் உள்ளன. வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தாயகப் பிரதேசங்களில், தமிழினத்தை சேர்ந்தவர்களின் மனங்களில் குரோதங்களை விதைக்கவேண்டுமென்பது சிங்களவர்களின் சிந்தனையாகும்.

அந்த சிந்தனைக்குத்தீனிபோட்டுவிடக் கூடாது. எனினும், தாயகத்தில் இடம்பெறும் சம்பவங்களில் சிலவற்றை பார்க்கும் போது, அச்சம் உச்சத்துக்கே சென்றுவிடுகின்றது.

**வெளியாட்களை விடவும் உறவுக்குள்ளேயே முரண்பாடுகள் முற்றிப்போய், ஒருவரையொருவர் பழிவாங்கும் அளவுக்கு சமூகம் சீர்கெட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாகவே, இலங்கையிலிருக்கும் தன்னுடைய மனைவியை, படுகொலை செய்வதற்கு, சுவிஸ்லாந்திலிருக்கும் கணவன், 30 இலட்சம் ரூபாவை கப்பமாக கொடுத்த சம்பவம் தெற்கில் இடம்பெற்றுள்ளது.**



யாழ்ப்பாணம், இருபாலை கந்தேவேள் பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் காணிப்பிரச்சினைக்காக பெரிய தந்தையினால், கழுத்தறுக்கப்பட்ட சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது சகோதரர் வயிற்றில் கத்திக் குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த சம்பவம் ஜூன் 17ஆம் திகதி இடம்பெற்றது.

இறுதியில், பெரியதந்தை கத்தியுடன் பொலிஸில் சரணடைந்துள்ளார். பெண்ணின் உயிரை மீட்டெடுக்கமுடியாது. அதேபோல, காயமடைந்தவரின் மனதில் விதைக்கப்பட்டவரின் வைராக்கியத்தை அழிக்கமுடியாது. அதுவும், எதிர்காலத்தில் ஏதாவதொரு குற்றச்செயலுக்கு வழி சமைத்துவிடும் என்பதில் ஐயமில்லை.

வெளியாட்களை விடவும் உறவுக்குள்ளேயே முரண்பாடுகள் முற்றிப்போய், ஒருவரையொருவர் பலிவாங்கும் அளவுக்கு சமூகம் சீர்கெட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாகவே, இலங்கையிலிருக்கும் தன்னுடைய மனைவியை, படுகொலை செய்வதற்கு, சுவிஸ்லாந்திலிருக்கும் கணவன், 30 இலட்சம் ரூபாவை கப்பமாக கொடுத்த சம்பவம் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

காலி, ஹபராதுவ பிரதேசத்தில் வர்த்தகம் செய்யும் 35 வயதான பெண்ணையே இவ்வாறு படுகொலை செய்வதற்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது. பெண்ணை போட்டுத்தள்ளுவதற்கு கப்பம் வாங்கிய, பெண்ணொருவரையும் ஆணையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவ்விருவரும் காலி மேலதிக நீதவான் பவித்ரா சஞ்ஜீவனி பத்திரண முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டர். அப்போது, அவ்விருவரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

படுகொலைச் செய்வதற்காக ஒப்பந்தத்தை பொறுப்பேற்றுக்கொண்ட அந்தப் பெண், அம்பலாங்கொடையில் வாடகையில் வீட்டில் இருப்பவர். படுகொலையைச் செய்யுமாறு ஒப்படைக்கப்பட்ட நபர், ஹிக்கடுவையைச் சேர்ந்தவர் ஆவார். அவர், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்ட அந்தப் பெண், ஏற்கனவே படுகொலை செய்யப்பட்ட ரத்கம பிரதேச சபையின் தலைவர் மனோஜ் மெண்டிசின் உறவினராவார்.

அந்தப் பெண், பெலுன்கல என்னுமிடத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின் சந்தேகநபர் என்றும் அறிய முடிந்துள்ளது.

ஒரு வியாபார நிலையத்துக்கு அடிக்கொரு தடவை வந்துசென்ற, இவ்விருவரும், அங்கிருந்த பெண்ணையும் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். அவர்களின் நடத்தையில் சந்தேகம் கொண்ட வர்த்தக நிலையத்தைச் சேர்ந்த பெண், பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே அவ்விருவரையும் கைது செய்த பொலிஸார், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளிலேயே மேற்படி விவகாரம் அம்பலமானது.

வர்த்தக நிலையத்தை முன்னெடுத்து செல்லும் அந்த நபர், கணவனிடமிருந்து பிரிந்து வாழ்ந்துவருகின்றனர். கணவன், சுவிஸ்லர்ந்தில் வாழ்ந்துவருகின்றார். கணவனுக்கு, இப்பிரதேசத்தில் ஹோட்டலொன்றை நடத்திச் செல்லவேண்டும்.

அதற்கு முதலில் தன்னுடைய மனைவியை படுகொலைச் செய்யவேண்டும். அதற்கான திட்டத்தை வகுத்தார். ஏற்கெனவே, தன்னுடைய பழகிய அந்த பெண்ணுடன் தொடர்பை ஏற்படுத்திய சுவிஸ்லாந்து கணவன், திட்டத்தை புட்டுப் புட்டு வைத்தார்.

அதற்கான பேரம் பேசல்கள் இடம்பெற்றன. மொத்தமாக 30 இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் நிறைவானது. மனைவியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, ஏற்கனவே எடுத்திருந்த படங்களை, சுவிஸ்லாந்து கணவன் அனுப்பிவைத்துள்ளார். பதிலுக்கு, கடைக்குச் சென்று, அவருடைய மனைவியுடன் எடுத்திருந்த படங்களை சந்தேக நபரான அந்தப் பெண், அனுப்பிவைத்துள்ளார்.

**பல கொலைகள், எவ்விதமான தடயங்களுமின்றி இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடவேண்டும். எனினும், பல ஆண்டுகளுக்குப் பின்னர் கூட, சந்தேக நபர்களை கைது செய்த சம்பவங்களும் உள்ளன. வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தாயக பிரதேசங்களில், தமிழினத்தை சேர்ந்தவர்களின் மனங்களில் குரோதங்களை விதைக்க வேண்டுமென்பது சிங்களவர்களின் சிந்தனையாகும்.**

இருபக்கங்களும்உறுதியாகிவிட்டதை அடுத்து, சந்தேக நபரான பெண்ணின் வங்கிக் கணக்குக்கு 20 இலட்சம் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது. அதனை பொலிஸாரினால் மீளப்பெறமுடியாது. திட்டம் தீட்டியவரும்கொல்லப்படவிருந்தவரும் தப்பித்துகொண்டனர். பணத்துக்காக ஆசைப்பட்டவர்கள் இருவரும் சிக்கி, கம்பி எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

ஆசைகளை அடக்கி வாழ்ந்தாலே, பல்வேறான பிரச்சினைகளுக்குத் தீர்வை கண்டுவிடலாம் இல்லையேல் படுகொலைகள் மலிந்த பூமியாகவே எமது மண்ணும் பெயரிடப்பட்டுவிடும். எமது கலாசாரத்தின் மகிமையைப் பேணி, வாழ்ந்தால் வாழ்வினில் வசந்தம் ஏற்படும். ■




கேள்வி: பெண்கள் டி.வி.சீரியல் பார்ப்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் என்கிறார்களே. உன் கருத்து என்ன கைப்புள்ள?

**கே.யாதவன், சாவகச்சேரி**

பதில் - என் மனைவி டி.வி.சீரியல் பார்த்துக் கொண்டிருந்த போது "நல்லா பசிக்குது சாப்பாடு போடு" என்றேன். உடனே அவளும் வெறும் தட்ட எடுத்திட்டு வந்து வச்சா, 5 நிமிசம் ஆச்சி.10 நிமிசம் ஆச்சி. சீரியல் பாத்துக்கொண்டிருந்தவள் திடீரென்று என் காலி தட்ட பாத்திட்டு கேட்டா பார் கேள்வி. "சாப்பிட்டா, காலி தட்ட எடுத்திட்டுப் போய் கழுவப் போடாம அப்பிடி என்ன பண்றீங்க"என்றாள். நான் ஷாக்காயிட்டேன்.

கேள்வி: எனக்கு இன்னும் சரியா மீசை வரவில்லை என்ன செய்யலாம்?

**கே.தர்ஷன், மல்லாகம்**

பதில் - ஒரு பொண்ண லவ் பண்ணிப்பாரு. மீசை என்ன தாடியே முளைக்கும்.

கேள்வி: குடும்பச் சண்டை எதில் தொடங்குகிறது எப்போது முடிகிறது?

**எம்.சிவராஜா, நெல்லியடி**

பதில் - குடும்பச் சண்டை பட்டாசு வெடிப்பது போலத் தான் . நாம் காதைப் பொத்தி கண்ணை மூடித் தயாராக இருக்கும் போது புஸ்ஸெனப் போய்விடும். ஆனால் அசால்ட்டாக இருக்கும் போது டமார் என வெடித்து நம் காதையே கிழித்து விடும்.

கேள்வி: பணம் இருந்தாலும் தன்னடக்கமாக பேசுவது யார்?

**எஸ்.ரஞ்சினி, புத்தூர்**

பதில் - ATM மெஷின்

கேள்வி: காதல் இல்லாத உலகம் எப்பிடியிருக்கும்?

**கே.கேசவன், அரியாலை**

பதில் - செல் போன்கள் ஃபுல் சார்ஜோடு இருக்கும். பேஸ்புக் லைக், கமென்ட் இல்லாமல் இருக்கும். வாட்ஸ் அப் எப்போதும் ப்ரீயாக காத்து வாங்கும்.

கேள்வி: அடிக்கும் வெயிலைப்பற்றி நாலு வரியில ஒரு ஜாலி கவிதை சொல்லுமைய்யா?

**கே.சிவாஜினி, இணுவில்**

பதில் - நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. நமக்கெல்லாம் வருஷம் பூரா சூடு காசு இருந்தா ஏ.சி வாங்கிப் போடு இல்லன்னா சூரியனை திட்டி விட்டு இழுத்து போத்தாம படு.

கேள்வி: கணவனின் ஆயுசு வேண்டி என் போன்ற பெண்கள் எந்த விரதம் இருந்தா நல்லது கைப்புள்ள?

**எஸ்.வரலக்ஷ்மி, நல்லூர்**

பதில் - புருஷனின் ஆயுள் நீடிக்க சுமங்கலி விரதம்,திருவாதிரை விரதம் இருந்து பிரியோசனம் இல்ல. வாயை மூடி மௌன விரதம் இருந்து பாருங்க . நூறு வருஷம் என்ன ஆயிரம் வருஷம் புருஷன் உயிரோடு இருப்பான்.

கேள்வி: ஆண்களை அழ வைக்க என்ன செய்யலாம் கைப்புள்ள?

**சி. பிரியா, வவுனியா**

பதில் - கல்யாணம் ஆகி 5 வ்ருஷம் கழிச்சும் சிரித்துக்கொண்டிருக்கும் ஆண்களைக் கதறி அழவைக்க "நல்லாருக்கியா" என்ற என்ற ஒரு கேள்வியே போதும். ஆள விடுடா சாமின்னு ஓடிடுவான்.

# சூரியன் மறையாத அதிசய தீவு!




ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வேயில் உள்ள சொம்மாரோயி என்ற தீவு காலம் மற்றும் நேர அடிப்படையில் உலகின் மற்றைய பகுதிகளை விட முற்றிலும் மாறுபட்டதாகும். ஆர்க்டிக் வட்டத்தின் வடக்கில் அமைந்துள்ள இந்த தீவில் நவம்பரில் இருந்து ஜனவரி வரை இருட்டாகவே இருக்கும். அதே போல் ஆண்டில் சில மாதங்கள் இதற்கு நேர் எதிரானதாக இருக்கும். அதன்படி தற்போது அந்தத் தீவில் சூரியன் மறையாத காலம். அங்கு கடந்த மாதம் 18 ஆம் திகதி சூரியன் மறையாத காலகட்டம் தொடங்கியது. ஜூலை மாதம் 26 ஆம் திகதி வரை 69 நாட்களுக்கு இப்படித்தான் இருக்கும். இதனால் அங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிறையவே மாறியிருக்கிறது.

தங்களது வழக்கமான நேரத்தைக் கடைப்பிடித்தல் முறைகளிலிருந்தும் விடுபடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதனால், அவர்கள் தங்களது தீவை உலகின் முதல் நேரமற்ற மண்டலமாக அறிவிக்குமாறு கோரிக்கை வைத்துள்ளனர்.


# பொலிஸ் 'ரோபோ'

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ஹண்டிங்டன் பூங்காவில், பொதுமக்கள் குற்றச்செயலில் ஈடுபடுவதைக் கண்காணிக்க 'ஹெச்.பி ரோபோ காப்' என்கிற ரோபோ பணியமர்த்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் பொது இடங்களில் குற்றச் செயல்கள் நடப்பதைக் கண்காணிக்கவும், தடுக்கவும் பொலிஸார் தொடர் ரோந்துப் பணியில் ஈடுவது வழக்கம். அண்மைக் காலமாக இந்தப் பணியில் பொலிஸாருக்குப் பதில் புதிய, புதிய தொழில்நுட்பங்களை அமெரிக்கா பயன்படுத்தத் தொடங்கி உள்ளது. அந்தவகையில், கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ஹண்டிங்டன் பூங்காவில், பொதுமக்கள் குற்றச் செயலில் ஈடுபடுவதைக் கண்காணிக்கவும், தரவுகளை சேகரித்துப் பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை எடுக்கவும், 'ஹெச்.பி ரோபோகாப்' என்கிற ரோபோ பணியமர்த்தப்பட்டு உள்ளது.

இது 4 புறமும் உயர் தொழில்நுட்பக் கமராக்கள் பொருத்தப்பட்டு சுமார் 5-6 அடி உயரத்தில் வடிவமைக்கப்பட்டுளளது. பூங்காவின் நடைபாதையில் மக்களோடு மக்களாகச் சுற்றி ரோந்துப் பணியில் ஈடுபடும் இந்த ரோபோ 'கொஞ்சம் வழிவிடுங்கள்' மற்றும் 'இன்றைய தினம் நல்ல நாளாக அமையட்டும்' போன்ற வார்த்தைகளைக் கூறி, பூங்காவுக்கு வருவோரைக் கவர்ந்து வருகிறது.




# பிரமிப்பூட்டும் நீச்சல்குளம்



பிரபல தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான 55 அடுக்கு மாடிக் கட்டடத்தின் உச்சியில், திகைப்பூட்டும் விதத்தில் 360 பாகைக் கோணத்தில் ஒரு நீச்சல்குளம் அமைக்கப்படவுள்ளது. இந்த நீச்சல்குளத்தின் நான்கு புறச் சுவர்களும் கண்ணாடியால் ஆக்கப்படவுள்ளன. இந்த நீச்சல் குளம் அதிக உயரத்தில் இருந்தபடி லண்டனின் அழகை ரசித்துக்கொண்டே குளிக்கும் வகையில் உருவாக்கப்படவுள்ளது.

இந்த நீச்சல்குளத்தின் கீழே சுழலும் படிக்கட்டுகள் அமைக்கப்படும். அவை நீச்சல்குளத்தின் அடிப்பகுதியில் இருந்து மக்களைக் கொண்டு செல்லும் எனவும், குளத்தில் இருந்து வெளியேற நினைப்பவர்களும் ஒரு பொத்தானை அழுத்தினால், அந்தப் படிக்கட்டுகள் மீண்டும் வந்து அழைத்துச் செல்லும் எனவும் நீச்சல்குள வடிவமைப்பாளார்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றன. இவை பார்ப்பவர்களை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்துள்ளன.

# கொடியைக் கொண்டாடிய அரசு!

உலகிலேயே 800 ஆண்டுகள் பழமையான மற்றும் பயன்பாட்டில் உள்ள கொடியைப் பாதுகாத்து, டென்மார்க் நாட்டு அரசு கொண்டாடியுள்ளது. டென்மார்க்நாட்டின்தலைநகர்கோப்பென்கன்னில் இருந்து ஒரு மணித்தியால பயணத்தில் உள்ளது வாடின்போ. இங்கு 800 ஆண்டுகள் பழமையான கொடி உள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கொடி உருவாக்கப்பட்டு, 800 ஆண்டுகள் நிறைவடைந்த தினத்தையொட்டி விழா நடைபெற்றது. இந்த விழா அரசு முறைப்படி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். அப்பகுதியில் உள்ள மிக உயரிய கம்பத்தில் இக்கொடி ஏற்றப்பட்டது. இந்த விழாவில் டென்மார்க்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த மக்கள் கலந்துகொண்டு கோலாகலமாக கொண்டாடினர்.

டென்மார்க்கின் வரலாற்றினை பிரதிபலிக்கும் வகையில் அப்பகுதியில் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டது.





# வீடு போலவே காட்டையும் பாதுகாப்போம்

கருணாகரன்

“கடந்த மாதம் முழுவதும் காட்டில் வேலை” என்று பதிவிட்டிருந்தேன். கூடவே சில படங்களையும்.

இதைப்பார்த்த நண்பர் ஒருவர், “காட்டிலே வேலை என்றால் நீங்களென்ன வனவளப்பிரிவில் வேலை பார்க்கிறீங்களா?” என்று கேட்டார். அவருடைய தந்தையார் ஒரு காலம் காட்டு இலாகாவில் வேலை செய்தாராம். அந்த அனுபவத்தைக் கொண்டு கேட்டிருந்தார். “எந்தக் காட்டில் இருக்கிறீங்கள்?” என்றும் விசாரித்திருந்தார். தந்தையோடு சில காடுகளில் இளவயதில் பயணம் செய்த அனுபவத்தையும் பகிர்ந்திருந்தார்.

“நான் வனவளத்திணைக்களத்தில் வேலை செய்யவில்லை. எங்கள் காணிகளெல்லாம் காடாகி விட்டன. யுத்தத்தினால் இடம்பெயர்ந்து ஊரை விட்டுப் போய் விட்டோம். முப்பது ஆண்டுகளாக ஊரிலே ஆட்களில்லை. அதனால் வளவு, தோட்டம், தோட்டத்துக்குப் பின்னே இருந்த காடு எல்லாம் முழுக் காடாகி விட்டன. இப்போது இந்தக் காட்டை என்ன செய்வதென்று தெரியவில்லை.” எனப் பதிலளித்தேன்.

உண்மையில் இந்தக் காட்டை என்ன செய்வதென்று இப்போது வரையில் புரியவில்லை.

காட்டை அழித்தால்தான் மறுபடியும் அங்கே வீட்டைக் கட்டலாம். தென்னைகளையும் கனிதரும் மரங்களையும் நாட்டலாம். முன்பு ஒரு பத்து ஏக்கரில் மரமுந்திரித் தோப்பிருந்தது. அதை மீளவும் உண்டாக்கலாம்.

இப்படி மறுபடியும் நாங்களிருந்த இடத்தை உயிர்ப்பூட்டலாம். எங்கள் முன்னோரிருந்த பூர்வீக இடத்தை இப்படியே கைவிட முடியாது. அது அவர்களைக் கைவிட்டதற்குச் சமனாகி விடுமல்லவா.

ஆனால் இதற்கெல்லாம் நிறையப் பணமும் வேணும். காட்டை அழித்து வீட்டுக்கான நிலத்தை உருவாக்குவதென்றால் சாதாரணமான விசயமல்ல. அதுவும் இந்தப் பெருங்காட்டை.

அதை விட இப்படிச் செழித்திருக்கும் காட்டை அழிப்பது என்றால்... நூற்றுக்கணக்கான பனைகளையும் ஆயிரக்கணக்கான வடலிகளையும் அழிக்க வேணும். கூடவே முதிரை, பாலை, வீரை, கருங்காலி, சுரவுன்னை, கொக்கட்டி, நெடுநாரை, ஒதி, நாவல், சடவக்கு, விண்ணாங்கு, செம்மணத்தி, வெள்ளுருவை, காயா, பங்கிராய், கெட்டுக்கண்ணி, பனிக்கை என்று ஏராளம் மரங்களையும் சேர்த்து அழிக்க வேணும். மரங்கள் மட்டுமா அழியும். அங்கே உள்ள ஆயிரக்கணக்கான கொடிகளும் செடிகளும். கூடவே அத்தனை மிருகங்களையும் அங்கே குடியிருக்கும் பறவைகளையும் சேர்த்தே.

காட்டை அழித்து விட்டு அங்கே தென்னையை நடலாம். மா, பலா, கொய்யா என்று பழ மரங்களையும் நட்டு விடலாம். ஏன் முந்திரித்தோப்பைக் கூடப் பத்து வருசத்தில் பெரிதாகவே உண்டாக்கிக் கொள்ளலாம். இப்படியொரு காட்டை மறுபடியும் உருவாக்கவே முடியாது.

அப்படிப் பார்த்தால் யுத்தம் வந்தது கூட ஒரு வகையில் நல்லது போலத் தோன்றியது. இல்லையென்றால் இப்படி இந்தக் காடு செழித்திருக்காது. இப்படிப் பாதுகாப்பாக இருந்திருக்காது.

நாங்கள் ஊரிலிருந்தபோதே பாதிக்காடு அழிக்கப்பட்டு விட்டது. தோட்டத்துக்குக் காணி போதாது என்று தோட்டத்துக்குப் பின்புறமிருந்த காட்டில் ஐந்து ஏக்கருக்குமேலானதை வெட்டினோம். முழுக் காட்டையும் வெட்ட வேண்டாம் என்றார் ஐயா. வீட்டுக்குப் பக்கத்தில் எப்போதும் காடிருக்க வேணும். விறகு எடுப்பதற்கோ, கம்பு, தடி, கப்பு போன்றவற்றை வெட்டுவதற்கோ எங்களுக்கென்று காடு வேணும் என்பது அவருடைய கொள்கை. வீடும் வளவும் தோட்டமும் எப்படித் தேவையோ அதைப்போலக் காடும் வேணும் என்பது அவருடைய நிலைப்பாடு.

காட்டிலே தேவைக்கு அதிகமாக தடியையோ மரத்தையோ யாராவது வெட்டினால் போதும், ஒரு வாரத்துக்கு மேலாக இதைப்பற்றித் திரும்பத் திரும்பக் குறைப்பட்டுக் கொண்டேயிருப்பார். அந்தளவுக்குக் காட்டில் கண்ணும் கருத்துமாக இருந்தார் ஐயா. ஐயா மட்டுமல்ல, பொதுவாகவே ஊரில் பலரும் அப்படித்தான் காடுகளைக் காத்தனர். காட்டிலே காடேறி வைரவரோ பேச்சியம்மனோ காவல் தெய்வங்காக இருந்ததும் இதற்காகத்தான்.

அவர்களைப் பொறுத்தவரை காடும் ஒரு செல்வமே. மாட்டுக்கட்டைக்கு, வேலிக்கம்புக்கு, அலம்பலுக்கு, வீட்டுத்தடிக்கு, விறகுக்கு, கம்பிக்கட்டைக்கு, ஆட்டுப்படலுக்கு, சூடடிக்கும்போது பயன்படுத்தும் வேலைகாரன் கம்புக்கு, களங்கண்டி வலைக்கான தடிக்கு, குழைக்கு எனப் பலதுக்கும் காடு உதவியது. இதைவிட வேட்டைக்கு, தேனுக்கு, மூலிகைக் கொடிகளுக்கும் கிழங்குகளுக்கும் என எல்லாவற்றுக்கும் காடே ஆதாரம்.

இதையெல்லாம் எண்ணும்போது காட்டை அழிப்பதற்கு மனசே வருகுதில்லை. ஆனாலும் இப்படிக் காடாகவே விட்டு விட முடியுமா? அக்கம் பக்கத்துக் காணிக்காரர்களெல்லாம் தங்களுடைய காணிகளைத் துப்புரவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஊரில் எல்லோரும் காட்டை அழித்து ஊராக்கும்போது நாங்கள் மட்டும் காடாக எங்கள் காணியை வைத்திருந்தால் எப்படியிருக்கும்?

இந்த நிலையில் என்ன முடிவெடுப்பது என்றே தெரியாமலிருந்தபோதுதான் ஒரு நண்பர் சொன்னார், “பேசாமல் காட்டையே வளருங்கள். எல்லோரும்காட்டை அழித்துக்கொண்டிருக்கும்போது நீங்கள் காட்டைப் பேணுவது எதிர்காலத்தில் கவனத்திற்குரியதாக இருக்கும். இந்தக் காட்டைக் கொஞ்சம் நவீனப்படுத்தி வளருங்கள். அதற்கான ஆலோசனைகளை நீங்கள் இணையத்தில் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கென்றே படித்துப் பட்டம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஆலோசகர்கள் கூட உண்டு” என்று.

இதுவும் ஒரு நல்ல யோசினைதான். ஆனால், இதை அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குப் புரிய வைக்க வேணுமே. இல்லையென்றால் அவர்களுடைய பயிர்களை எங்கள் காட்டிலிருக்கும் மானும் பன்றியும் முயலும் அழித்து விடும் என்பார்கள். தாங்கள் கோழியோ ஆடோ மாடோ வளர்த்தால் மரநாயும் நரியும் வெருகும் காட்டுப் பூனையும் சருகு புலியும் சிறுத்தையும் பிடித்துத்தின்று விடும் என்று குற்றம் சாட்டுவார்கள். இதற்கெல்லாம் ஒரு சரியான ஏற்பாடு செய்ய வேணும். இதற்கான தகுந்த ஏற்பாடுகள் கிடைக்குமென்றால் காட்டை வளர்ப்பது நல்லதே. வேணுமென்றால் ஒரு தொகுதியை மட்டும் அழித்து அதிலே வீட்டையும் சிறிய அளவில் ஒரு பண்ணையையும் உருவாக்கிக் கொண்டு மிஞ்சியதையெல்லாம் காடாகவே வளர்க்கலாம்தான். அது ஒரு மாற்றாகவும் இருக்கும்.

காட்டு இலாகாவில் வேலை செய்த தந்தையாரோடு காட்டில் திரிந்த நண்பரைப்போல எனக்கும் சிறு வயதிலிருந்தே காடுலாவிய அனுபவங்களுண்டு. பாலுச்சித்தப்பாவோடு உடும்பு வேட்டைக்காக. கனகண்ணையோடு பரண் வேட்டைக்காக. கதிரவேலு மாமாவோடு முயல்வேட்டைக்காக. இரத்தினசிங்கம் அண்ணையோட தேனெடுக்கவென. வெடிகார வைரமுத்துவோடு ஒளியில் மறைந்திருந்து வேட்டையாடுவதற்காக. குஞ்சனோடு நண்பர்களாகச் சேர்ந்த கலைப்பு வேட்டைக்காக. பெருமாளோடு பாலைப்பழத்துக்காக. ஐயாவோடு தடிகள் வெட்டுவதற்காக. அம்பியோடும் மோகனோடும் வீரைப் பழம், சுரவுன்னம்பழம், முரலிப்பழம் என்று காட்டுப்பழங்களைத் தின்பதற்காக.. சுந்தரியோடு வேலி கட்டுவதற்கான மாங்கொடியை வலிப்பதற்காக.... இப்படி எவ்வளவோ விசயங்களுக்காக காட்டில் திரிந்திருக்கிறேன்.

எதை நாம் கேட்டாலும் அதைத் தரக்கூடிய மாதிரியே காடிருந்தது. அதனால்தான் வீட்டுக்குப் பின்புறமாக, தோட்டத்துக்கு அப்பால் ஒரு துண்டுக் காட்டை ஒவ்வொருவரும் பேணி வந்திருந்தார்கள். அப்படியென்றால் அதைக் காடு சார்ந்த வாழ்க்கை அது என்று சொல்லலாமா? நிச்சயமாக. அது முல்லை நில வாழ்க்கையே.

எங்கள் காட்டில் தடி வெட்டிப்போகவும் வேறு பொருட்களை எடுத்துச் செல்லவும் என்று யாழ்ப்பாணத்திலிருந்தே வண்டில் கட்டி வருவார்கள். மூன்று நான்கு வண்டில்களில் வருகின்றவர்கள், மண்வெட்டிப் பிடி, மாட்டுக்குக் கம்பு, மாட்டுக்கட்டை, ஆட்டுக்கட்டைக்கான தடிகள், குடிலுக்கான வரிச்சும் கம்புத்தடிகளும் கப்பும் என்றெல்லாம் வெட்டித் தோதாக்கி வண்டியில் ஏற்றிக் கொண்டு போவார்கள். இதைவிட மூலிகைக் கொடிகளையும் கிழங்குகளையும் சேகரித்துக் கொண்டு போவோரும் உண்டு.

காட்டைப்பார்த்துக் கொண்டே நின்றேன்.

இதை அழித்தால் இனி இந்தப் பகுதியில் காடே இருக்கப்போவதில்லை. சுற்றயல் முழுவதும் வெட்டை வெளியாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் காட்டை விட காணி நிலமே முக்கியமாகி விட்டது. தென்னை, மரமுந்திரி, பழமரங்கள், முருங்கைச் செடி எனக் கிசு கிசுவென வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மழையைப்பற்றி, மண்ணின் வளத்தைப்பற்றி, பறவைகள், விலங்குகளைப் பற்றி, நம்முடைய மண்ணின் மரங்கள், செடி, கொடிகளைப்பற்றிய கவலைகள் எவருக்குமே இல்லாமற் போய் விட்டது.

எனவேதான் இதில் எதைச் செய்யலாம்? காட்டை வளர்ப்பதா? அழிப்பதா? என்று இன்னும் முடிவெடுக்க முடியாமல் இருக்கிறேன்.

இந்தச் சூழலில் காட்டிலே அப்படியென்ன வேலை? என்று நீங்கள் கேட்கலாம். காட்டிலேதான் ஆயிரம் வேலைகளுண்டு. காட்டை அழிப்பதென்றாலும் ஆயிரம் வேலையுண்டு. காட்டை வளர்ப்பதென்றாலும் ஆயிரமுண்டு.

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்கின்றார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




# பால்டயஸ் பாதிரியாரின் டயறி

**புங்குடுதீவு**

காரைதீவில் இருந்து புறப்பட்டு புங்குடுதீவை அடையலாம். காரைதீவில் பாம்புகள் அதிகம். காரைதீவில் வைத்து எமது கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புகின்றோம். புங்குடுதீவு காரைதீவைவிட நன்றாக உள்ளது. புங்குடுதீவு சற்று பெரிய தீவு. இங்குள்ள மக்கள் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களைவிட உயரமானவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு மான், மரை, காடை, கௌதாரி, மயில்கள் என்பன காணப்படுகின்றன. இங்குள்ள தேவாலயத்தில் 200 மாணவர்களும் 800 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

**அனலைதீவு**

அனலைதீவு சிறிய தீவு. இங்குள்ள தேவாலயத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் போர்த்துக்கேய பெண்மணி ஒருவர் இருந்துள்ளார். இவர் இருப்பதற்கு என கதிரை ஒன்று இருந்துள்ளது. இந்தக்கதிரையில் இரண்டு பேர் ஒரே நேரத்தில் வசதியாக அமரலாம்.

**நயினாதீவு**

நயினாதீவில் நரிகள் காணப்படுகின்றன. நயினாதீவும் ஒரு சிறிய தீவு. நயினாதீவு வாசிகள் ஏமாற்றி பிழைப்பவர்களாக (சுத்துமாத்துக்காரராக) காணப்படுகின்றனர். இங்குள்ள பிராமணர்கள் சிலரை நான் மதம் மாற்றினேன். இங்கு சிறிய தேவாலயம் ஒன்று உள்ளது. இந்த தேவாலயத்தில் 70 மாணவர்களும் 300 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

**நெடுந்தீவு**

நெடுந்தீவுவை போர்த்துக்கேசர் பசுத்தீவு என அழைத்தனர். இங்கு ஒரு பசுமாடு ஒரு றிக்ஸ் டொலருக்கு அல்லது நாலு டச்சு ஷில்லிங்கிற்கு வாங்கலாம். இங்கு பெரிய இன பசுக்களும், எருதுக்களும், ஆடுகளும் காணப்படுகின்றன. போர்த்துக்கேசர் குதிரைகளைக் கொண்டுவந்து இங்கு வைத்து வளர்த்துள்ளனர். இந்த குதிரைகள் அளவில் சிறிய இனக் குதிரைகளாக காணப்படுகின்றன. ஆனால் பலம் வாய்ந்த குதிரைகளாகும்.

நெடுந்தீவில் வறுமை தாண்டவம் ஆடுகிறது. இங்குள்ள மக்கள் உணவுக்காக பெரிதும் கஷ்டப்படுகின்றனர். நாங்கள் இந்தத் தீவில் எட்டு நாட்கள் தங்கியிருந்தோம். அந்த எட்டு நாட்களும் எமக்கு தேவையான உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இங்கு போர்த்துக்கேசரின் கோட்டை ஒன்று சிதிலமடைந்த நிலையில் உள்ளது. இங்குள்ள தேவாலயத்தில் 190 மாணவர்களும் 900 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

1663ஆண்டு எனது சகபாடி ஜோன் பிரெய்ல் (John Breyl) கிழக்கிந்திய கம்பனியின் யாழ்ப்பாண ஆளுநர் ஜெனரல் மற்சூக்கருக்கு (Maatzuyker) பின்வரும் அறிக்கையை அனுப்பினார். யாழ்ப்பாண பட்டினத்தில் தற்போது 15013 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். இவர்கள் அனைவருமே உள்ளூர் வாசிகள். (மன்னார், வன்னி என்பன உள்ளடக்கப்படவில்லை.)

**(வரும்)**

# ஆள் பிடிப்பு

தீவகத்தில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள், தேர்தலில் போட்டியிட்டவர்கள், மற்றும் ஆதரவாளர்களை அழைத்து, தமிழ் அரசு கட்சி நடத்திய கூட்டம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதேச அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் என்ற போர்வையில் நடந்த இந்த கூட்டம், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான ரெலோ, புளொட்டின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்களை உடைத்து எடுக்கும் நடவடிக்கையென விமர்சனம் கிளம்பியுள்ளது. தேர்தல்கள் நெருங்குவதால், தமிழ் அரசு கட்சி மீண்டும் முருங்கை மரத்தில் ஏற ஆரம்பிக்கிறது என ஏனைய கட்சிப் பிரமுகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தீவகத்தில் உள்ள கூட்டமைப்பின் பிரதேசசபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் வேலணையிலுள்ள தமிழ் அரசுக் கட்சி செயற்பாட்டாளரின் வீட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். பிரதேச அபிவிருத்திதொடர்பான கலந்துரையாடல் என்றே அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், அங்கு பிரதேச அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் இடம்பெறவில்லை. தவிரவும், கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் என்றால், கூட்டமைப்பு பிரமுகர்கள் வருவார்கள் என எதிர்பார்த்து சென்றவர்களிற்கு அதிர்ச்சியே காத்திருந்தது. மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், பொ.கனகசபாபதி ஆகிய தமிழ் அரசுக் கட்சி பிரமுகர்கள் மாத்திரமே வந்திருந்தனர்.

அபிவிருத்தி தொடர்பான கூட்டமென குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது கூட்டமைப்புக்குள் உள்ள தீராத வியாதியான கட்சிகளிலிருந்து ஆட்களை உருவியெடுக்கும் அசிங்கமான தேர்தல் அரசியல் வேலையே இடம்பெற்றதாக கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் விசனம் தெரிவித்தனர்.

கூட்டத்தில் உரையாற்றிய மாவை சேனாதிராசா, விரைவில் ஜனாதிபதி தேர்தல் வரவுள்ளதாகவும், மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருட நடுப்பகுதியிலேயே வருமென்றும், ஜனாதிபதித் தேர்தலில்கோத்தபாய போட்டியிடவுள்ளதால் கவனமாக இருக்க வேண்டுமென்றும், தேர்தல் வரும்போது யாரைஆதரிப்பதென அறிவிப்பதாகவும் கூறினார்.


அத்துடன், பிரதேசத்தின் தமிழ் அரசுக்கட்சியின் தொகுதிக்கிளைத் தலைவருடன் கலந்துரையாடி செயற்படுமாறு அறிவுறுத்தினார்.

பங்காளிக கட்சிகளின் உறுப்பினர்களிற்கு இப்படி அறிவிப்பது அரசியல் நாகரிகமில்லாத போதும், தேர்தல் நெருங்குவதால் மாவை வழக்கமான அரசியலில் இறங்கியிருக்கிறார்.

இதேவேளை, ஊர்காவற்துறை தொகுதிக்கிளை பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ள இருவரும் ரெலோவில் இருந்து உருவியெடுக்கப்பட்ட உறுப்பினர்களே. 1000 ரூபா அங்கத்துவப்பணம் செலுத்தி, ரெலோவின் அடிப்படை உறுப்பினர்களாக உள்ள கனகையா, பெனடிக்ற் ஆகியோரே தொகுதிக்கிளை தலைவர், செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்துக்கு கட்சிக்குள் எதிர்ப்பு எழுந்தது. குறித்த கூட்டத்தில் தமிழ் அரசு கட்சி உறுப்பினர்கள் சிலர் எழுந்து ஆக்ரோசமாக முறுகுப்பட்டனர். கட்சியின் செயற்பாட்டாளர்களாக தாம் இருக்கும் நிலையில், தமக்கு தெரியாமல் எப்படி இந்த நியமனம் கொடுக்கலாமென அவர்கள் கட்சி பிரமுகர்களுடன் ஆக்ரோசமாக வாதிட்டனர். இந்த மல்லுக்கட்டல் நீண்டநேரம் நடைபெற்றது.

கூட்டமைப்பின் அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் என்றபோதும், பங்காளிக்கட்சிகளின் அந்தப்பகுதி முக்கியஸ்தர்கள் அழைக்கப்படாதது, கட்சிகளை உடைக்கும் செயற்பாடா என பங்காளிக்கட்சிகள் விசனம் தெரிவித்துள்ளன.




# அச்சுறுத்தல்

கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம், அவர்கள் கடமைக்கு அறிக்கையிடாத காரணத்தை கோரி அவர்களிடம் தன்னிலை விளக்கமளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆரணி தவபாலன் கடிதம் அனுப்பியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்களுடாக அவசரம் எனக் குறிப்பிட்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் விளக்கம் கோரல் எனத் தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் கடந்த 20.06.2019 அன்று கடமைக்கு அறிக்கையிடாத சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தன்னிலை விளக்கத்தினை வலய தலைமையக முகாமையாளருக்கு ஊடாக பெற்று தங்களுக்கு ஊடாக அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோத்தர்கள் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்துடன் இணைந்து இராஜாங்க அமைச்சர் விஜயகலா சமுர்த்தி உத்தியோகத்தர்களை தரக் குறைவாக பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அதில் கலந்து கொண்டவர்களை அச்சுறுத்தவே இப்படிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாம்.

தனது அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சர் விஜயகலா, தம்மை அச்சுறுத்த முயல்வதாகசமுர்த்தி உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். ■

எதிரொலி
Ethiroli

26 ஜூன்- 02 ஜூலை 2019

# மீண்டெழுந்த சிங்கம்




● ஆடுகளன்

1996, 2014 இந்த இரு ஆண்டுகளும் உலகக் கிண்ண வெற்றியால் மகிழ்ந்து புரண்ட நாடு இலங்கை.

ஆனால், நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்க முன்னரும் சரி, இலங்கை அணியின் 6ஆவது ஆட்டத்தில், 232 ஓட்டங்களைப் பெற்றது வரையும் சரி, இனி இலங்கை அணியால் எந்தவொரு வெற்றியையும் கொடுக்கவோ, அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பைப் பெறவோ முடியாது என மிரண்ட நாடும் இலங்கைதான்.

ஆனால், நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை எதிர்கொண்ட 6ஆவது ஆட்டத்தில் இலங்கை அணி அடித்த அந்த 232 ஓட்டங்கள்தான் அந்த அணிக்கே ஒரு திருப்பமாக அமையும் என்பதை எவரும் எதிர்பார்த்திருக்கமுடியாது.

இங்கிலாந்துக்கு எதிராகக் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்துக்கு முன்னர் இலங்கை அணி, நியூஸிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளிடம் தோல்வியைச் சந்தித்தது. ஆப்கானிஸ்தானை வீழ்த்தி வெற்றிபெற்றது. பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுடனான ஆட்டத்தை மழை குழப்பியதால் ஆட முடியாமல்போனது.

இந்நிலையில்தான் இங்கிலாந்து அணியை எதிர்கொண்டது இலங்கை. அந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இலங்கை, அவிஸ்க பெர்னாண்டோ (49), குசல் மெண்டிஸ் (46), மத்யூஸ் (85*) ஆகியோரின் பொறுமையான ஆட்டம் கைகொடுக்க, 50 ஓவர்கள் வரை தாக்குப்பிடித்து, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 232 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 233 ஓட்டங்களை வெறும் 30 ஓவர்களுக்குள் எட்டிவிடும் என இங்கிலாந்து மீது நம்பிக்கை வைத்து, வர்ணனையாளர்களும் தம் பாட்டுக்கு இலங்கை அணியைக் காலுக்குள் போட்டு மிதிக்காத குறையாக வாங்கு வாங்கென்று வாங்கிக் கொண்டிருந்தனர். இதற்கு அவர்கள் கூறிய காரணமும் சரியாகத்தான் இருந்தது. நடப்புத் தொடரில் களமிறங்கியுள்ள இங்கிலாந்து அணியுடன் ஒப்பிடும்போது இலங்கை அணி வெறும் கத்துக்குட்டியாகவே தெரிந்தமைதான் அவர்களின் விவாதத்துக்குக் காரணம். ஆனால், களத்தில் எதிர்பாராத பல திருப்பங்கள் நிகழ்ந்தன.

ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்துக்கு மலிங்க வைத்தார் ஆப்பு. ஓர் ஓட்டத்துடன் முதல் விக்கெட்டும், 26ஆவது ஓட்டத்தில் 2ஆவது விக்கெட்டும் மலிங்கவால் சரிக்கப்பட்டன. முதல் பத்து ஓவர்களுக்குள் இங்கிலாந்தைக் கதிகலங்க வைத்த மலிங்க இல்லாத இடைவெளியில் இங்கிலாந்தின் விக்கெட்டுகள் தப்பின. இந்த இடைவெளியில் இங்கிலாந்து 73 ஓட்டங்களுடன் இருந்தபோது மோர்கனின் விக்கெட்டை மாத்திரமே இலங்கையால் சரிக்க முடிந்தது. அந்த விக்கெட்டைச் சாய்த்தவர் உதான.

எனினும், பின்னர் இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையின் உயர்வையும், வீழாத விக்கெட்டுகளையும் உற்று நோக்கி - சற்று நிதானித்த இலங்கை அணித்தலைவர், 30 ஓவர்கள் கடந்த நிலையில் 31ஆவது ஓவரை மலிங்கவின் கையில் கொடுத்தார். அதுவரை அதிரடி காட்டிக்கொண்டிருந்த இங்கிலாந்தின் ரூட்டுக்கு வெளியே போவதற்கான 'ரூட்'டைக் காட்டினார் மலிங்க. 31ஆவது ஓவரின் 3ஆவது பந்தில் மலிங்கவால் ரூட் வீழ்த்தப்பட்டார்.

பின்னர் அதிரடியாக ஆடக்கூடிய பட்லரையும் 32.3 ஆவது ஓவரில் 'பெவிலியன்' அனுப்பி வைத்தார் மலிங்க. அவர் வீழ்த்திய இந்த இரு விக்கெட்டுகளால் ஆட்டம் பரபரப்பானது. தொடர்ந்து தனஞ்சய டி சில்வா, உதான, பிரதீப் ஆகியோரும் பின்வரிசை வீரர்களை வரிசையாக அனுப்ப இங்கிலாந்து அணி, 47 ஓவர்களில் 212 ஓட்டங்களுடன் ஆட்டத்தை அடக்கிக்கொண்டது.

ஆட்டத்தின் கடைசிவரை இலங்கையை மிரட்டிக்கொண்டிருந்த ஸ்ரோக் 82 ஓட்டங்களுடன் இறுமிக்கொண்டிருந்தார். எனினும், மறுமுனையில் ஆடியவர்களை சந்தர்ப்பம் பார்த்து இலங்கை வீரர்கள் வீழ்த்தியமையால் இலங்கைக்கு வெற்றி கிடைத்தது.

1996, 2014ஆம் ஆண்டுகளில் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றதுபோன்றே தற்போது இங்கிலாந்தை இலங்கை வென்றபோது, கொண்டாடப்பட்டுள்ளது.

இந்த வெற்றியையடுத்து, இலங்கை அணி மீதான பழைய பார்வை திரும்பியுள்ளது. இங்கிலாந்தை மடக்கிய இலங்கை, அரையிறுதிக்கான வாய்ப்பை இன்னும் தக்கவைத்துக்கொண்டுள்ளதுடன், புத்துணர்வையும் பெற்றுள்ளது.

இனிவரும் ஆட்டங்களில், மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் இந்திய அணிகளை வீழ்த்தினால் இலங்கையின் அரையிறுதிக்கான வாய்ப்பும் உறுதியாகிவிடும். மாறாக ஏதேனும் ஓர் ஆட்டத்தில் தோற்றால், ஏனைய அணிகளின் வெற்றி, தோல்விகளை எதிர்பார்த்து நிற்கவேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, இலங்கை அணி விளையாடும் ஆட்டம் மட்டுமின்றி ஏனைய அணிகள் விளையாடும் ஒவ்வொரு ஆட்டத்தின் வெற்றி, தோல்விகளும் இலங்கை அணிக்கு முக்கியமானதாகவே அமையப்போகிறது. திறமையும், அதிஷ்டமும் கைகொடுக்கும்போது இலங்கையின் அரையிறுதி வாய்ப்பும் தானாக வந்துசேரும். ■



இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.